# இதயநிலா

IDHAYANILA

January 2012 Vol 2 Issue 7 Rs:10 /- Annual subscription Rs:120

ரூ.10

## உமா பாலாகுமார்




# உள்ளம் கவர் கள்வன்




பெரும் ஆரவாரத்துடனிருந்த ஈரோடு ரயில் நிலையத்தில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த கூட்டத்தில், ஒரு தேவதையாய் தனித்து ஒளிர்ந்தாள் லயம்ருதா!

இயல்பாகத் தன் தாய் பாமாவுடன் பேசியபடி வந்தவளை, பல விழிகள் இயங்க மறந்து அளவெடுத்ததை, அவள் அறியவில்லை!

டிரைவர் நீலகண்டன், இரு சூட்கேஸ்களுடன் முன்னே செல்ல, ட்ராலிகேஸை இழுத்தபடி ஆர்வத்துடன் சுற்றும் முற்றும் பார்த்து ரசித்தபடி நடந்து கொண்டிருந்தாள் லயம்ருதா! வெகு உயரமாக ஒரு பளிங்குச் சிற்ப மங்கையின் வடிவுடன், நீண்ட கூந்தல் இடைதொட, வானுலக தேவதை போல் வந்தவளை, பெருமையுடன் ரகசியமாக அளவெடுத்தது பாமாவின் பார்வை!

# உள்ளங்கவர் கள்வன்

"சின்னம்மா.... நீங்க நம்ம ஊருக்கு வந்து ரெண்டு வருஷம் இருக்குமில்லையாம்மா?"

பாமாவிடம் கேட்டபடி, ஒருவிதப் பாசத்துடன் லயம்ருதாவையே நோக்கிய நீலகண்டனின் விழிகள் கசிய, அருகிலிருந்த பூவரச மரத்துப் பறவைகள்.... ரயிலின் பெருமூச்சால் அதிர்ந்து, ஒருவித தாள லயத்துடன் பறக்க ஆரம்பித்தன!

அவர் பாமாவின் சிறு வயதிலிருந்தே அவர்கள் வீட்டில் டிரைவராக இருப்பவரென்பதால், குழந்தையிலிருந்தே அவளை அறிவார்!

அவரைக் கலைத்தது பாமாவின் குரல்!

"ஆமாம் அண்ணன்! ப்ராஜெக்ட், ப்ரெண்ட்ஸோட டூர், அது இதுன்னு இவ வரமாட்டேன்னுட்டா! இந்த வருஷம் படிப்பை முடிச்சாச்சே....

"அதுவும் அம்மா பேத்தியைப் பாக்கணும்னு ரொம்ப நச்சரித்ததாலே வந்திருக்கா!" மகளையே வாஞ்சையுடன் நோக்கியபடி முடித்தார்.

"பாட்டி தாத்தா எப்படி இருக்காங்க அங்கிள்!"

ஆர்வத்துடன் விசாரித்தவளிடம், "நல்லா இருக்காங்கம்மா! ஒரே பேத்தியாச்சே! உங்களைப் பாக்கத்தான் ஆசையா காத்திட்டிருக்காங்க! இன்னிக்கு விடிகாலையிலேயே எழுந்திரிச்சி என்னை எழுப்பி விட்டாங்கன்னா பாத்துக்கங்களேன்!" விரிந்த புன்னகையுடன் பகர்ந்தார் அவர்.

பிறகு காரில் ஏறிக் கிளம்பியபோது பழைய ஞாபகங்கள் அணிவகுக்க, பாமா மௌனமாக வர, இருபுறமும் தெரிந்த பசுமையை விழிகளால் வருடி ரசித்தபடி வந்தாள் லயா!

கோபிச்செட்டிப்பாளையத்தை அடுத்த கிராமத்திற்குள் கார் நுழைந்தபோது, பாட்டியை இன்னும் சிறிது நேரத்தில் பார்க்கப் போகின்ற பரவசம் அவளிடம்!

வழி முழுவதும் பசுமையாய்த் தெரிந்த வயல்வெளிகளும் தென்னந்தோப்பும் எப்போதும் போல் அவர்களை வரவேற்க, புதிதாய் வெள்ளையடித்து இரண்டடுக்கில் பெரிதாகத் தெரிந்த அந்தப் பண்ணை வீட்டின் வாசலில், வழுக்கி நின்றது அந்தக் கார்!

வாசல் வெராந்தாவிலேயே பிரம்பு நாற்காலியில் அமர்ந்து குரோஷாவில் ஏதோ பின்னியப்டி அமர்ந்திருந்த அவளுடைய பாட்டி நந்தாவும், தாத்தா கனக சபாபதியும் ஆவலுடன் வேகமாக எழுந்து வந்தனர்.

"பாட்டி!" என்று உற்சாகக் கூச்சலுடன் ஓடிச் சென்று அவர் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டாள் லயா!

மறுபுறம் கனகசபாபதியும் அவளை அணைத்துக் கொள்ள, மெல்லப் படியேறி வந்து அவர்களை நமஸ்கரித்தார் பாமா.

"இப்போ வந்து கொஞ்சுவா! ரெண்டு வருஷமா ஏன் வரலைன்னு கேளுங்கம்மா!"

சலுகையுடன் கூறியபடி தந்தையிடம் பேச ஆரம்பித்தார் பாமா!

"முதல்லே உள்ளே வாங்க! என் பேத்தி சரியான காரணமில்லாம எதுவும் செய்யமாட்டா! படிப்பு, ப்ராஜெக்ட்டுன்னு ஏதாவது இருந்திருக்கும்.... ஏன்டா.... அப்படித்தானே?"

வாஞ்சையுடன் கேட்டவரிடம், "ஆமாம் பாட்டிம்மா! இந்த அம்மாவுக்கு அதெல்லாம் எங்கே தெரியப் போகுது! நீங்க வாங்க.... நாம உள்ளே போய் என் பேவரைட் ப்ரெண்டைப் பாக்கலாம்...."

ஆவலுடன் துள்ளி ஓடியவளையே, விழிகள் கசியப் பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, தாத்தாவுக்கு மிகவும் உற்சாகமாய்!

அவர்கள் உள்ளே வரும்போதே, கூடத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்து காலை வீசி உற்சாகத்துடன் ஆட ஆரம்பித்திருந்தாள் அவள்!



மகாவீரர் அலெக்ஸ்சாண்டர் உலகப் படையெடுப்பைத் துவங்கும்போது அவருடைய சொத்துக்களை நண்பர் களுக்குப் பரிசளித்தார். இதனை கண்ட அவரது உயிர் நண்பரான பொர்டிகர்ஸ் அலெக்ஸ்சாண்டரைப் பார்த்து எல்லாவற்றையும் மற்றவர்களுக்குத் தந்துவிட்டால் உன்னிடம் மீதமுள்ளது என்ன? என்று கேட்க உடனே அலெக்ஸ்சாண்டர் பெருமிதத்துடன் 'நம்பிக்கை' என்று பதில் சொன்னாராம்.

– ஜி.ராஜேஸ்வரி, திண்டிவனம்.

''ம்.... உன் ஃபெரண்டைப் பாத்தாச்சா? நீ வராம அதுவும் இத்தனை நாளா அமைதியா சத்தமே இல்லாம ஆடாம இருந்தது! இந்துதான் எப்பவாவது அதிலே உக்காருவா!''

பாட்டி கூறியதும் வியப்புடன் நிமிர்ந்தவன், ''அது யாரு பாட்டி இந்து?'' ஆர்வத்துடன் கேட்டான்.

''ஒரு வருஷமா இங்கே உங்க பாட்டிக்கு கிடைச்சிருக்கறே புது ப்ரெண்ட்! நம்ம ஊர் வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிசரோட பொண்ணு!''

தாத்தா விளக்க, ''ஓ....'' என்றபடி யோசனையுடன் ஊஞ்சலில் வேகமாக ஆடத் துவங்கிய லயா. இந்த வருடம்தான் 'பிஇ' கம்ப்யூட்டர் சயின்ஸ் முடிந்திருக்கிறாள்

▶ ▶ ▶

பிறகு குளித்துவிட்டு அனைவரும் சாப்பிட்டு முடித்ததும், ''பாட்டிம்மா! நான் நம்ம தோப்புக்குப் போயிட்டு வரேன்!'' என்றபடிக் கிளம்பியவளை ''பத்திரம்'' என்று அனுப்பி வைத்தார் நந்தா.

ஜின்ஸும், டாப்புமாய் தோப்புப் பாதையில் நடக்க ஆரம்பித்தவளை, எப்போதும் போல், பலவித முகம் காட்டாப் பட்சிகளின் கூவல்கள் பெரிதும் கவர்ந்தன!

இயற்கையை வியந்து ரசித்தபடி நடந்து கொண்டிருந்தவளை ஈர்த்தது, ஹலோ... என்ற குரல்!

மெதுவாக அந்த சப்தம் வந்த திக்கில் சென்றபோது, சிறு அணில் குஞ்சு ஒன்று மரத்திலிருந்து கீழே விழுந்து தவிப்புடன் பரிதாபக் குரல் எழுப்பி கத்திக் கொண்டிருந்தது.

எங்கிருந்து விழுந்திருக்கும் என்று பார்த்தவளை சற்று உயரத்தில் தெரிந்த மரப்பொந்து ஒன்று கவர்ந்தது.

அதற்குள்ளிருந்து பெரிய அணிலொன்று தவிப்புடன் இங்கும் அங்கும் ஓட, அதுதான் இதன் இருப்பிடம் என்று புரிய, அந்தச் சிறு அணிலை மெதுவாகக் கையில் எடுத்தாள்!

மெல்லிய பஞ்சுப் பொதியாய் மிருதுவாயிருந்த அந்த சிறு ஜீவன் மெல்ல நடுங்க, மரத்திலிருந்த கிளையில் கால் வைத்து ஏற ஆரம்பித்தாள்.

அப்படி அவள் ஏறுவதையே வியப்புடன் கவனித்தபடி அருகே வந்தது, ஒரு உருவம்.



மெதுவாக அந்த அணிலைப் பொந்தில் வைத்துவிட்டுத் திரும்பியவளின் கால் வழுக்க.... மெல்லச் சரிந்தபோது மென்மையான இரு கரங்கள் அவளைத் தாங்கிப் பிடித்து நிறுத்தின.

விழப்போகிறோம் என்ற சிறு விதிர்ப்புடன் சரிய ஆரம்பித்தவள், பாதுகாப்பாக கீழிறங்கிய திருப்தியுடன் திரும்பினாள்.

அங்கு புன்னகையுடன் சுடிதாரில் நின்றிருந்த அந்தப் பெண்ணிடம் ''தேங்க்யூ சோ மச்'' வியப்புடன் கூறினாள்.

''ம்.... வெல்கம்! என்ன அப்படி ஆச்சர்யமாய் பாக்கறீங்க? இவ எப்படி நம்மை இவ்வளவு லாவகமாப் பிடிச்சி இறக்கிவிட்டான்னா?''

அந்தப் பெண் கேட்க, சிறு முறுவலுடன் தலையசைத்தவளையே குறும்புடன் நோக்கினாள் அவள்.

''இந்த சீனிலே சினிமாவா இருந்தா, ஸ்டைலா ஒரு ஹீரோ வந்திருப்பாரு! ப்ச்.... நிஜமில்லையா....? அதான் நான் வந்திட்டேன்!''

குலுங்கிச் சிரித்தபடி அவள் கூற, அவளுடைய பேச்சும் மெல்லிய குறும்பும், லயாவை உடனே கவர்ந்தன.

ஏனோ.... அவளை உடனே பிடித்துப் போனது லயாவிற்கு!

''ம்.... தேங்க்யூ அகெய்ன்! என்பேரு லயா!''

அவள் முடிப்பதற்குள் தடுத்தவள், ''மீதியை நான் சொல்லவா? உங்க பேரு லயம்ருதா.... பிஇ முடிச்சிருக்கீங்க! நந்தா பாட்டியோட செல்லப்பேத்தி.... சரியா?'' வெகுளியாகக் கேட்டாள்.

உடனே ஆமெனத் தலையசைத்தவள், ''நீ இந்துதானே!'' குறும்புடன் தலை சரித்து வினவினாள்.

''அப்பாடா! சிஐடி மாதிரிக் கண்டு பிடிச்சிட்டீங்க! பாட்டிக்கு எப்ப பாத்தாலும் உங்க பேச்சுதான்!''

''ஆனா, அவங்க சொன்னப்ப நான் கூட கொஞ்சம் ஓவரா பில்டப்



குழந்தையின்
பசி
தீர்த்தாள்...
தன் பசி
தானே
அடங்கியது
தாய்மைக்கு...

பண்றாங்களோன்னு நினைச்சேன்.... ஆனா இல்லை! உண்மையிலேயே ரொம்ப அழகா இருக்கீங்க!'' ரசித்துப் பாராட்டினாள்.

''ஏய்.... கிண்டல்தானே! அப்புறம்.... இந்த வாங்க போங்க எல்லாம் வேண்டாமே! நாம்தான் ப்ரெண்ட்ஸாயாச்சே.... லயா, போன்னே சொல்லலாம்!''

''தேங்க்யூ! கிண்டல் இல்லை! நீங்க தேவதை மாதிரி இருப்பீங்கன்னு பாட்டி சொல்லுவாங்க.... போட்டோவை விட நீங்க நேரிலே இன்னும் அழகு!''

''ஓ.... இங்கே ஏதாவது ''மிஸ் கோபிச்செட்டிப்பாளையம்'' நடக்குதா என்ன? நீயும் ரொம்ப அழகுதான்.... ஆனா அமைதியான அழகு! எனிவே தேங்க்ஸ்! நீ என்ன படிக்கிறே இந்து?''

ஆர்வத்துடன் விழிகள் பளபளக்க வினவியவளை, இந்துவுக்கும் மிகவும் பிடித்துப் போனது!

- **தினமும் 1 டம்ளர் திராட்சை சாறு அருந்திவர அல்சர் குணமாகும்.**
- **அகத்தி கீரை வாரம் 2 முறை சாப்பிட்டால் குடல் புண் குணமாகும்.**
- **புளி, உப்பு கரைத்து கொதிக்க வைத்து ஆறிய பின் பற்றுபோட சுளுக்கு ரத்தக்கட்டு குணமாகும்.**
- **சாதம் வடித்த கஞ்சியை வியர்க்குரு மீது தடவி வர வியர்க்குரு மறையும்.**

**பழ.கவிதா சிவமணி, புன்செய்ப்புளியம்பட்டி**

'பிகாம் முடிச்சிருக்கேன்.... 'கரெஸ்லே எம்காம் படிக்கலாம்னு இருக்கேன்.... அப்பா கல்யாணம் பண்ணனும்கிறாங்க! பாப்போம்!''

''ப்ச்.... எனக்கும் இப்போ கல்யாணத்துல எல்லாம் ஆர்வமில்லை! நிறைய படிக்கணும்! வேலை பாக்கணும்.... நம்ம சொந்தக் கால்லே நிக்கணும்.... சுய சம்பாத்யம் இருக்கணும்.... நிறைய கனவுகள் இருக்கு! பாப்போம்....'' விழிகள் மின்ன முடித்தாள் லயா!

''பாட்டி உன்னைப் பத்தி ரொம்பப் பெருமையா சொல்லுவாங்க! நீ ஸ்கூல் ஃப்ரஸ்ட்டாமே! காலேஜிலேயும் டிஸ்டிங்ஷன் ஸ்டுடண்டாம்! நான் கொஞ்சம் ஆவரேஜ் தான்!''

அவள் குரல் சிறிது இறங்கியிருக்க, ''இந்து! படிப்பைவிட கத்துக்க நிறைய விஷயங்கள் இருக்கு! எனக்கு அதிலெல்லாம் ஆர்வமில்லை!



மத்த விஷயங்கள்லே நீ என்னைவிட டேலண்ட்டா இருக்கலாம்!''

இதமாகக் கூறியவளையே, பெருமிதத்துடன் நோக்கினாள் இந்து.

''உதாரணத்துக்கு, எனக்கு சமைக்கத் தெரியாது! வீட்டைப் பாத்துக்கத் தெரியாது! அம்மாதான் எல்லாம்! இதிலே நான் ரொம்ப வீக்!''

''இந்த லீவுலே நான் உன்கிட்டதான் சமையல் கத்துக்கப் போறேன்.... ஓரளவு சகிக்கபிளா இருக்குமில்லையா உன் சமையல்?''

அவள் குறும்புடன் கேட்க, ''ஏய்!'' ஒற்றை விரலைக் காட்டி 'பத்திரம்' என்பதுபோல் எச்சரித்தாள் இந்து.

முதன் முதலில் பார்த்து பேச ஆரம்பித்த சில மணித்துளிகளிலேயே, இருவரும் அன்யோன்யமாக நெருங்கியிருந்தனர்.

பிறகு இருவரும் தங்களது கல்லூரி அனுபவங்களைப் பகிர்ந்தபடித் திரும்பிவர, பழைய கதைகளைப் பேசியபடி பாமாவும் நந்தாவும், அவர்களுக்காகக் காத்திருந்தனர்.

''வாங்க.... வாங்க! நான் அறிமுகப்படுத்தறதுக்கு முன்னாடியே நீங்க தோழிகளாயாச்சு போலிருக்கு! தோப்பிலே ரெண்டு பேரும் பேசிட்டிருந்ததைப் பாத்துட்டு சென்னி வந்து சொல்லிட்டுப் போனா!''

ஆர்வத்துடன் வரவேற்ற பாட்டியை முத்தமிட்டவள், ''எனக்கு இந்துவை ரொம்பப் பிடிச்சிருக்கு பாட்டி! அவகிட்டே நான் சமையல் கத்துக்கப் போறேன்!'' குதூகலத்துடன் ஆர்ப்பரித்தாள்.

''ஓகே! இனிமே இந்து காலையிலேயே இங்கு வந்துடட்டும்! அவ அம்மாவோட நான் பேசிடறேன்! உனக்கும் பொழுதுபோகும்! சமையல் கத்துக்கலாம்!''

''என்ன! சமையல் பத்தி எல்லாம் பேசறா உங்க பாட்டி! அவளுக்கே சமையலைப் பத்தி சரியாத் தெரியாது! என்னென்னவோ புரியாத பேரெல்லாம் பர்மீஸிலே சொல்லுவா!''

அவரை வேண்டுமென்றே வம்பிழுத்தபடி வந்தார், கனகசபாபதி

''அப்புறம்.... எப்படித் தாத்தா பாவம் சாப்பிடுவீங்க!'' பரிதாபமாக முகத்தை வைத்தபடிக் கேட்டாள் லயா!

''நல்ல வேளை.... எங்கம்மா முதல்லே சமைச்சாங்க.... அப்புறம் அவங்க டிரெயினிங்கிலே வந்தவதான் இப்ப இருக்கிற வேலம்மா! தூப்பரா சமைப்பா! அதனாலத் தப்பிச்சேன்!''

''அதெல்லாம் இல்லை! நானும் எப்பவாச்சும் சமைப்பேன்!''

பாட்டி கூறும்போதே ''அம்மா! உங்க மாதிரி இவளும் சமையலே தெரியாம இருந்திடக் கூடாதேன்னுதான் கத்துக்கச் சொல்றேன்'' குட்டை உடைத்துவிட்டார் பாமா!

''ஏன் தாத்தா! உங்களோடது லவ் மேரேஜாமே! அப்பா சொன்னாங்க!'' லயா ஆர்வத்துடன் வினவினான்.

''சொல்லிட்டாரா உங்கப்பா! ஆமாண்டா! அன்னிக்கு திருவிழாவில இவளைப் பாத்து மயங்கி எங்கம்மாகிட்ட சொல்லி பிடிவாதமாக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.... ஆனா அப்போ தெரியாதே இவளுக்கு சமையல் தெரியாதுன்னு!''

வேண்டுமென்றே மனைவியை அவர் வம்பிழுக்க.... 'ப்ச்... சின்னப்பிள்ளைங்ககிட்டே என்ன பேச்சு இது?'' செல்லமாகக் கடிந்தார் நந்தா.

''பாட்டி! ப்ளீஸ்.... உங்க லவ் ஸ்டோரியை கொஞ்சம் சொல்லுங்களேன்!''

லயா கேட்க, பாமாவும் ஊக்கப்படுத்த, மெதுவாகத் தன் மனம் திறந்து பேச ஆரம்பித்தார் நந்தா!

## 2

பர்மாவில் அவர்களுடைய குடும்பம் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்த தருணங்கள்.... மனதிற்குள் மெல்ல எட்டிப் பார்த்தன.

இளம் வயதிலேயே அவரின் தந்தை பர்மாவில் செட்டிலாகி, வட்டிக் கடை ஒன்றை நடத்தி வந்தார்.

அங்கேயே திருமணமும் முடித்துக்கொண்டவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்க, 'நந்தா, சந்தா' என்று பெயரிட்டனர். நந்தா என்றால் 'நதி'என்றும், சந்தா என்றால் 'சந்திரன்' என்றும் பர்மீஸில் பொருள்!

இரு பெண்களுமே ஒரு அச்சில் வார்த்தாற்போல் ''ஐடெண்டிகல் ட்வின்ஸ்'' ஆக இருந்தனர்.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது 'டிபி' நோய் தாக்கியதில் அவர்களின் தாய் இறந்துவிட, சந்தாவிற்குப் படிக்கும் ஆர்வம்





நடராஜரின் தலையில் அபிஷேகித்த தண்ணீர் அவரது மூக்கின் வழியே வழிந்து, இடது கையில் விழுந்து ஓடி, கை விரல்கள் வழியாக தூக்கிய கட்டை விரல் மீது விழுந்தால் அதுவே, சாஸ்த்ரோக்தமாக வடிக்கப்பட்ட சிறந்த நடராஜர் விக்கிரமாகும்.

**- அ.யாழினி பர்வதம், சென்னை.**

இல்லாததால், சமையலைப் பார்த்துக் கொண்டு வீட்டைப் பராமரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

நந்தா மட்டும் பள்ளியில் படிக்க, சகோதரிகள் இருவரும் நெருங்கிய தோழிகளாய் வளர்ந்தனர்.

நந்தாவிற்காக அவள் பார்த்து பார்த்து சமைக்க, வெளி வேலைகள், துணிகள் வாங்குவது, தைப்பது என்று, அந்த வேலைகளை தன் கையில் எடுத்துக் கொண்டாள் நந்தா. ஒரே மாதிரி உடையில் இருவரும் அருகிலுள்ள புத்தர் கோவிலுக்குச் செல்லும்போது, அவர்களின் தந்தைக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.

அப்போது, அங்கு போர் ஆரம்பித்திருந்த நேரம்!

ஒரு நாள்.... எங்கும் குண்டு மழை பொழிய, பள்ளியிலிருந்து திரும்பியவள் வீட்டிற்கே செல்ல முடியாமல் போக, தந்தையின் கடைக்குச் சென்றாள்.

ஆனால், அங்கு அவள் தந்தையின் கடை தரைமட்டமாயிருக்க, அவரும் உள்ளேயே உருச்சிதைந்து மாண்டு போயிருப்பது தெரிய, உடைந்து கதறி அழ ஆரம்பித்தாள்.

அப்போது அவளைக் கண்டு அருகில் வந்து தேற்றிய எதிர்க்கடைக்காரர் கூறிய செய்தி அவள் தலையில் பேரிடியாய்!

''நந்தா! உங்க வீடு இருந்த ஏரியாவெல்லாம் முழுக்க பாதிக்கப்பட்டுடுச்சாம்! யாருமே உயிரோட மிஞ்சலைன்னு பேசிக்கிறாங்க!''

''வா! நான் மீட்புப் படகிலே தப்பிச்சிப் போகப் போறேன்! என்கூட வந்திடு! எங்காவது போய் உயிர் வாழலாம்! மண் சரிஞ்ச உன்

வீட்டுக்குப் போற வழி கூட அடைபட்டுப் போச்சாம்!''

அவரின் அழைப்புக்கு இணங்க முதலில் மறுத்தாலும், ஒருவருமின்றி இங்கு அநாதையாக வாழ்வதை நினைத்தாலோ கொடுமையாய்!

பிறகு அவருடன் கிளம்பியவள், கிடைத்த ஒரு கப்பலில் ஏறி இந்தியா வந்தபோது பெரிதும் ஒடுங்கிப் போனாள்.

அகதிகள் முகாமிலிருந்து, ஒருவர் அவளை வீட்டு வேலை செய்ய அழைத்துச் செல்ல, அப்படித்தான் அவள் கோபிசெட்டிப்பாளையத்திற்கு வர நேர்ந்தது.

ஒரு முறை.... அவர்களின் குடும்பத்துடன் இந்த ஊர்த் திருவிழாவிற்கு வந்தவளை, கனகசபாபதி பார்த்து விரும்ப, அவளோ எதையும் உணரும் நிலையில் இல்லை!

பிறகு அவருடைய குடும்பமே வந்து பேசி, நந்தாவை அழைத்துச் சென்று கனக சபாபதிக்கு மணமுடித்தனர்.

பெரும் பண்ணையாரான கனகசபாபதியின் தந்தை, அந்தக் காலத்திலேயே கம்யூனிஸ்டாக இருந்ததால், நந்தாவை மருமகளாக மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

மாமியாரும், பெண் குழந்தை இல்லாததால் நந்தாவை அருமையாகப் பார்த்துக் கொள்ள, பத்து வருடங்கள் கழித்தே கருத்தரித்தார் அவர்.

பிறகு தவமாய் தவமிருந்து பாமா பிறக்க, அந்தப் பிரசவத்திலேயே



- புகைப் பிடிப்பதால் ஏற்படும் நுரையீரல் கோளாறுகளுக்கு அன்னாசி பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்.
- இதய நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் சக்தி அன்னாசிப் பழத்தில் நிறைய இருக்கிறது.
- சர்க்கரை நோயாளிகளுக்கு சோளம் ஒரு சிறந்த உணவு.

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்.



ஏதோ கோளாறாகி, ஒற்றைக் குழந்தையாகவே நின்னு போனார் பாமா.

ஆனால் இன்றும்.... அவருக்கு தன் சகோதரி சந்தா எங்காவது உயிருடன் இருப்பாரோவென்ற ஆவலும் ஏக்கமும் அதிகமாய்!

எங்காவது அவளும் தன்னைப் போல் நிம்மதியாக சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று அவரின் உள்ளுணர்வு கூற, அவருக்காகவும் தினமும் பிரார்த்திப்பது வழக்கமாகியிருந்தது.... ஆனால் அவர் உயிரோடு இருக்கிறாரா என்பதை மட்டும் அறிய முடியவில்லை! நந்தா பாட்டியின் ஆழ் மனதின் ஏக்கங்கள், நிராசையுடன் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன!

▸ ▸ ▸

நந்தா முடித்ததும், ஏதோ ஒரு புயல் மையம் கொண்டு விலகிய மௌனத்திலிருந்தாள் லியா!

மெல்லிய நீர்த்திரையிட்ட விழிகளோடு, தன் சகோதரியைப் பற்றிய கவலையும் ஏக்கமுமாய் அவர் முடிக்க.... இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற வேகம் அவளுள் எழுந்தது.

''ஏன் பாட்டி அப்புறம் நீங்க சந்தா பாட்டியைத் தேட முயற்சிக்கலையா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''ம்.... எங்கே போய் தேடறது! நான் போட்ட லெட்டர் எல்லாம் ஆளில்லாமத் திரும்பி வந்துடுச்சி! தாத்தாவோட ப்ரெண்ட் ஒருத்தர் அங்கே போனப்ப.... அட்ரஸ் குடுத்து பாக்க சொன்னோம்!

''ஆனா.... அங்கே இருந்த வீடுங்க எல்லாமே சிதைஞ்சு போயிட்டதாகவும், இப்போ அங்கே வெட்டவெளியில பெரிய மார்க்கெட்தான் இருக்கறதாவும் வந்து சொன்னாரு!

''அப்புறமும் எங்க அக்காவோட போட்டோவை குடுத்தனுப்பி அங்கே விசாரிக்க சொன்னப்பவும், எந்தத் தகவலும் கிடைக்கலை....''

''அதுக்குப் பிறகும் அவ உயிரோட இருப்பாளான்னு தேடுற முயற்சியைக் கைவிட்டாச்சு....''

''ஆனா என் உள் மனசு மட்டும் சொல்லிட்டே இருக்கு.... அவ உயிரோடதான் இருக்கான்னு! ம்....'' ஒரு பெருமூச்சுடன் முடித்தார் அவர்!

ஏதோ ஒரு மர்மக் கதையைக் கேட்ட உணர்வு வர, எப்படியாவது அவரைப் பற்றிய உண்மைகளை அறிய ஆர்வம் வந்தது.

அன்று முழுவதும் யோசித்ததில் இண்டர்நெட்டின் நினைவு வர, மறுநாளே அதற்கான வேலைகளில் இறங்கினாள் அவள்.

தாத்தாவின் ரைஸ்மில் கணக்குகளைப் பார்ப்பதற்கென்று வாங்கி வைத்திருந்த கம்ப்யூட்டரில் இன்டெர்நெட்டில் ஏதாவது தகவல் இருக்கின்றதாவெனத் தேட ஆரம்பித்தாள்.

"சந்தா.... பர்மா''வெனத் தேடியதில் எந்தப் பலனுமின்றிப் போக, ஓய்ந்து போய் அமர்ந்திருந்தபோதுதான் அந்த யோசனையே வந்தது!

மறுநாளே டவுனுக்குச் சென்று ஒரு வெப்சைட் ஆரம்பிக்க அனுமதி பெற்று, "நந்தா.... சந்தா'' என வெப்சைட் ஆரம்பித்தாள்.

அதில் தன் பாட்டியின் திருமணப்புகைப்படத்தையும், எல்லாத் தகவல்களையும் நிரப்பி, 'ஈமெயில் ஐடி'யையும் பதிவு செய்து, தெரிந்தவர்களை தகவல் அளிக்கும்படிக் கோரியிருந்தாள்!

▸ ▸ ▸

அன்றிலிருந்து, தினமும் காலையில் ஒருமுறை கம்ப்யூட்டரில் ஈமெயில் எதுவும் வந்திருக்கிறதாவென சரிபார்ப்பது அவள் வழக்கமாயிற்று!

காலையிலேயே இந்து வந்து விடுவதால், இருவருமாகச் சேர்ந்து ஊஞ்சலில் ஆடுவதும், தோப்பில் சுற்றுவதுமாகப் பொழுதைப் போக்குவார்கள்.

மாலையானதும், ஏதாவது சமைக்கக் கற்றுத் தருகிறேன் என்று இருவரும் உள்ளே நுழைந்தால் சமையலறையே கலக்கும்!

பிறகு சமையல் களைகட்ட, நேரம் போனதே தெரியவில்லை! இப்போது, இந்துவும் அவளும் நெருங்கிய தோழிகளாகியிருந்தனர்.

பாட்டியே, இப்போதெல்லாம் இந்து தன்னுடன் பேசுவதேயில்லை என்று குறையபடும் அளவிற்கு இணைந்திருந்தனர்.

ஒருவாரமாக அவளும் தினமும் 'ஈமெயிலில்' சரிபார்க்க, எந்த பதிலும் வந்திருக்கவில்லை. சோர்வுடன் அமர்ந்திருந்தபோதுதான், அவளைத் தேடி வந்தாள் இந்து!

"என்ன லயா! ஏதாவது லெட்டர் வந்துருக்கா?'' ஆர்வத்துடன் விசாரித்தாள்.

"ஊஹூம்.... இல்லை.... பாட்டி.... பாவம் தினமும் விசாரிக்கறாங்க.... இது வீண் வேலையோன்னு தோணுது! பாட்டிக்கு வேற இப்ப



ஆசையைத் தூண்டி விட்டாச்சு!'' ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள்.

"கவலைப்படாதே லயா! நிச்சயம் அவங்ககிட்ட இருந்து தகவல் வரும் பாரு!''

மெலிதாய் தோளை அழுத்தி அவள் கூற, மனதில் பெரும் இதம் வந்தது.

"ம்.... எப்பவுமே பாசிட்டிவாவேதான் திங்க் பண்ணனும்! வெயிட் பண்ணிப் பாப்போம்! இன்னிக்கு என்ன ஸ்பெஷல் மெனு!''

ஆவலாகக் கேட்டபடி அவள் சமையலறைக்குள் செல்ல, இந்து தொடர்ந்தாள்.

▸ ▸ ▸

மறுநாள் முழுவதும் கோவில் திருவிழாவென்பதால், யாகசாலை, பூஜை, என்று பொழுது செல்ல வீடு வரும்போது இரவாகிவிட்டது!

"எங்க வீட்ல திருடினவனை நான் பார்க்கணும் ஏட்டய்யா..."
"ஏன்யா?"
"என் மனைவிக்கு தெரியாமல் வீட்டுக்குள்ளே எப்படி நுழைஞ்சாங்கற டெக்னிக்கை கேட்டு தெரிஞ்சுக்கத்தான்!"
–வெ.ராம்குமார், வேலூர்.



சாப்பிட்டுவிட்டு படுக்கச் செல்லும்போது நினைவு வர, ஈமெயிலை சரிபார்த்தபோது, புதிதாக ஒரு மெயில் வந்திருப்பது தெரிந்தது.

மலேசியாவிலிருந்து, யுவராஜ் என்று ஒருவர் அனுப்பியிருந்தார்.

மனம், சிறு படபடப்புடன் துடிக்க, அந்த மெயிலைப் படித்ததும் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தவள் உடனே பாட்டியிடம் ஓடினாள்.

"பாட்டி.... உங்க ட்வின் ஸிஸ்டர் கிடைச்சாச்சு.... யுவராஜூன்னு ஒருவர் மெயில் அனுப்பியிருக்காரு! சந்தா பாட்டி உயிரோடதான்

இருக்காங்களாம்!''

''இப்போ மலேசியாவில் இருக்காங்களாம்! உங்க போட்டோவைப் பாத்தவுடனே அழுதிட்டாங்களாம்! அவங்களும் உங்களைத் தேடிட்டுதான் இருந்திருக்காங்க!

''அவங்க போன் நம்பர் கூட குடுத்திருக்காங்க.... உடனே பேசச் சொல்லியிருக்காங்க! உற்சாகத்தில் அவள் துள்ளிக் குதிக்க, பாட்டியின் கண்கள் ஆனந்த அருவியாய் மாறியிருந்தன!

கனக சபாபதியும் பாமாவும் சேர்ந்து பரபரக்க, உடனே அந்த மெயிலில் அனுப்பப்பட்டிருந்த எண்ணிற்குத் தொடர்பு கொண்டாள்.

வெகு நேர அழைப்பிற்குப் பிறகு போன் எடுக்கப்பட்டு, ஒரு ஆழ்ந்த குரல், சோம்பலும் எரிச்சலுமாய் ''யுவராஜ் ஹியர்!'' என்றது!

''ஹலோ! நான் தமிழ்நாட்டிலிருந்து நந்தா பாட்டியோட பேத்தி லயா பேசறேன்! சந்தா பாட்டி இருக்காங்களா!'' பரபரப்புடன் கேட்டாள்.

''ப்ச்! பாட்டி தூங்கறாங்க.... இப்படித்தான் மிட்நைட்டில் போன் பண்ணுவியா? டு யூ ஹேவ் மேனர்ஸ்?''

அவன் குரல் சலிப்பாய் வர, ''மணி இப்ப ஒன்பதரைதானே ஆகுது!'' குழப்பத்துடன் உரைத்தாள்.

''ம்.... இங்கே இப்போ நைட் பனிரெண்டு மணி... போதுமா? காலையில உங்க கூட பாட்டி பேசுவாங்க.... இதே நம்பர்தானே? பை!''

பட்டென்று அவன் வைத்துவிட, உதட்டைக் கடித்தபடி தன் தவறை உணர்ந்து குற்றவுணர்வுடன் நிமிர்ந்தாள் அவள்!



நாள் முழுக்க
மூட்டை சுமந்து
களைத்து போய்
வீடு வந்தவரிடம்
அப்பா என்னை
உப்பு மூட்டை தூக்குப்பா
என்றது மழலை!

- டி.எஸ்.சேகர், தென்கடப்பந்தல்.



''என்னடா.... அங்கே என்ன சொன்னாங்க! அக்கா இல்லையாமா?''

பாட்டி பதட்டத்துடன் கேட்க ''சாரி பாட்டி! இப்போ அங்கே மிட்நைட் பன்னெண்டுமணியாம்! ரெண்டரை மணி நேர வித்தியாசத்தை மறந்து போன் பண்ணிட்டேன்'' குற்றவுணர்வுடன் நிறுத்தினாள்.

''யாருடா அந்தப் பக்கம் எடுத்துப் பேசினது?''

தாத்தா ஆவலுடன் கேட்க, ''ஈமெயில் குடுத்திருந்தாரே.... அந்த யுவராஜ் தான்....! சந்தா பாட்டி தூங்கறாங்கன்னு அவரும் சொன்னாரு!'' யோசனையுடன் முடித்தாள்.

''சரி காலையில பேசலாம்..... நேரம் புரியாம தொந்தரவு பண்ணியாச்சின்னு சாரி கேட்டுடலாம்!''

அவள் முகத்தைவைத்தே மறுமுனையில் என்ன பேசியிருப்பார்களென யூகித்த பாமா, அனைவரையும் படுக்கச் செல்லும்படிக் கூறினார்.

அன்றிரவு....! ஏனோ லயாவிற்கு உறக்கமே வரவில்லை!

எதிர்முனையில் கேட்ட அந்த ஆழ்ந்த கம்பீரக் குரலும், அதில் தொனித்த அலட்சியமும், ஏளனமும் உள்ளே வெகுவாய் உறுத்துவதாய்!

வெகு நேரத்திற்குப் பிறகே உறங்க ஆரம்பித்தாள் அவள்!

# 3

காலையில் தன்னை யாரோ ஆர்வத்துடன் உசுப்பி எழுப்புவது புரிய, சோம்பலுடன் கண்களைத் திறந்தால் எதிரே இந்து நின்றிருந்தாள்.

''என்ன இந்து! அதுக்குள்ளே வந்துட்டே?'' மெல்லச் சிணுங்கியபடி அவள் திரும்பிப் படுக்க, ''லயா! பாட்டி உன்னை உடனே அழைச்சிட்டு வரச் சொன்னாங்க.... மலேஷியாவிலேருந்து அந்தப் பாட்டி பேசறாங்களாம்!'' மகிழ்ச்சியுடன் படபடத்தாள்.

உடனே துள்ளி எழுந்து ஹாலுக்கு ஓடினாள், அழுகையும் ஆனந்தமுமமாகப் பேசிக் கொண்டிருந்தார் பாட்டி!

லயாவைக் கண்டதும், ''சந்தா! ஒரு நிமிஷம்! நம்ம ரெண்டு பேரையும் முயற்சி பண்ணி சேத்து வெச்சது என் பேத்தி லயாதான்! அவ கூடப் பேசுங்க!'' என்று போனை அவளிடம் கொடுத்துவிட்டார்.

"பாட்டி....!"

என்ன பேசுவதென்றே புரியாமல் அவன் தவிக்க, "லயா! எப்படிம்மா இருக்கே? யுவா சொன்னான். நேத்து ராத்திரி கூப்பிட்டியாமே.... சாரிடா... நான் தூங்கிட்டேன்!"

"அவன் ஏதும் கோபமாய் பேசிடலையே.... தூக்கத்துல தொந்தரவு செஞ்சா அவனுக்குப் பிடிக்காது! தன்னோட பர்சனல் நம்பரைக் குடுத்திருக்கான்! அதான்....

"ரொம்ப தேங்க்ஸ்டா! நந்தாவையும் என்னையும் சேத்து வச்சதுக்கு! எவ்வளவு வருஷங்களாச்சு நாங்க பிரிஞ்சு.... கனவு மாதிரி இருக்கு!

"உடனே உங்களை எல்லாம் பாக்கணும் போலிருக்கு.... இந்த வாரமே கிளம்பி வரேன்.... ஒரு நிமிஷம் நந்தாகிட்டே தரியாடா!" வாஞ்சையுடன் வினவினார்.

"சரி பாட்டி! எனக்கும் உங்களோட பேசினதுல ரொம்ப சந்தோஷம்!" என்றபடி பாட்டியிடம் ரிஸீவரைக் கொடுத்தாள்.

மனம் இலவம் பஞ்சாய் எடையற்று லேசாகியிருக்க, இதமாய் ஒரு வித சந்தோஷம் உள்ளே பரவியது.

***

பிறகு நடந்ததெல்லாமே, ஒரு அழகிய கனவாய்!

அந்த வாரமே, சந்தா மலேஷியாவிலிருந்து தன் பேரனுடன் கிளம்பி வருவதாகத் தெரிவித்திருந்தார்.

லயாவின் தந்தை சுதர்சனம் சென்னையிலிருப்பதால், அவர்களை அவரே வரவேற்று அழைத்துவர ஏற்பாடானது.

பாட்டிக்கோ,... இருப்பே கொள்ளவில்லை!

ஈரோட்டிற்க, அவர்களை அழைத்து வருவதற்காக, பாமாவும் லயாவும் இரு கார்களில் சென்றார்.

ரயில் நிலையத்தில் காத்திருந்த நிமிடங்கள் அவளுக்கே பதைப்பை விதைக்க, பாட்டிக்கு எப்படி இருக்குமென்பது புரிந்தது.

முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து முதலில் இறங்கிய ஒரு உயர்ந்த இளைஞனை சுவாரசியமின்றி ஏறிட்டுவிட்டு, பாட்டியைத் தேடின அவள் விழிகள்!

அவன் பின்னோடு இறங்கிய அந்த வயதான மூதாட்டி, அப்படியே நந்தா பாட்டியின் மறுபதிப்பாக ஒல்லியாக இருந்தார்.

"பாட்டி...." என்றபடி ஓடிச் சென்று அவள் அவரின் கையைப் பிடிக்க, கூர்மையுடன் இடுங்கிய புருவங்கள் உயர அவளையே ஊடுருவியது, அருகிலிருந்த இளைஞனின் பார்வை!"

"லயாதானே! யு ஆர் சோ ப்ரிட்டி அண்ட் ப்யூட்டி புல் மை சைல்ட்!" என்றபடி அணைத்து, முன்னுச்சியில் முத்தமிட்டார் சந்தா.

பிறகு அருகில் நின்றிருந்த இளைஞனிடம், "யுவா! இவதான் உன் அத்தை பொண்ணு லயா!" பெருமையுடன் அறிமுகம் செய்தவர், உடனே பாமாவிடம் திரும்பினார்.

ஒரு ஏளன உதட்டுப் பிதுக்கலுடன் அவளையே அளவெடுத்தவன், "ம்.... ராத்திரி பனிரெண்டு மணிக்கு போன் செஞ்சு என்னை எழுப்பின புத்திசாலி! இல்லை?" ஏளனத்துடன் அடிக்குரலில் அவளிடம் வினவினான்.

சட்டென்று விதிர்த்துப் போய் நிமிர்ந்தவள், சரியான பதில் கூறுவதற்குள், "லயா! உன் பாட்டிம்மாவைப் பாத்தாச்சா?" உற்சாகமாக விசாரித்தபடி இறங்கினார் சுதர்சனம்!

"அப்பா...." என்றபடி அவர் மார்பில் சாய்ந்தவளை, உதட்டுச் சுழிப்புடன் சிரித்த யுவராஜின் பார்வை ஏதோ செய்வதாய்!

இவன் என்ன என்னை ஏளனம் செய்வது என்ற தகிப்புடன், "எப்படிப்பா இருக்கீங்க? பாட்டியை ஏர்போர்ட்டில சரியா அடையாளம் கண்டு பிடிச்சிங்களா?" தொடர் கேள்விகளுடன் அவன்புறம் திரும்பாமலே நடக்க ஆரம்பித்தாள்.

"உன் காதலியை எப்படிடா நீ கழட்டிவிட்டே?"

"என் ஜாதகத்துல எனக்கு இரு மனைவிகள்னு பொய் சொன்னேன்... அவ்வளவுதான்!"

—வெ.ராம்குமார், வேலூர்.



“ம்.... அப்புறம் யுவாவைப் பாத்தியா லயா! ப்ரில்லியண்ட் கை! அங்கே மலேஷியாவில் பேமஸ் பில்டராம்!

“இங்கேயும் தன் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியை ஆரம்பிக்க ஏற்பாடு நடக்குதாம்! ஹி இஸ் சிம்ப்ளி சூப்பர்மா!”

அவளுடைய உணர்வுகள் புரியாமலே அவர் தொடர, “ப்ச்.... போதும்ப்பா! போர் அடிக்குது! பாட்டியைப் பத்தி சொல்லுங்க!” சலுகையுடன் சிணுங்கினாள்.

“அங்கிள்! இண்டலெக்சுவல் திங்க்கிங் இல்லாதவங்ககிட்டே, எப்பவுமே பிசினஸ், வொர்க் பத்திப் பேசாதீங்க!”

“பொதுவாவே லேடீஸ் எல்லாமே ஹோம் பேர்ட்ஸ்.... சாப்பாடு, டிவி, ஜூவல்ஸ், ட்ரெஸ் இதுப்பத்தி வேணா இன்ட்ரெஸ்டாப் பேசுவாங்க!”

அவளையே ஆழமாக ஊடுருவியபடி நக்கலாக நிறுத்தினான்

தர்ப்பூசனி வெயில் காலத்திற்கு உகந்த பழம். உலகின் 10 அருமையான உணவுப் பொருட்களில் இதுவும் ஒன்று. புற்றுநோய், சர்க்கரை நோய், ஆஸ்துமாக்காரர்களுக்கு இது நல்லது. நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கும். பொட்டாசியம், மேக்னீசியம், வைட்டமின் ‘ஏ’ இதில் அடங்கியுள்ளது.

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்.



அவன்.

“நோ யுவா! லயா நமக்கு சரிசமமா பிசினஸ், அரசியல், ஷேர்ஸ், எகானமி பத்தி எல்லாம் நல்லா டிஸ்கஸ் பண்ணுவா! அவ ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர்!”

பெருமையுடன் அவர் தன் மகளைப் பற்றிக்கூற, “ஓ! ஆனா, வேர்ல்ட் டைம் கூடத் தெரியாத சரியான பட்டிக்காடு!”

அவன் காதருகே குனிந்து, அவளுக்கு மட்டுமே கேட்கும்படி மெல்ல



முணுமுணுத்தான்.

சுள்ளென்று ஒருவிதக் கோபம் பரவ, தலையைச் சிலுப்பியபடி வேகமாக முன்னே சென்றாள் அவள்.

▸ ▸ ▸

பாட்டியுடன் ஒரு காரில் அவளும் பாமாவும் ஏறிக்கொள்ள, மற்றொரு காரில் சுதர்சனமும் யுவராஜூம் வந்தனர்.

வீட்டு வாசலிலேயே காத்திருந்து ஓடிவந்து சகோதரியை அணைத்துக் கண்ணீர் விட்ட நந்தாவிடம் யுவராஜை அறிமுகப்படுத்தினார் சுதர்சனம்.

பிறகு, சகோதரிகள் இருவரும் ஒரு நொடி கூட பிரியவே இல்லை!

பழைய கதைகளைப் பேசுவதும், தங்களின் பால்யத்தை நினைவு கூர்வதுமாக, இருவருக்கும் பொழுது சுகமாய் விடிந்தது!

சாப்பிட்ட பிறகு யுவராஜூம் சுதர்சனமும் தோப்பைச் சுற்றிப் பார்க்கச் செல்ல, மகளையும் உடன் அழைத்தார் அவர்.

“இல்லைப்பா.... நான் வரலை! பாட்டியோடப் பேசிட்டிருக்கேன்....”

அவனுடன் செல்ல மறுத்துவிட்டு, நந்தாவின் தோளில் சாய்ந்து கொண்டாள் அவள். அவளுடைய உணர்வுகள் புரிய ‘விடுங்க அங்கிள்! நாம போகலாம்....”

அவன் குரலில் தொனித்த ஏதோ ஒரு புரியாத செய்தியில் அவள் நிமிர, “பட்டிக்காடு....” அவன் உதடுகள் சப்தமின்றி அசைந்தன!

கோபமும் எரிச்சலும் ஒருவித இயலாமையுடன் உள்ளே பரவ, அலட்சியமாகத் திரும்பிக் கொண்டாள் அவள்.

***

அன்று முழுவதும் விருந்து, உறவுகளின் வருகை எனவீடே அமர்க்களப்பட்டது.

மறுநாளே சுதர்சனமும் கிளம்பிவிட, யுவராஜ்தான் தனிமையில் வாக்மேனும், லேப்டாப்புமாகப் பொழுதைக் கழித்தான்!

லயாவும், இந்துவும் ஒரு நாள் தோப்பிற்குள் நடந்தபடி பாட்டிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

“லயா! உன் மாமா பையன் பயங்கர ஸ்மார்ட்டா இருக்காரு இல்லை!” ஆர்வத்துடன் வினவிய இந்துவிடம், “இல்லை.... என்றபடித் திரும்பியவளின் விழிகள் உறைந்து ஸ்தம்பித்தன!

# மணமானவர்களுக்கு மட்டும்...

ஆண், பெண் என்று வேறுபாடு இல்லாமல் வேலைக்கு செல்பவராக இருந்தாலும் வீட்டில் சும்மாவே இருந்தாலும் அனைவருக்கும் எதில் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ ஒரே ஒரு விஷயத்தில் ஒற்றுமையாக இருப்பார்கள் அதுதான் டென்ஷன்..

இந்த டென்ஷன் சாந்தமாக இருப்பவர்களைக் கூட பலவிதமான கோபத்தை ஏற்படுத்தி குடும்பத்தில் குழப்பங்களை உண்டு பண்ணி விடுகிறது. மனிதனின் வாழும் ஆயுட்காலமும், இந்த டென்ஷனால் குறைவதோடு பலவித நோய்களும் தோன்றக் காரணமாகி விடுகிறது.

டென்ஷனை போக்கி, ரிலாக்சாக இருக்க டாக்டர்களை பல மருத்துவ முறைகளை கூறினாலும், இன்று அதற்கு செக்ஸ்தான் சிறந்த மருந்து என்ற கருத்து உலகம் முழுவதும் மேலோங்கி வருகிறது.

ஆகையால் டென்ஷனாக இருக்கும் போது 'எனக்கு மூடு சரியில்லை என்று கணவன், மனைவி ஒதுங்கிவிடாதீர்கள்' என்கிறது மருத்துவ குறிப்புகள். இது மணமானவர்களுக்கு மட்டும்தான். மணமாகாதவர்கள் எங்களுக்கு என்ன, 'ரிலீப்' என்று கேட்டால் விளையாட்டு ஒன்று தான் என்கிறது மருத்துவக் குறிப்பு.

- புஷ்பா பழனி, புதுச்சேரி

பின்புறம் நடந்து வந்து கொண்டிருந்தவனுடைய புருவங்கள் மேலேற வேகமாக முன்னால் வந்தான்.

''தேங்க்ஸ் மிஸ் இந்து! மத்தவங்களைப் பாராட்டக்கூட ஒரு தனிமனசு வேணும்! ஒரு சிலர்கிட்டே இருக்கறதில்லை!

''நல்லவேளை.... உங்க ப்ரண்டோட ஈகோ உங்ககிட்டே இல்லை! அவ மாதிரி இருக்காதீங்க....'' என்றபடி வேகமாகக் கடந்து சென்றான்.

உடலும் உள்ளமும் தகிப்பாய் சூடாக ஒவ்வொரு முறையும் அவனுக்கு சரியான பதிலடி கொடுக்க முடியாமல் போவது, உள்ளே உறுத்தியது!

''எவ்வளவு திமிர் இருந்தால், 'அவ' என்று மரியாதையின்றி அழைப்பான்!'' கோபத்துடன் சுருங்கியது இதயம்!

''ஏன் லயா? உங்களுக்குள்ளே என்ன பிரச்னை? பொதுவாவே மோதல்லே ஆரம்பிக்கிற உறவுதான், காதலா மாறும்பாங்க! எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கு!'' மெதுவாக இழுத்தாள் இந்து.

''ப்ச்.... நீ வேற.... அவரைக் கண்டாலே எனக்கு ஏனோ பிடிக்கலை! எப்பப் பாரு, தான்தான் பெரிய மகாராஜா மாதிரி நினைப்பு!''

''மத்தவங்க எல்லாரையும் மட்டமா நினைக்கிற சுப்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் உள்ள ஆளு!''

அலட்சியமாக அவள் திரும்பி நடக்க ஆரம்பிக்க யோசனையுடன் பின் தொடர்ந்தாள் இந்து.

▸▸▸





அகங்காரம்
இருக்கும்
இடத்தில்
ஆனந்தம் தங்காது
ஆனந்தம் இருக்கும்
இடத்தில்
அகங்காரம்
இருக்காது

- ஜே.சி.ஜெரினாகாந்த், ஆலந்தூர்.

பிறகு வீட்டிற்குள் வந்தபோது, பாட்டியின் பேச்சு களைகட்ட ஆரம்பித்திருந்தது. சந்தா பாட்டி.... தான் மலேஷியா சென்ற கதையைக் கூற ஆரம்பித்திருந்தார். ஆர்வத்துடன் அவரருகில் சென்று அமர்ந்து கேட்க ஆரம்பித்தாள் லயா!

பர்மாவில் அன்று வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த சந்தாவை பெரும் இடியோசை போல் வந்து வெடிகுண்டு சப்தமும், பல அவலக் குரல்களின் கதறலும் ஈர்த்தன!

பதறி வெளியே ஓடி வந்தால், அவள் தந்தை இறந்துவிட்டதாகக் கூறிவிட்டு ஓட ஆரம்பித்தார் ஒருவர்!

அழுதபடி ஓடினால், வெறும் புகையும் சிதைந்த கட்டங்களுமே அங்கு மிஞ்சியிருந்தன! அதிர்ச்சியிலும், பயத்திலும் மயங்கி விழுந்தவள், கண் விழித்தபோது, ஒரு கப்பலில் இருந்தாள்!

ஏதோ ஒரு குடும்பம் அவள் மேல் பரிதாபப்பட்டு தூக்கி வந்திருந்தனர்.

நேரே மலேஷியாவிற்கு அகதிகளாகச் சென்றவர்கள், அங்கு பங்சார் எஸ்டேட்டில் இருந்த ஒரு ரப்பர் எஸ்டேட்டில் வேலைக்குச் சேர்ந்தனர்.

ஒரு வருடம் இப்படியே கழிய அந்த இடமும் மனிதர்களும் சந்தாவிற்குப் பழகிப் போயினர். அப்போதுதான், ஒரு நாள் எஸ்டேட்டை மேற்பார்வையிட வந்த முதலாளியின் மகன் ராஜரத்னம், அவளைக் கண்டார்.

ஏனோ முதல் பார்வையிலேயே அவர் அவரை ஈர்த்துவிட, வீட்டில் கூறியபோது அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை! பெரும் போராட்டத்திற்குப் பிறகே, இருவரும் திருமணம் செய்தனர்.

பிறகு இளைய மகன் ராஜகோபாலும் பிறக்க, ராஜரத்தினத்தின் அண்ணனுக்கோ குழந்தையே இல்லை! அவர் வேதாரண்யத்தில் கப்பல், மீன்பிடித் தொழில், விவசாயம் என்று வாழ்ந்து வர, தன்

இளைய மகனை அவருக்குத் தத்துக் கொடுத்தார் ராஜரத்தினம்!
ராஜகோபால் அங்கு வளர, எப்போதாவது ஒருமுறைதான் அவரைப்
பார்க்க முடிந்தது!

பிறகு ராஜவடிவேலுக்குத் திருமணம் நடந்து யுவராஜும் பிறக்க,
அவன் தாய் பவானி இறந்துவிட்டார். சந்தாவே பேரனை வளர்க்க
ஆரம்பித்தார்.

அப்போதுதான் ராஜகோபாலுக்கு திருமணம் நிச்சயமானது.
அவர்கள் அனைவரும் இந்தியா வந்து இளைய மகன் திருமணத்தை
முடித்துவிட்டுச் செல்ல, அவருக்கும் இப்போது இரு குழந்தைகள்....
முதல் குழந்தை சுந்தர்ராஜ் பிறந்தபோது, இந்தியா வந்தவர்தான்!
பிறகு ராஜரத்னம் ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட சந்தா எங்கும்
செல்வதில்லை! ராஜகோபாலின் இரண்டாவது மகள் ரோகிணியைக்
கூட மலேஷியா வந்தபோதுதான் அவர் பார்த்திருந்தார்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு வந்தவர், இப்போதுதான்
இந்தியா வந்திருக்கிறார். பங்சார் எஸ்டேட், இப்போது பங்சார் பாருவாக
மாறியிருக்க, அது கமர்ஷியல்-ஏரியாவாக உருமாறியிருக்கிறது.

அவர்களுடைய எஸ்டேட்டை இப்போது ராஜவடிவேலுதான்
நிர்வகிக்கிறார்.

யுவராஜ் பெரிய கன்ஸ்டரக்ஷன் கம்பெனியை அங்கு நிர்மாணம்
செய்திருக்கிறான். அவனும் இந்தியா வந்ததில்லை.... சிறு குழந்தையாக
இருக்கும்போது வந்தவன் தான்!

இப்போது தன் உடன்பிறப்பை காணவும், அப்படியே தன் இளைய
மகனின் குடும்பத்தைப் பார்க்கவும், கிளம்பி வந்திருக்கிறார் சந்தா!

நாளை அவர்கள் எல்லோரும் வேதாரண்யத்திலிருந்து கிளம்பி
இங்கு வருகின்றனர்.

சந்தாவின் ஞாபகக் கிளையிலிருந்து உதிர்ந்த நினைவுகள் மெல்ல
அனைவரின் நெஞ்சிலும் நிறைந்து இனிய மணம் பரப்பத்துவங்கின.

பாலாபிஷேகம் - நீண்ட ஆயுள் கிடைக்கும்
தயிராபிஷேகம் - நன் மகப்பேறு கிடைக்கும்
நெய் அபிஷேகம் - வீடுவாங்கும் அதிர்ஷ்டம் வரும்.
அன்னாபிஷேகம் - சகல பாக்யமும் வந்தடையும்
தேனாபிஷேகம் - இனிய வாழ்க்கை அமையும்.
பஞ்சாமிர்த அபிஷேகம் - ஆரோக்கியம் சீராகும்.
விபூதி அபிஷேகம் - மோட்சம் கிடைக்கும்.



# 4

அன்றிரவு அவருடைய மலரும் நினைவுகளை அசைபோட்டபடி உறங்கிய லயாவை விடியல் தன் இருகரம் நீட்டி வரவேற்றது.

காலையிலேயே ராஜகோபாலும் அவர் மனைவி விஜயாவும், மகன் சுந்தர் ராஜும் வந்துவிட்டனர்.

ரோஹிணி சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதால் வரவில்லை! பரஸ்பர அறிமுகத்திற்குப் பிறகு, அனைவரும் மகிழ்ச்சியாக இணைய, சுந்தரிடம் பழகுவது லயாவிற்கு எளிதாய்! யுவாவைப் போலன்றி பழகுவதற்கு மிக இனிமையாய் எளிதானவனாக இருந்தான் அவன்.

அன்று மாலையில் இருவருமாகச் சேர்ந்து ஊரைச் சுற்றி வந்தபோது, தனக்கு ஒரு சகோதரன் இல்லாத ஒரு குறை அவன் மூலம் தீர்வதை உணர்ந்தாள் அவள்.

அதை அப்படியே அவனிடம் உரைக்க, அவனுக்கும் அவளை மிகவும் பிடித்துப் போனது.

''என் தங்கை ரோஹிணி உன் மாதிரி இல்லை லயா! ரொம்ப சுப்பீரியாட்டி காம்ப்ளெக்ஸ் உள்ளவ அவ! யாரையும் மதிக்கவே மாட்டா! அவ குணம் அப்படி! நான் பெரிசா எடுத்துக்கறதில்லை!'' சுந்தர் சிறுமுறுவலுடன் கூறினான்.

''எல்லாரும் ஒரே மாதிரி இருக்க முடியாதே சுந்தர்! ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதம்! நீங்க எப்படி பழக, ரொம்ப ஈஸி கோயிங்கா இருக்கீங்க!''

"ஆனா யுவா அப்படி இல்லியே! நீங்க சொன்ன மாதிரித்தான்.... வெரி அர்ரகண்ட் அன்ட் அதாரிடேடிவ்!ப்ச்.... டிஸ்கஸ்டிங்!"

தலை சிலுப்பியபடி அவன் உரைக்க, திடீரென்று ஒரு மரத்தின் பின்னாலிருந்து வெளியே வந்தான் யுவன்!

சட்டென்று விதிர்த்து உறைந்து நின்றுவிட்டாள் அவள்!

"ஹாய் சுந்தர்! அப்படியே ஒரு வாக் போகலாமா?" என்றவன் அவளிடம் திரும்பினான்.

"நீ என் கூட வர்ரதை விரும்பமாட்டேன்னு நினைக்கிறேன்.... தேங்க்யூ.... பார் யுவர் லவ்லி கமெண்ட்ஸ்!"

விழிகள் கூர்மையுடன் இடுங்கி, ஒருவித ஆளுமைத் தன்மையுடன் அவளையே ஊடுருவ, அவன் கூறியபோது, அவளுக்குள் சிறு நடுக்கம் ஓடியது!

வேகமாய் திரும்பி வந்த வழியே நடக்க ஆரம்பித்தவளை "போ.... ஆனா என்கிட்டருந்து நீ தப்ப முடியாது!" அவன் குரல் எச்சரிக்கையுடன் ஒலித்து தேய்ந்தது!

***

மறுநாள் முழுவதும் சுந்தரும் யுவாவும் சேர்ந்து சுற்ற இந்து உறவுமுறையில் ஒரு காதுகுத்து விழாவிற்குப் போய்விட்டு, இன்று தான் திரும்பியிருந்தாள். மாலையில் இருவருமாகச் சேர்ந்து வெஜிடபிள் கட்லெட் செய்ய ஆரம்பித்திருந்தனர்.

வீட்டில் நிறைய உறவுகள் இருந்ததால், மொத்தமாகச் செய்து எடுத்துச் சென்று தனித்தனியாக அளித்தனர்.

யுவா இருக்கும் திசைக்கே கூட, இப்போதெல்லாம் அவள் செல்வதில்லை!

அவனுக்கும், சுந்தருக்கும் இந்துவிடமே வைத்து கொடுத்துவிட்டு, தனக்கும் இந்துவுக்கும் மட்டும் எடுத்துக் கொண்டு தோட்டத்திற்க வந்தாள்.


அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபோது, வானம் செந்நிறக் கரங்களால் பூமிக்கு பிரியா விடை கொடுத்துக் கொண்டிருந்தது.

***

மறுநாள் ராஜகோபாலின் குடும்பம் ஊருக்குக் கிளம்ப, யுவனும் மலேஷியா போவதற்காக சென்னை செல்வதாக இருந்தது.



## இ|டை|வே|ளை



எம்.ஆர்.ராதா தனது நாடக நிகழ்ச்சிகளில் இடைவேளை விடமாட்டார். 'இடைவேளை விடாமல் நாடகத்தை நடத்தினீர்களே ஏன்?' என்று அவரைக் கேட்டபோது, 'இடைவேளை' விட்டால் என் நாடகத்தை பற்றிய கருத்துக்களை 'லாவட்டரி'யில் பேசுவார்கள். என்னைப் பற்றிப் பேசக் கூடிய இடமா அது? நாடகம் முடிந்ததும் தெருவெல்லாம் மக்கள் பேசிக் கொண்டு போவதையே நான் விரும்புகிறவன். அதனால்தான் இடைவேளை விடுவது இல்லை என்றார்.

டி.எஸ்.சேகர், தென்கடப்பந்தாங்கல்.

அன்று முழுவதும் அவன் பாட்டியுடன் பொழுதைக் கழிக்க, ஏனோ இன்று மனமே சரியில்லை லயாவிற்கு!

சுந்தரும் அவன் குடும்பமும் ஊருக்குச் சென்றதால், இதுபோல் தனிமை உணர்வை அனுபவிக்கிறோமென்று தோன்ற.... இந்துவின் வீட்டிற்குச் சென்றாள்.

அங்கிருந்து கிளம்பும்போதே இருட்டிவிட, அவளுடைய தந்தை பைக்கில் அழைத்துச் செல்வதாகக் கூற, அவர்களுடைய காரே வந்துவிட்டது.

விடைபெற்றுக் காரில் ஏறியபோதுதான், அதை ஓட்டி வந்திருப்பது யுவனென்று தெரிந்தது!

"ஏறு! என்னை சென்ட் ஆஃப் பண்ண வீட்டில் இருக்கக் கூடாதுன்னு தானே இங்கே வந்தே!"

ஒற்றைப் புருவம் உயர்த்தி ஏளனமாகக் கேட்டான்.

"இல்லை! பொழுது போகலை.... வந்தேன்!"

"அழுத்தமாக அவன் முடிக்க 'நான் நம்பலை! ஆனா உன் திட்டம் புரியாம ரெண்டு பாட்டியுமா சேர்ந்து, என்னை விட்டே உன்னை அழைச்சிட்டு வரச் சொல்லிட்டாங்க! பாவம்!"



## காந்தியின் விளக்கம்

மகாபாரதம் மறைமுகமாக நீதிகளை போதிக்கும் தத்துவ கதையேயின்றி அது சரித்திரம் அல்ல. திரௌபதி என்பது ஆன்மா. பஞ்சபாண்டவர்கள் என்பது ஐம்புலன்கள். திரௌபதி பாண்டவர்களின் மனைவியாக இருந்தாள் என்றால் ஐம்புலன்களுடன் ஆன்மா இணைந்திருந்தது என்பதே பொருளாகும்.

– சே.தமிழரசி, அத்திப்பட்டு.

ஏளனத்துடன் உதட்டைப் பிதுக்கியவனையே சீற்றத்துடன் ஏறிட்டவள், "ஆமாம்.... எனக்கு நீங்க இருக்கற வீட்டிலே இருக்கப் பிடிக்கலை! ஐ ஹேட் யூ!" கொதிப்புடன் முணுமுணுத்தாள்!

"ஓ! இன்னொரு! அதிர்ச்சி தகவல் உனக்குத் தெரியுமா? உனக்கும் எனக்கும் கல்யாணம் செஞ்சி, நம்ம குடும்பத்தை மேலும் இணைக்க ரெண்டு பாட்டியும் முடிவெடுத்திருக்காங்களே!"

அவன் நக்கலாக முடிக்க "பொய்! என்னை வெறுப்பேத்த பொய் சொல்றீங்க..... போதும்!" நம்ப முடியாமல் கிறீச்சிட்டாள்.

"ஹூம்! அப்படி அது பொய்யா இருந்தா முதல்லே சந்தோஷப்படப் போறது நான்தான். ஆனா, இது எனக்குப் பிடிக்காத கசப்பான ஒரு உண்மை!"

அலட்சியமாகக் கூறிவிட்டு அவன் காரை எடுக்க "கடவுளே... அவன் என் துணைவனா?" உள்ளம் உறைந்து தொண்டை உலர்ந்தது!

வீட்டிற்குச் சென்றபோதோ, அங்கே களேபரமாகியிருந்தது!

ஹாலில் அமர்ந்து அழுதபடி, போன் செய்துகொண்டிருந்தார் பாமா!

வேகமாக உள்ளே சென்றவள், "என்னாச்சும்மா! ஏன் அழறீங்க?" பதட்டத்துடன் விசாரித்தாள்.

"பாட்டிக்கு திடீர்னு மயக்கம் வந்துடிச்சி... நெஞ்சு வலிக்குதுங்கறாங்க.... அதான் டாக்டர் வந்திருக்காரு.... ஆம்புலன்ஸ்சுக்கு போன் செஞ்சிருக்கேன்" கண்ணீருடன் கூறினார்.

உடனே உள்ளே ஓடியபோது அவள் எதிர்பார்த்தது போலன்றி, படுக்கையில் சந்தா முனகியபடிப் படுத்திருந்தார்.

அவரைக் கண்டதும் பதைப்புடன் ஓடிவந்து அருகில் அமர்ந்த யுவனுடைய முகம் இறுகியிருந்தது.

அன்றே அவரை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு, தன் பயணத்தை ரத்து செய்தவன், உடனே தன் தந்தையையும் வரவழைத்துவிட்டான்!

முன்பே அவர் ஒரு இதய நோயாளி என்பது தெரியவந்தது.

அதிகப்படியான ஆனந்தத்தினால் கூட இந்த மைல்ட் அட்டாக் வந்திருக்கலாமென்று, அவர்களுடைய குடும்ப டாக்டர் கூறினார்.

மறுநாளே ராஜவேலு கிளம்பி வந்துவிட அனைவரும் கவலையுடன் மருத்துவமனையில் மவுனித்திருந்த இரு தினங்களுக்குப் பிறகு சந்தா வீட்டிற்குத் திரும்பினார்.

நந்தா.... தன் சகோதரியின் கவலையில் உடைந்துபோய்விட்டார்.

## 5

மறுநாளே பெரியவர்களாகக் கூடிப் பேசி முடிவெடுத்து, யுவனையும் லயாவையும் அழைத்தனர்!

என்ன பதில் கூறுவதென்றே புரியாத தவிப்பும், இயலாமையும் உள்ளே சென்ற லயாவிற்கு, சந்தா பாட்டியின் நிலைமை வேறு கவலை தருவதாய்!

இந்த நிலையில் அவள் மறுத்து, அதுவே அவருக்கு அதிர்ச்சியாய் மன உளைச்சலாய் மாறிவிட்டால் என்ன செய்வதென்ற கவலை உலுக்க, மௌனமாக நின்றிருந்தாள்.

பாட்டியைப் பார்க்கவென்று ராஜகோபாலும், அவள் தந்தை சுதர்சனமும் வேறு வந்திருந்தனர்.

ஆனால் முதலில் பேசியது ராஜவடிவவேலுதான்! யுவனின் மறு பதிப்பாய் வயதான தோற்றத்துடன் ஆறடி உயரத்திற்கு மேல் கம்பீரமாக வந்தவரை, ஏனோ முதல் பார்வையிலேயே அவளுக்குப் பிடித்திருந்தது.

அவர்களின் விழிகள் மட்டுமே வித்தியாசப்பட்டிருந்தன.... அவர் விழிகள் மென்மையும், கருணையும் சுமந்திருந்தன!

திடீரென்று அவர் குரல் அவளைக் கலைத்தது.

''லயா! யுவா! இந்த விஷயத்துல முடிவு பண்ண வேண்டியது நீங்க ரெண்டு பேரும்தான்!

''பாட்டி எங்க எல்லோருக்காகவும் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சு வச்சி, இத்தனை வருஷமாப் பிரிஞ்சிருந்த குடும்பத்தை சேத்து வைக்கணும்னு ரொம்ப ஆசைப்படறாங்க!

''இது எல்லாருமா சேர்ந்து ஆத்மார்த்தமா எடுத்த முடிவு! ஆனா, இது கட்டாயமில்லை! நீங்க ரெண்டு பேரும் யோசிச்சி முடிவு செய்யலாம்!''

''பிடிக்கலைன்னா ஓபனா சொல்லலாம்!'' டேக் யூவர் ஓன் டைம்! அவசரத்திலே முடிவெடுத்திட்டு அப்புறம் அவகாசத்துல அழக் கூடாது!'' இடையில் குறுக்கிட்டு முடித்தார் சுதர்சனம்!

அவன் யோசனையுடன் நின்றிருக்க, ''எனக்கு ஓகே! அவளைக் கேட்டுட்டு தேதி முடிவு பண்ணுங்க....''

உடனே நறுக்கத் தெறித்தாற்போல் உரைத்துவிட்டு, தன் பாட்டியிடம் மென்மையாக முறுவலித்தபடி, அந்த அறையை விட்டு வெளியேறினான் யுவன்!

அவளுக்கோ, அவனுடைய பதில் தந்த அதிர்ச்சியில், தேகமே நடுங்கத் துவங்கியது!

''என்ன லயா.... உன் முடிவும் சம்மதம்தானே?''

நந்தா பாட்டி கேட்கும்போதே, பாமா எழுந்து முன்னால் வந்தார்.

''அவ என்ன சொல்றது? அவங்க அப்பாவும் நானும் சொன்னா மறுக்கமாட்டா! பாட்டியும் விரும்பறாங்க! இவ்வளவு பேர் விருப்பத்துக்கு அவ மறுப்பா சொல்லப் போறா, ஏன்டா!' அவர் கேட்க மறுக்கவும் முடியாமல், ஒப்பவும் முடியாமல் அவள் தவிக்கும்போதுதான், சந்தா துணைக்கு வந்தார்.

''நோ மாமா! அவ யோசிச்சு பதில் சொல்லட்டும்.... கட்டாயப்படுத்தாதே.... நல்லா திங்க் பண்ணி அப்புறம் உன் முடிவை சொல்லுடா லயாம்மா!''

உடனே தலையசைத்துவிட்டு வேகமாக வெளியே வந்தபோது, யுவனை எங்குமே காணவில்லை!

▸ ▸ ▸



24 மணி நேரத்தில் நமது இதயம் 1,03,689 முறைகள் துடிக்கிறது. இரத்தம் உடலினுள் 16,80,00000 மைல்கள் சுற்றுகிறது. 23040 முறைகள் சுவாசிக்கிறோம். 3.5 பவுண்டு எடை உணவைச் சாப்பிடுகிறோம். 4800 சொற்கள் பேசுகிறோம். 750 தசைகளை அசைக்கிறோம். நகம் 0.000046 அங்குலம் வளர்கிறது.

- விஜயாம்பாள்,கிருஷ்ணகிரி.



மறுநாளே, யுவனும், ராஜவடிவேலும்வ மலேஷியா செல்லக் கிளம்பி விட்டனர்.

ஊருக்குப் புறப்படும்போது அவளருகே வந்தவன், ''பை பட்டிக்காடு!'' அடிக்குரலில் முணுமுணுத்துவிட்டுக் கிளம்ப, ஒரு இனம் புரியா சலனம் அவளுள்!

விழிகள்..... கூர்மையாய் விலகல் தன்மையுடனிருக்க, உதடுகள் மட்டும் கேலியாய் வார்த்தைகளை உதிர்த்ததை, அவளால் புரிந்து கொள்ள முடிந்தது!

இந்துவும் பாமாவும் பலவிதமாகப் பேசி அவளை ஒப்புக் கொள்ள வைக்க, பாட்டிகளிருவரும் பார்வையாலேயே தவிப்புடன் இறைஞ்ச.... அந்த வார இறுதியிலேயே அவள் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டாள்.

அடுத்தவாரம் அவர்கள் ஊருக்குக் கிளம்புகிறார்கள்!

அவள் சம்மதம் கூறியதும், அந்தக் குடும்பமே மகிழ்ந்து பெரும் விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

உள்ளூரிலிருந்து சில உறவுகளும், நட்புகளும் அழைக்கப்பட்டு, இந்த மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்து கொண்டனர்.

மலேஷியாவிற்குப் பேசியபோதோ, ராஜவடிவேலுக்கு மிகுந்த மகிழ்ச்சி!

உடனே 'சைட்'டிலிருந்து யுவனிடம் விபரத்தைத் தெரிவிக்க, மறுகணமே பாட்டிக்குத் தொடர்பு கொண்டான் அவன்.



பிறந்தது முதல் இறப்பதுவரை எறும்புகள் உறங்குவது இல்லை. உணவு இன்றி 100 நாட்கள் வரை எறும்புகள் உயிர்வாழும்.

– பி.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி.

அவர் பேசிவிட்டு லயாவிடம் கொடுக்க, அவளுக்கோ என்ன பேசுவதென்றே புரியவில்லை.

பரஸ்பரம் ஒருவரை ஒருவர் விரும்பாமல், குடும்பத்திற்காக.... அதன் இணைவிற்காக.... பெரியவர்களின் விருப்பத்திற்காக.... பாட்டிகளின் சந்தோஷத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் திருமணத்தை, மனம் ஏற்க மறுத்து உறைந்திருந்தது!

போனில் அவனுடைய ஆழ்ந்த குரல், அவளைக் கலைத்தது!

''ஏய் பட்டிக்காடு.... சம்மதம் சொல்லிட்டியாமே! ஒரு வழியா இந்த மாமா பையனை உனக்குப் பிடிச்சிருக்கா? இல்லை.... நல்ல வசதியானவன்னு ஒத்துக்கிட்டியா?''

''ம்.... மண்ணாங்கட்டி.... ஐ ஹேட் யூ!''

அவன் சுள்ளென்று சீற, ''மண்ணாங்கட்டியா? அது உன் தலையில இருக்கிறதாச்சே! எனக்குக் கூடத்தான் உன்னைப் பிடிக்கலை! அதுக்காக இத்தனை 'ஐ ஹேட் யூ'வா சொல்றேன்?'' அழுத்தமாகக் கேட்டான்.

''பிடிக்கலைன்னா முதல்லே ஏன் ஒத்துக்கிட்டீங்க?''

''இது பாட்டிக்காக.... ப்யூர்லி அவங்க மன நிம்மதிக்காக நடக்கற ஒரு கல்யாணம்! எப்படி இருந்தாலும் யாரையாவது கல்யாணம் செஞ்சிக்கிட்டுத்தான் ஆகணும்!''

''தெரியாத ஏஞ்சலை விட, தெரிந்த டெவிலே மேல்!'' அப்படின்னு ஒரு ப்ராவர்ப் இருக்கு தெரியுமா? அதான் ஓகே சொன்னேன்''



''யூ.... யூ....சே!''

''யெஸ்.... கல்யாணத்துக்கு தேதி கூடக் குறிச்சாச்சு! என்கிட்ட கொஞ்சம் பாசமாக இருக்கிற மாதிரி பாட்டி முன்னாடி நடிக்கப் பழகிக்க!

''கல்யாணத்துக்கு முதல்நாள் நான் அங்கே இருப்பேன்! பை!''

போனை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது, எதிரிலிருந்து அவளுடைய போட்டோ அவனைப் பார்த்து சிரித்தது!

யுவனுக்கே, பெரும் வியப்பாய்!

திருமணம், காதல், பெண்கள் இதிலெல்லாம் ஈடுபாடின்றி வெறுத்து வந்தவனை, இவள் எப்படி ஈர்த்தாள்?

இதுதான் விதி என்பதா....? இல்லை.... வலிய வந்து மேலே விழுந்த பெண்களுக்கு நடுவே தன்னைப் புறக்கணித்த ஒருத்தியின் பாராமுகமே தன்னை ஈர்த்ததா?

பல குழப்பக் கேள்விகளுடன் மாரியம்மன் கோவிலுக்கு முதன் முதலாகச் சென்றவனுக்குள், ஏதோ ஒருவித அமைதியும் இதமும் பரவுவது போல்!

எந்த வேண்டுதலுமின்றி சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்தால், நண்பர்கள் அழைக்க அதற்குப் பிறகு ட்ரீட், பார்ட்டி என்று பொழுது போனது.

▸ ▸ ▸

மறுவாரமே, பாமாவும், லயாவும் சென்னை திரும்பினர்.

திருமணம், பாட்டியின் ஊரிலேயே நடத்த ஏற்பாடு செய்யப்பட. புடவை, நகைகள் வாங்க, ராஜகோபாலும் விஜயாவும் வேதாரண்யத்திலிருந்து வந்திருந்தனர்.

சந்தா தன் சகோதரியுடன் இருக்க விரும்பியதாலும், டாக்டர் அவரை அலையக்கூடாதென்று அறிவுறுத்தியதாலும், ஊரிலேயே தங்கிவிட்டார்.

பத்திரிகை அடிப்பது, திருமண நகைகள், புடவைகள் வாங்குவது, உறவு நட்புகளை அழைப்பது என அந்த ஒரு மாதமுமே, மிகவும் அலைச்சலாக இருந்தது.

அந்த மாதம் ரிசல்ட் வந்துவிட, டிஸ்டிங்ஷனில் தேறி இருந்தாள் லயா!

இப்போதெல்லாம், அவளுக்குள் இனம் புரியா ஒரு மாற்றம் தெரிவதாய்!

யுவனைப் பற்றி எண்ணம் போதெல்லாம், ஊடலுடன் சிலிர்க்க ஆரம்பித்திருந்தது உள்ளம்!

"இதைத்தான் மஞ்சள் கயிறு மேஜிக் என்பதா? தாய் தந்தை பார்த்து செய்து வைக்கும் திருமணத்தில் கூட இப்படித்தான் நேசம் வருமா?" குழம்பியது நெஞ்சம்!

தன் பெற்றோருடன் வந்து அவளைப் பார்த்துச் சென்ற சுந்தரின் தங்கை ரோகிணிக்கோ, தன்னை விட அவள் பேரழியாக இருந்ததில் பெரிய குறை!

திருமணத்திற்கு இன்னும் பத்து நாட்கள் இருந்த நிலையில்தான் ஒரு நாள் யுவன் அவளிடம் பேசினான்.

தன் தோழன் ஒருவன் வருவதால், அவனிடம் சில பொருட்கள் அனுப்பி இருப்பதாகக் கூறினான்.

பெயருக்கு நன்றியுரைத்துவிட்டு போனை தந்தையிடம் கொடுத்துவிட்டு, தோட்டத்திற்கு சென்றவளுக்குள், இனம் புரியாத ஒருவித தவிப்பும் விரக்தியும் பரவின!

தன்னை பிடிக்கவில்லை என்றாலும், அவன் பிறருக்காக நடிப்பது புரிந்தது! ஏனோ, பொம்மலாட்டத்தில், நூலில் கட்டி ஆட்டுவிக்கப்படுகின்ற தலையாட்டி பொம்மையாய் மாறிவிட்ட உணர்வு!

அந்த நிமிடம் யுவனுடைய முகமும், கம்பீரமும், அசாத்திய உயரமும், அலட்சியப் புன்னகையும், எப்போதாவது குறிஞ்சிப் பூ மலரும் அபூர்வ மலர்ச்சியும், நெஞ்சிற்குள் நீங்காமல் தடம் பதித்தன!

இவனிடம் என்ன குறை காண்கிறேன் நான்.... இவனை அடைய ஏன் இப்படி துக்கப்படுகிறேன்!

மனம், வேறு உண்மை சொல்கிறதே! அவன் தன்னை விரும்பவில்லை என்று வெறுப்பேற்றிக் கொண்டே இருந்ததால் வந்த தகிப்பா?

சமீப காலங்களாகவே அவன் நினைவுகள் அதிகமாகத் தன்னை ஆட்கொள்வதும், அவனுடைய ஒவ்வொரு அசைவையும் வெறுப்பென்றே நினைத்து நெஞ்சம் ஆழமாய் பதியன் போட்டு வைத்திருப்பதையும் எண்ணும்போதே, தவித்துப் போனாள் அவள்!

"நீ எங்கிருந்து வந்தாயட.... என்னைப் பாடுபடுத்த...." கோபமாய்



கேள்வி கேட்டது இதயம்!

ஒருவனைப் பார்த்த இரண்டு மாதங்களுக்குள் காதல் வந்துவிடுமா? அதுவும் அவன் கண் பார்வையிலிருந்து விலகிய பின்பும்!

"கடவுளே! அவனை வெறுப்பதாக ஒரு மாயக் கனவிலிருந்தேனே.... அதிகப்படியான வெறுப்பு அதிக அன்பாக மாறிவிட்டதா?"

தனக்குள்ளேயே கேட்க நிறைய கேள்விகள் அவளிடம் இருந்தன!

புரியாத புதிராய் உணர்வுகள் தத்தளித்தன!

# 6

மறுநாளே, யுவனுடைய நண்பனின் குடும்பத்திலிருந்து அவளைப் பார்க்க வந்திருந்தனர்.

"அந்த ஆர்டிஓ ஆனாலும் இவ்வளவு கடுமையா இருக்கக் கூடாது?"

"ஏன்? என் பண்ணினார்?"

"ரோடு ரோலர் ஓட்டுறவனை மெசின்ல '8' போட்டு காண்பிக்கச் சொல்றார்"

- பழ.கவிதா சிவமணி, ஈரோடு.



ஒரு சிறு சூட்கேஸை அவர்கள் அளித்துவிட்டு, டிபன் காபி சாப்பிட்டுவிடைபெற, மெதுவாக அதைத் திறந்தாள் லயா!

உள்ளே ஒரு அழகிய வாட்ச், சென்ட் பாட்டில்கள், ஒரு நகைப்பெட்டி எல்லாம் இருந்தன.

அந்த நகைப் பெட்டியைத் திறந்தால் சிறு வைரத் தோடும், மெல்லிய சங்கிலியில் கோர்த்த வைர டாலரும், கம்பிகளில் இணைக்கப்பட்ட வைர பிரேஸ்லெட்டும் அதில் இருந்தன!

உடனே மகிழ்ச்சியில் இதயம் மௌனச் சிறகசைத்து படபடக்க, உடனே அதை அடக்கியது ஒரு குரல்!



"எங்க வீட்லேயே திருடிட்டு ஏன் எங்கிட்டேயே கையெழுத்து கேட்கிற?"

"நாளைக்கு இதை வெச்சுத்தான் இன்ஸ்பெக்டர் மாமூலை சொல்லுவாரு!"

- பழ.கவிதா சிவமணி, ஈரோடு.

''இது காதல் பரிசு இல்லை.... மற்றவர்களை திருப்திப்படுத்த அவன் ஆடும் நாடகம்.... அதற்கான விலை இந்த பேதை மனதின் நேசம்....''

பலப்பல எண்ணி துலுங்கியது உள்ளம்!

பின்னோடு வந்து நின்று பார்த்த பாமாவோ, உற்சாகத்துடன் நகை செட்டை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு சென்றார்.

அதற்குப் பிறகு அன்று எல்லாவற்றையும் அடுக்கி வைப்பதற்கும், அழகு நிலையத்திற்கு சென்று வரவுமே நேரம் சரியாக இருந்தது.

இரவு கிளம்பி ஊருக்குச் சென்றபோது, போன முறை இருவரும் அங்கு போன ஞாபகமும், பாட்டியின் ட்வின் சிஸ்டரைத் தேடிக் கண்டுபிடிக்க எடுத்த முயற்சிகளும், மறவாமல் கண்முன் வந்தன.

காலையில் வீட்டிற்குப் போனபோது, உற்சாகத்துடன் வரவேற்ற சந்தா பாட்டி நன்கு தேறி இருந்தார்.

சுந்தரின் குடும்பமும், அன்றே வந்துவிட்டனர்.

நந்தா பாட்டியும், கனகசபாபதி தாத்தாவும் உற்சாகத்தில் துள்ளிக் குதிக்காத குறையாக வலம் வந்து கொண்டிருந்தனர்.

அனைவருமே மகிழ்ச்சியுடன் திருமணக் காரியங்களில் பங்கேற்க அவள் மட்டுமே சுருதி சேராத் தம்புராவாய்த் தனித்திருந்தாள்.

இந்து, அவளுடனே வந்து தங்கிவிட்டாள்.

நாட்கள் விரைய, திருமணத்திற்கு இரு நாட்களுக்கு முன்பு வந்து, வீட்டிலேயே மெஹந்தி இட்டுவிட்டனர், அழகு நிலையப் பெண்கள்!

மறுநாள் காலையில் யுவனும், ராஜவடிவேலுவும் வருவதாக



அறிந்ததுமே, அவளுடைய இதயம் வேகமாய் தாளம் தப்பி துடிக்கத் துவங்கியது!

அன்றிரவு... உறக்கமின்றித் தவித்த நேரங்கள் பாதி என்றாலும், மீதிப் பொழுதுகள் அவனைப் பற்றிய கனவுகளை இனிதாய் சுமந்தன!

அவனுடைய ஒவ்வொரு அசைவும், ஒற்றைப் புருவ ஏற்றமும், உதட்டுச் சுழிப்பும், கூர்மையாய் அளவெடுக்கும் கண்களும், அவளுடைய உணர்வுகளை தாபத்துடன் உரசின!

கனவின் ஆதிக்கத்தில் மென்னகையுடன் சயனித்திருந்தவளை, மெல்ல உசுப்பி எழுப்பினாள் இந்து!

''லயா! உன் ராஜகுமாரன் வந்தாச்சு! எழுந்திருக்கலையா? உன்னைத் தான் தேடி அலை பாஞ்சுட்டு இருக்கு அவர் பார்வை! பாவம்...''

''சீக்கிரம் எழுந்து குளிச்சிட்டு வா! அவரும் எவ்வளவு நேரம்தான் காத்திட்டிருப்பாரு!''

அதற்குள், பாமாவே அவசரமாக வந்துவிட்டார்.

''லயா! சீக்கிரம் எழுந்து குளிச்சிட்டுவா! மாப்பிள்ளை வந்துட்டாங்க!'' உற்சாகத்துடன் கூறிவிட்டு ஓடினார்.

தேகமெங்கும் இன்ப அவஸ்தையில் படபடக்க, ஒவ்வொரு செல்லும், அவனுடைய ''பட்டிக்காடு!'' என்ற சீண்டலுக்காகத் தவித்தன!

அவசரமாகக் குளித்துவிட்டு புடவை அணிந்து வெளியே சென்றால், அவன் சுவடே இல்லை!

''வாங்க மாமா!'' என்று ராஜவடிவேலுவை வரவேற்றபோது, அவர் தான் கிண்டலடிக்க ஆரம்பித்தார்.

''என்னம்மா? நீயும் யுவாவும் 'ஹைட் அண்ட் சீக்' விளையாடறீங்களா? அவன் காத்திட்டிருந்தப்ப, நீ குளிச்சி ரெடியாகறதா சொன்னாங்க! இப்ப நீ வந்துட்டே.... அவன் குளிக்கப் போயிட்டான்!''

அவருடைய கிண்டலில் முகம் சிவந்து நின்றுவிட்டவள், ''ஏதாவது சாப்பிட்டீங்களா மாமா?'' பரிவுடன் விசாரித்தாள்.

உடனே விழிகள் நிறைய அவளையே ஏறிட்டவர், ''ம்.... காபி சாப்பிட்டாச்சு.... டிபன் யுவன் வந்தப்புறம்தான்! இதே மாதிரி நீ அவனைப் பாசமா பாத்துக்கணும்மா!''

''அம்மா இல்லாமல் வளர்ந்தவன்! கொஞ்சம் முரட்டுத்தனம் அதிகம்தான்! அதனால நீதான் அனுசரிச்சிப் போகணும்!''

அவர் முடிக்கும் முன்பே, அருகிலிருந்த சந்தா இடைமறித்தார்.

''தப்பா ஏதும் ஆகிடக்கூடாதேன்னுதானே உறவுக்குள்ளேயே பாத்து முடிச்சிருக்கோம் வேலு! எல்லாம் நல்லபடியா நடக்கும்!''

நந்தாவும் வாஞ்சையுடன் பேத்தியையே நோக்கியபடிப் புன்னகைக்க, இவர்களின் நம்பிக்கையை சிதறவிடாமல் காக்கும் பொறுப்பு, இப்போது தன் வசம் இருப்பதை உணர்ந்தாள் அவள்!

அதற்குள் யுவனே வந்துவிட, ஏனோ அவனை நிமிர்ந்து பார்க்கவும் விடாமல், வெட்கம் அவளை அலைப்புறச் செய்வதாய்! தன் உள்ளம் கவர் கள்வனாய் அவன் மாறிவிட்டது இன்று புரிய தேகம் தடதடத்தது!

மனம் பேசும் மௌன மொழிகள், விழிகளின் வழியாகக் கசிந்துவிடப் போகிறதோவென்ற பயத்தில், பார்வையை அவள் உயர்த்தவேயில்லை!

அதற்குள் அருகில் வந்துவிட்டவன், ''என்னை நிமிர்ந்து பார்க்கக் கூட பிடிக்கலையா அம்மா, பாட்டி எதிரிலேயாவது கொஞ்சம் நடிக்கலாமே!'' அடிக்குரலில் சிதறினான்.

சட்டென்று தேகம் விரைப்புற்று நிமிர, அதுவரை இருந்த இதமும் இனிமையும், அவளிடம் தொலைந்து போயின!!

''நீங்க அனுப்பிய கிப்ட்க்கு தேங்க்ஸ்....''

ஒருவித இறுக்கத்துடன் அவள் கூற ''வெல்கம்! அதைக் கொஞ்சம் சிரிச்சிட்டே சொல்லி இருக்கலாம்! ரெண்டு பாட்டியும் நம்மையே பாக்கறாங்க.... இயல்பா இரு!'' காதருகில் ரகசியம் பேசுவதுபோல் அறிவுறுத்தினான்.

''யுவா! லயாவோட பேச உனக்கு நிறைய இருக்கும்! வெளியே அழைச்சிட்டுப் போயேன்! டிபன் சாப்பிட்டப்புறம் ஜாலியா போயிட்டு வாங்க!''

நந்தாதான், விவரம் புரியாமல் இருவரையும் இணைத்து அனுப்பி வைத்தார்.

ஆனால் வழி முழுவதும் பேசாமல் அவள் 'உம்'மென்ற வர, அவனும் எதுவும் கூறவில்லை!

அருகிலிருந்த சிறுமலைக் கோயில் வாசலில் கார் நின்றபோதுதான், சுய நினைவே வந்தது அவளுக்கு!



மெல்ல இறங்கி, மலை மேலிருந்த முருகனை தரிசித்தபோது, சிறிது இதமானது நெஞ்சம்!

இருவரும் பிரகாரத்தில் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று ''தேங்க் யூ'' என்றான் யுவன் ஆழ்ந்த குரலில்!

ஒன்றும் புரியாமல் நிமிர்ந்தவள் ''எதுக்கு....!'' என்றாள் குழப்பத்துடன்!

''பாட்டிகளோட விருப்பத்துக்காக, பெரியவங்களோட உணர்வுகளை மதிச்சி இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சதுக்கு!''

மென்குரலில் கூறிவிட்டு, யோசனையுடன் நிமிர்ந்து தூரத்தில் தெரிந்த அஸ்தமனத்தையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அவனிடம் பேச நினைத்தாலும், அந்த முகமும் அதிலிருந்த தீவிர உணர்வும், அவளை தடை செய்தன.

அந்த நிமிடம், அவனைப் பார்த்தபோது, அந்த விழிகளில் சிறு குழந்தை போல் ஒருவித ஏக்கம் தெரிவதாய்!

எதிரில் இருப்பவர்களை குத்தீட்டியாய் ஊடுருவும் கூரிய விழிகளும், அழுத்தமான முகவாயும், கூரிய நாசியும், கம்பீரமாக செதுக்கினாற்போன்ற முகமும், அவளுக்குள் மூர்க்கமாய் நுழைந்து, இதயச் சுவரில் அழுத்தமாய்ப் பதிந்தன!

இவனை ஏன் முன்பு நான் வெறுத்தேன்.... மறுத்தேன்?

விடைதெரியாக் கேள்வியுடன் அமைதியாகத் தனக்குள் போராடியபடி, அங்கு தெரிந்த உருவத்தை ரசிக்க ஆரம்பித்தாள் லயா!

பிறகு ''கிளம்பலாமா?'' என்ற அவன் குரல் இதயம் தீண்டி உசுப்ப, மெல்ல எழுந்து பின் தொடர்ந்தபோது, வெகு இதமாய்!

வீடு வரும்வரை அவனும் எதுவுமே பேசாததால், இருவருமே தத்தம் நினைவுகளில் மூழ்கி இருந்தனர்!

# 7

வீட்டிற்குள் வந்ததுமே, ஆவலுடன் ஓடிவந்து வரவேற்றாள், சுந்தரின் தங்கை ரோகிணி!

''அண்ணா....'' என்றபடி ஓடிவந்து அவன் தோளில் தொற்றிக் கொண்டவளை, ''எப்பம்மா வந்தே?'' என்றபடி அணைத்துக் கொண்டான் அவன்.

''இப்பத்தாண்ணா! இந்தப் பட்டிக்காட்டுல எப்படி இருக்கப் போறேனோ தெரியலை! கல்யாணம், கறி சாப்பாடு, வரவேற்பு அது இதுன்னு ஒரு வாரம் தங்கணுமாமே!'' அலுத்துக் கொண்டாள் அவள்.

''ஆமாம்.... இவ அப்படியே சிட்டியில பிறந்து வளர்ந்தவ! வேதாரண்யமும் இது மாதிரிதானே இருக்கு.... ரொம்ப அலட்டாதடி!''

சுந்தர் கேலி செய்ய, ''பாருங்கண்ணா இந்த சுந்தரை!'' என்றபடி சலுகையாக யுவனிடம் ஒட்டிக் கொண்டாள்.

''சுந்தர் அவளை ஏன் வம்பு இழுக்கறே... குழந்தைதானே!''

பாட்டி பரிந்து வர ''அடப்பாவி! நீ குழந்தையா? நீங்களே கொஞ்சம் பாத்து சொல்லுங்கண்ணி உண்மையை! ஒரு ஃபீடிங் பாட்டில்தான்கையிலே இல்லை!''

சுந்தர், லயாவிடம் கேட்டான்.

அவன் மென்மையாகச் சிரித்துவிட்டு விலக, ஒரு வலிய கரம் அவளை நிறுத்தியது.

இந்த முதல் தீண்டலில் சிலிர்த்து நிமிர்ந்தபோது, ''நம்ம பட்டிக்காடுகிட்டே தானே கேக்கணும்.... இந்தப் பட்டிக்காட்டுல எப்படி இருக்கிறதுன்னு!'' குறும்புடன் அடிக்குரலில் கேட்டுவிட்டு, கையை விட்டுவிட்டான்.

''அண்ணா! என்ன அதுக்குள்ளே ரகசியமா? அண்ணி! யுவாண்ணன் எனக்குதான் முதல்லே அண்ணன்.... அதுக்கப்புறம்தான் உங்களுக்கு ஹஸ்பெண்ட்.... புரியுதா?''

''எனக்குதான் அவர்கிட்டே உரிமை அதிகம்! என்னை முதல்லே அனுசரிச்சி காக்க பிடிச்சிக்கங்க!'' பொறாமையுடன் வந்தது ரோகிணியின் குரல்!

''உனக்கு அதெல்லாம் ரொம்பப் பழக்கமோ? எனக்கு இந்த காக்கா, குருவி பிடிக்கல்லாம் தெரியாது.... இயல்பா இருந்துதான் பழக்கம்!''

சுள்ளென்று கூறிவிட்டு லயா விலகிச் செல்ல, ''குட் ஷாட்! உனக்கு வீட்டுக்கு ஒரே பொண்ணுன்னு ரொம்ப செல்லம் குடுத்து குட்டிச் சுவராக்கி வெச்சிருக்காங்க!''

''அண்ணிதான் உனக்கு சரி! முதல் பஞ்ச்சே சூப்பர்!'' விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான் சுந்தர்.



''பாருங்கண்ணா இந்த சுந்தரையும் அண்ணியையும்! எனக்கு டிரேட் இன்சல்ட்.... உங்க கல்யாணத்துக்கு வந்ததுக்க இதுதான் பரிசா?''

கண்களைக் கசக்கியபடி, அவள் நீலிக்கண்ணீர் வடிக்க, ''ஏய்.... அவங்க உன்னை சும்மா கேலி பண்றாங்க....'' சமாதானப்படுத்திவிட்டு உள்ளே விரைந்தான் யுவன்.

அங்கு லயா இந்துவுடன் பேசிக் கொண்டிருக்க ''ஒரு நிமிஷம்....'' என்று அவன் தனிமையில் அழைத்தான்.

சிறு வெட்கத்துடன் இந்து விலக, அவளருகில் வந்தவன், ''ரோகிணி சின்னப்பொண்ணு பாவம்! மெச்சூரிட்டி இல்லாதவ! வீட்டுக்கு ஒரே பொண்ணு.... செல்லம்!.... அவகிட்ட கொஞ்சம் பொறுமையா....'' அவன் முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் லயா!

''நான் கூட சின்ன பொண்ணுதான்.... வீட்டுக்கு ஒரே பொண்ணு.... ரொம்ப செல்லம்.... ஆனா இப்படி இல்லை! என் உணர்வுகளை இங்கே யாரு மதிக்கிறா....?''

நறுக்குத் தெறித்தாற்போல் பட்டென்று கூறிவிட்டு விலகிச் சென்றவளையே, யோசனையுடன் தொடர்ந்தது யுவனின் பார்வை!

▸ ▸ ▸

மறுநாள் முழுவதும் உறவுகளின் வருகை, சடங்குகள் எனப் போயிற்று'

அன்று மாலையில், ரிசப்ஷனில் தங்கத் தாமரையாய் ஒளிர்ந்தபடி நின்றவளை, பொறாமையுடன் கூர்ந்தது ரோகிணியின் பார்வை!

ஆனால் முகம் மட்டும் சிறிது வாட்டமாகத் தெரிய, வேகமாக மேலே ஏறி வந்தவள், ''என்னண்ணா! அண்ணிக்கு சிரிக்கவே தெரியாதா? உம்முன்னு இருக்காங்க! போட்டோவுக்கு அசிங்கமாக இருக்கப் போவுது!''

'அண்ணி! எங்கண்ணன் மாதிரி ஒரு ப்ரின்ஸைக் கல்யாணம் பண்ணிக்க உங்களுக்கு கசக்குதா என்ன? புண்ணியம் செஞ் சிருக்கணும்! என்கிட்ட மட்டும் சொல்லியிருந்தா நான் உங்களை விட அழகா சூப்பரா பொண்ணு பாத்திருப்பேன்!'

அவள் நக்கலாகக் கூற, அதை விளையாட்டாக எடுத்து யுவன் சிரிக்க, கொதித்துப் போனாள் லயா!

''அப்படி அழகா வேற யாரையாவது பாத்திருக்க வேண்டியதுதானே!'' அடிக்குரலில் அவனிடம் சீறினாள்.

''ஏய்.... ஜஸ்ட் ஃபார்... ஃபன்.... இதுக்கு ஏன் இவ்வளவு கோபம்? அழகாப் பாத்திருக்கலாம்தான்... பாட்டிக்கு அது புரியலையே....''

அவனும் இலகுவாகக் கேலி செய்ய, அவளுக்கு ரோகிணியின் விஷமத்தனம் புரிந்தது.

அந்த நிமிடத்திலிருந்து அவன் முகம் இறுகியே இறுக்க, இந்து மேலே வந்து அவளை இயல்பாக இருகக்கும்படி எச்சரித்தும், பயனின்றிப் போனது!

திருமண நாளன்றும், நாத்தனார் என்ற முறையில் அருகிலேயே இருந்து விளக்கு பிடித்துக் கொண்டிருந்தவளுடைய அலட்டலும், பேச்சும் தாங்க முடியாமல் போனது, லயாவிற்கு!

திருமணம் இனிதாய் முடிய, ஒவ்வொரு விஷயத்தையும் குறையாகவே கூறிக் கொண்டிருந்தாள் ரோகிணி!

சுற்றி வரும்போது தழையத் தழைய கட்டியிருந்த புடவையைப் பார்த்து விட்டு ''இந்த அண்ணிக்கு புடவையே கட்டத் தெரியலைண்ணா!'' யுவனிடம் சலித்துக் கொண்டாள் ரோகிணி!

மெட்டி அணிவிக்கும்போது அளவு சரியின்றி, யுவன் அதை அவள் விரல்களில் அணிவிக்கப் போராட, உடனே ஆரம்பித்துவிட்டாள்.

''என்ன அண்ணி! ஒரு மெட்டியக் கூட சரியா அளவு பார்த்து வாங்கமாட்டீங்களா?''

அதிலும் குறை கண்டுபிடித்து லயாவையே குற்றம் கூற, சுந்தர்தான் அதட்டினான்!

''ஏய் லூஸ்.... வாயைக் கொஞ்சம் மூடறியா? இது நம்ம அம்மா வாங்கினது.... அளவு சரியில்லைன்னா அவங்களைத் திட்டு!'' என்றதுமே அமைதியானாள் அவள்.

சடங்குகளின்போதும், சாப்பிடும்போதும் அவளுடைய மேக்கப், உடையலங்காரத்தைப் பற்றியும் கிண்டல் செய்து கொண்டே இருக்க, லயாவின் பொறுமை தொலைந்து போனது.

''நான் இந்த மாதிரி எல்லாம் நகைய அள்ளிப்போட்டு பட்டிக்காட்டுத்தனமா ட்ரெஸ் செஞ்சிக்க மாட்டேன்ப்பா! என் கல்யாணத்துல காக்ரா சோளிதான்!''

உதட்டுச் சுழிப்புடன் பீற்றிக் கொண்டவளுக்கு, சள்ளென்று பதில் கொடுத்தாள் அவள்.

''உன் அண்ணனைத் தடுத்திருக்க வேண்டியதுதானே.... இந்தப்



பட்டிக்காட்டை ஏன் கல்யாணம் செஞ்சிக்கறீங்கன்னு! வேற யாராவது அல்ட்ரா மாடர்னா பாத்திருக்கலாமே!''

அதற்கு பதில் கூற முடியாமல் ரோகிணி திணறி விழிக்கும்போதே, சுந்தர் ''வெல்டன் அண்ணி.... சரியான பதிலடி!'' என்று கைதட்டி சிரித்தான்.

உடனே கோபத்துடன் ரோகிணி விலகிச் செல்ல, ''இந்த பட்டிக்காட்டைத் தானே எனக்கு பிடிச்சிருக்குன்னு, ரோகிணிகிட்டே வேணா ஒரு பொய் சொல்லவா?''

அடிக்குரலில் அவள் காதருகில் குனிந்து சீண்டலாக யுவன் கேட்டு, கொதிப்புடன் நிமிர்ந்தவள், ''வேண்டாம்! பொய்யான ஒரு காதல் எனக்குத் தேவையில்லை!'' பற்களைக் கடித்தபடி சீறிவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

பிறகு தொடர்ந்த நிமிடங்களில், இருவருக்கும் இடையே ஒரு பெரிய இரும்புத் திரை ஜனித்திருந்தது!

▸ ▸ ▸

திருமணத்தைத் தொடர்ந்த சடங்குகள் எல்லாம், இனிதே முடிந்தன.

இரு பாட்டிகளும் மற்றும் உறவுமுறை பெரியவர்களும் ஆசிர்வதிக்க, அவள் முதலிரவு அறைக்குள் நுழைந்தபோது, இறுகிய முகத்துடன் அங்கு காத்திருந்தான் யுவன்!

ஜன்னலில் சாய்ந்து கைகளைக் கட்டியபடி எதிர்நோக்கி இருந்தவனை மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள் லயா.

அவன் நின்றிருந்த கோலமும், இடுங்கிய பார்வையும், அவளுக்குள் பெரும் பயத்தை விதைப்பதாய்!

மெல்ல பால் சொம்பை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது, ''உட்காரலாம்'' என்பதுபோல் சைகை செய்தவன் யுவன்.

அவள் அமர்ந்ததும் சிறிது நேரம் கழித்து அருகே வந்தவன், ''லுக் லயா! நீ ஒரு விஷயத்தைப் புரிஞ்சிக்கணும்! நம்ப கல்யாணம் நான் விரும்பி ஏத்துக்கிட்டதில்லை! ப்யூர்லி பார் அவர் பேமிலிக்காக நடந்த ஒரு ஒப்பந்தம் இது!

''பாட்டிகளோட விருப்பம்.... பல வருடங்களுக்கு முன்னாடி பிரிஞ்ச குடும்பத்தை இணைக்கணும்கிற கட்டாயம்.... எல்லாமா சேர்ந்துதான் என்னை இந்த திருமணத்துக்கே ஒத்துக்க வச்சிது!

''எனக்கு கல்யாணம், காதல், பெண்கள், குடும்பம் இதெல்லாம் அவ்வளவு ஈடுபாடு கிடையாது! பாக்கப்போனா பெண்கள் மேல பெரிசா நம்பிக்கையும் கிடையாது!''

அவன் முடிப்பதற்குள் ''அப்போ ஏன் பாட்டியோட விருப்பத்துக்கு மட்டும் இவ்வளவு மதிப்பு குடுத்து இப்படி ஒரு முடிவை எடுத்தீங்க? அவங்களும் பெண்தானே!'' சுள்ளென்று கேட்டாள்.

''ம்! அவங்க பெண்தான்! ஆனா, அந்த ஜெனரேஷன், தான், தன் கணவர்னு உண்மையா ஆத்மார்த்தமா வாழ்ந்தாங்க.... அதுக்கப்புறம் அந்த ஜெனியூனிட்டி எல்லாம் தொலைஞ்சு போச்சு!

''காதலனுக்காக கணவனை கொலை செய்யறது.... சுயநலத்துக்காக கணவனை ஏமாத்திட்டு ஓடிப்போறது.... கணவனுக்கு துரோகம் செய்யறது எல்லாம் அதிகமாயிடுச்சி!

''யாரையும் நம்பக் கூடாதுங்கறதுதான் எனக்கு கிடைச்ச பாடம்! ஆனா, பாட்டி, அப்பாவோட விருப்பத்துக்க மதிப்பு குடுக்க வேண்டியதாப் போச்சு! பாட்டியோட ஜீன் கொஞ்சமாவது அவங்க பேத்திக்க இருக்கும்கிற சின்ன நப்பாசை தான்!''

தோளைக் குலுக்கி அலட்சியமாக அவன் முடிக்க, அவளுக்கோ பெரும் தகிப்பாய்!

''ஏன்? ஆண்கள் தப்பே செய்யறதில்லையா? இதே மாதிரி மனைவிக்கு துரோகம் செய்யற கணவன்.... பழைய காதலிக்காக மனைவியைக் கொன்னவன், எல்லோரும் உங்க ஆண் இனத்திலயும் இருக்காங்க!

''ஆனா அதைவச்சு எல்லா ஆண்களையும் மோசம்னு நான் குத்தம் சொல்ல மாட்டேன்! பத்து பர்சண்ட் பேர் தப்பு பண்ணினதுக்கு மொத்தமா எல்லாரையும் மோசம்கிறது தப்பு!''

ஆணித்தரமாக அவள் முடிக்க, ''ம்.... என்னை பொறுத்த வரைக்கும் பெண்களைப் பத்தின என் கணிப்பு மாறப் போறதில்லை! ஆனா நீ என் அத்தை பெண்ணாச்சே.... குடும்பத்துல எந்தப் பிரச்னையும் வராதுன்னுதான், இந்தக் கல்யாணத்துக்கு சரின்னு சொன்னேன்!''

''பாவம்.... ஏமாறப் போறீங்க!''

அவள் நக்கலாக உரைக்க, ''ஏய்.... என்ன சொல்றே!'' என்றபடிக் கோபமாக அருகில் வந்தான் அவன்!

அவள் பதில் கூறாமல் மௌனமாக அமர்ந்திருக்கவே, ''ஏன்.... உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லையா?'' அடிக்குரலில் வினவினான்.



காலையிலிருந்து கேட்ட ரோகிணியின் நக்கல் வார்த்தைகளும், இப்போதைய அவனது பேச்சும், தன் உணர்வுகளுக்கு இங்கு மதிப்பில்லையாவென்ற எரிச்சல் உணர்வும் சேர்ந்து கொள்ள, ''ஆமாம்.... இஷ்டமில்லை!'' பட்டென்று முடித்தாள்.

உடனே, விழிகள் சிவந்து தேகம் இறுகி நிமிர்ந்தவன் ''ஏன்.... நீயும் வேற யாரையாவது விரும்பறியா?'' ஆழ்ந்த குரலில் வினவினான்.

இத்தனை நேரம் தன்னைக் காயப்படுத்தி பெண்களைப் பற்றித் தவறாகவே கணித்த சீற்றத்தில் ''ஆமாம்!'' வேண்டுமென்றே கூறிவிட்டாள்.

மறுகணமே அவனிடம் அடிபட்ட மிருகத்தின் சீற்றமும், கொதிப்பும் தெரிய, ''ஏய்.... இதை முன்னாடியே சொல்றதுக்கென்ன?'' சப்தமாக இரைந்தான்!

உள்ளூர ஒரு விதிர்ப்பு ஓட, நான் கூறியதுபொய் என்றும் உன்னை வெறுப்பேத்தவே அப்படிச் சொன்னேன் என்றும் மறுக்க எண்ணினாலும், அவன் அடுத்துக் கூறிய வார்த்தைகள் அவளை ஒடித்துப் போட்டன.

''நான் தப்புப் பண்ணிட்டேன்.... ஐ ஹேட் யூ!'' அழுத்தமாகக் கூறிவிட்டு அருகிலிருந்த சோபாவில் பொத்தென்று படுத்து, இறுகக் கண் மூடிக் கொண்டான் அவன்.

அவளுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை!

தன் ஈகோவையும், தன்மானத்தையும் விட்டுவிட்டு அவனிடம் கெஞ்சவும் மனமில்லை!

வெட்கச் சிவப்பில் நாணி மலர்ந்து சிலிர்த்திருக்க வேண்டிய அவளின் தேகம், வெளிறி உலர்ந்து சருகாகிவிட, மெல்லச் சரிந்தவள் அப்படியே உறங்கிவிட்டாள்.

ஆனால் யுவனுக்குத் தான் உறக்கமே வரவில்லை. தன் வாழ்க்கையை மற்றவர்களுக்காக தாமே அழித்துக் கொண்டோமா.... மனம் சிதைந்து உலைக்களமாகியிருந்தது!

சமீப காலங்களாக அவனறியாமலே இளகி மென்மையாகி அவள் மீது கனிந்திருந்த நேசம்..... இன்று வறண்ட பாலையாகிவிட, இதயத்தில் வெறுப்பும் விரக்தியுமே தடம் பதித்திருந்தன!

# 8

மறுநாள் காலையிலிருந்தே, அவளிடமிருந்து வெகுவாய் விலகிப் போனான் அவன்!

விருந்து, உறவுகளின் வரவு என வீடே கலகலத்திருக்க, அவர்களின் ஒதுக்கத்தை யாரும் கவனிக்கவில்லை!

அவளுக்குமே, இதைப் பற்றி வெளியில் சொல்லத் தயக்கமாய்!

அந்த வாரமே இருவரும் மலேஷியா செல்வதாக இருந்தது.

அங்கிருந்து தன் தொழிலை மாற்றிக் கொண்டு சென்னையில் குடியேறிவிட அவன் முடிவு செய்திருப்பதாக, பாட்டிதான் மகிழ்ச்சியுடன் அவளிடம் தெரிவித்தார்.

ஒரு நாள் மாலையில், பாட்டிகளுடனும் பேசியபடி அமர்ந்து பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள் லயா!

"இப்பதான் எனக்கு நிம்மதியாச்சும்மா லயா! நீ என்ன சொன்னியோ தெரியலை.... ஒரு வழியா பெரியவங்க விருப்பத்துக்கு சம்மதிச்சிட்டான் யுவன்!"

மகிழ்ச்சியும் உற்சாகமுமாய் அவர்கூற, ஒன்றும் புரியாமல் திகைத்து அமர்ந்திருந்தாள் அவள்.

"எவ்வளவு நாளா, நானும் வேலுவும் அவன்கிட்டே சொல்லிட்டே இருக்கோம்.... எஸ்டேட்டை வித்துட்டு இந்தியாவுக்கே வந்துடலாம்னு.... யுவன்தான் கேக்கவே இல்லை!

"இப்போ லயா வந்த நேரம்.... அவ என்ன சொன்னாளோ தெரியலை.... இந்தியாவிலேயே செட்டிலாக சம்மதிச்சிட்டான்....

முதல்லே யுவனோட தொழிலை மாத்திட்டு சென்னைக்கு வந்திட்டா, வேலு அங்கேயிருந்து எஸ்டேட், வீடு எல்லாத்தையும் வித்துட்டு வரேன்னு முடிவெடுத்திட்டாங்க!

"எல்லாம் என் பேத்தி வந்த நேரம்.... அவளாலதான் இதை சாதிக்க முடிஞ்சிருக்கு! யுவன் பிடிவாதக்காரன்.... அவன் ஒரு விஷயத்துல முடிவெடுத்திட்டான்னா, அதை மாத்திக்கிறது கஷ்டம்!

"ஆனா, முதல் தடவையா நம்ம பேத்தி அவனை மாத்தியிருக்கா!



இவ விருப்பத்துக்கு மதிப்பு குடுத்திட்டான் பாரு நந்தா!"

சந்தா பெருமையுடன் சிலாகித்தபடி இருக்க, தவிப்புடன் மூச்சுவிட மறந்து அமர்ந்திருந்தாள் லயா.

அவளுக்கே, இந்த விஷயம் இப்போதுதான் தெரியும்! அப்படியிருக்க அவளால்தான் இந்த மாற்றமே நிகழ்ந்தது போல் அவர் கூற அவளால் பதில் கூற இயலாது போயிற்று!

ஆனால் அப்போது அங்கு வந்து அமர்ந்த யுவனிடம் நந்தா இதுபற்றிக் கூற, முகம் ஒரு கணம் மாறினாலும், உடனே அதை மாற்றிவிட்டான் அவன்!

"ஆமாம் பாட்டிம்மா! அவதான் சென்னையிலேயே செட்டிலாகணும்னு ஆசைப்பட்டா!" நமக்கு ரொம்ப நெருங்கினவங்க எல்லோரும் அங்கேதானே இருக்காங்க..... அவங்களை எல்லாம் அடிக்கடி பாக்கணும்னு அவ ஆசைப்படுவா இல்லியா? அதான் இந்த முடிவு!"

அவன் நிறுத்தியதும் அந்தக் குரலிலிருந்த ஏதோ ஒன்று உறுத்த நிமிர்ந்தால் இகழ்ச்சியுடன் சுழித்த உதடுகளைக் கோணியபடி, அவளையே ஓரக்கண்ணால் கூர்ந்தவனது விழிகள் அவளிடமே பதிந்திருந்தன.

அவன் வார்த்தைகளின் அர்த்தம் தாமதாகப் புரிந்து அவளுள் ஒருவித விதிர்ப்பை ஏற்படுத்த, பார்வையைத் தழைத்துக் கொண்டவளது இதயம் தடதடத்தது!

▸ ▸ ▸

அடுத்தவாரம் இருவரும் மலேஷியாவிற்குக் கிளம்பும் நாளும் வந்தது!

பாட்டிகள் இருவரும் கண்ணீருடன் விடை கொடுக்க, சென்னை வந்தபோது, ராஜகோபாலின் குடும்பமே, அவர்களை வழியனுப்ப வந்திருந்தனர்.

சுதர்சனமும், பாமாவும் மகளின் பிரிவில் உடைந்திருக்க, மகளும் மாப்பிள்ளையும் விடைபெறும்வரை அழுதுகொண்டிருந்தார் பாமா!

ஏதோ ஒரு அடர்ந்த கானகத்திற்குள்..... புதிய கிரகத்தைப் பார்ப்பதற்கு செல்வதுபோல் மருண்டு தவித்தது நெஞ்சம்!

அவனுடைய ஒற்றைக் காதல் பார்வை.... இந்த உணர்வுகளை தூசாய் தகர்த்து விடும் வல்லமை படைத்ததாக இருந்ததாலும், அதை

அவன் வழங்க மறுப்பது இதயத்தைச் சுடுவதாய்!

மெதுவாக ஜன்னலோரம் சாய்ந்து முதல் விமானப் பயணத்தை ரசித்தபோது, "என்செல்லப் பட்டிக்காடே! ப்ளைட் ஜர்னி பயமா இருக்கா? பயப்படாதே.... நான் இருக்கேன்!" என்று அவனுடைய ஆழ்ந்த குரல், செவிகளை வருடாதா என்ற ஏக்க எதிர்பார்ப்பு அவளுக்குள்!

ஆதி அந்தமில்லாத ஒரு எதிர்பார்ப்பை காதல் உருவாக்கியிருக்க, தானும் அப்படிப் பேசியிருக்கக் கூடாதென்பது புரிவதாய்!

மெல்லத் திரும்பியவள் "நான்...." என்றபோது அவன் கண்களை இறுக மூடி உறங்குவது தெரிந்தது!

அவளுடைய தன்னிலை விளக்க முயற்சியை, அவனுடைய ஆழ்ந்த உறக்கம் கலைத்துவிட, பழையபடி ஈகோ தலைதூக்கி அவளை அமைதிப்படுத்தியது!

மலேஷியாவிற்குச் சென்று இறங்கியதும், அந்த ஊரின் சுத்தமும், வண்ண விளக்குகளும், வானுயர்ந்த கட்டடங்களும் வித்தியாசமாய் அவளைக் கவர்ந்தன! அவனுடைய வீட்டிற்குப் போனபோது, ஒரு மத்திய வயதுடைய பெண்மணி ஆரத்தி எடுத்து அழைக்க, ராஜவடிவேலு அவளை அன்புடன் வரவேற்று அணைத்துக் கொண்டார்.

ஏனோ சுதர்சனத்தின் நினைவு வந்தது அவளுக்கு!

"இவங்கதான் நாகம்மை ஆச்சி! நம்ப வீட்டிலே ரொம்ப வருஷமா இருக்கறவங்க! சமையல்; மத்த வேலை எல்லாம் இவங்கதான் பாத்துப்பாங்க!"

அவர் அறிமுகப்படுத்த "வணக்கம்மா" என்று கை குவித்தாள் அவள்!

உடனே அவள் கையை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டவர், "நல்லாருக்கணும்மா! தம்பியை அருமையாப் பாத்துக்கணும்! அவுக தாயில்லாப் பிள்ளை! தாய்க்குத் தாயா, தாரமா இருக்கணும்!" விழிகள் நிறைய வாழ்த்தினார்.

அவளுக்குத்தான், தொண்டையை அடைப்பதுபோல்!

கூடவே வந்த யுவன், ஒரு கையசைவில் அவளை அழைத்துவிட்டு மாடிப்படியேற, மறுக்க இயலாமல் உள்ளூரப் புகைந்தபடிப் பின் தொடர்ந்தாள் அவள்!

மாடிக்குச் சென்றவுடன் ஒரு அறையைத் திறந்தவன் "இது கெஸ்ட்



ரூம்.... இதை நீ உபயோகப்படுத்திக்கலாம்!" என்றபடி அடுத்திருந்த அறையில் நுழைந்து, கதவை அழுந்த மூடிக் கொண்டான்!

அவனுடைய இதயத்தைப் போலவே, அந்தக் கதவும் திறவாக் கதவாகி விட்டிருப்பது புரிவதாய்!

மெதுவாக உள்ளே நுழைந்தால், அனைத்து வசதிகளுடனும் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது அந்த அறை!

சுற்றிப் பார்த்துவிட்டு அறைக் கதவை மூடச் சென்றபோது, ஹாலில் அவளுடைய ட்ராலி கேஸூம், ஏர்பேகும் வைக்கப்பட்டிருந்தன!

யோசனையுடன் அவற்றை உள்ளே எடுத்து வந்து அடுக்கியபோது, ஏதோ ஒரு தனிமை உணர்வு அவளை உலுக்கியது!

இரவென்பதால், குளித்துவிட்டு நைட்டியுடன் வந்தபோது, அறைக்கதவு தட்டப்பட்டது.

திறந்தால், கையில் பால் கப்புடன் யுவன் நின்றிருந்தான்.

"நாகம்மை ஆச்சி எடுத்திட்டு வந்தாங்க! நீ குளிக்கறேன்னு சொன்னேன்! அப்பாவுக்கு நம்ம விஷயம் தெரிய வேண்டாம்! அதுக்கேத்த மாதிரி நடந்துப்பேன்னு நினைக்கிறேன்!"

பால் கப்பை அவள் கையில் கொடுத்துவிட்டு, கம்பீரமாக விலகிச் சென்று தன் அறைக் கதவை மூடிக் கொண்டான்.

மெதுவாக உள்ளே வந்து படுக்கையில் சாய்ந்தபோது, எதுவுமே பிடிக்கவில்லை!

ஏன் இந்தத் திருமணத்திற்கு சம்மதித்தோம் என்ற வெறுப்பும், விரக்தியுமே வந்தன!

▸ ▸ ▸

வாழ்க்கை அதன் போக்கில் இயல்பாகச் செல்ல ஆரம்பிக்க, அந்த வீடும் அதன் அன்றாடப் பழக்க வழக்கங்களும், லயாவிற்கு எளிதாகப் பழகிவிட்டன!

நாகம்மை ஆச்சிக்கு, அவளை மிகவும் பிடித்துவிட்டது!

பாட்டி இல்லாததுதான் கை உடைந்தாற்போல இருந்ததாகவும், அவள் வந்ததில் அதுவும் சரியாகிவிட்டதாகக் கூறியபோது பெரும் இதமாய்!

காலையில் தோட்டத்திலேயே ஜாக்கிங் செல்பவனை வேடிக்கை

பார்த்தும், பிறகு சாப்பாடு எடுத்து வைக்கும்போதும் மட்டுமே அவனைப் பார்க்க முடிந்தது!

காலையில் அலுவலகம் சென்றால், இரவு எட்டு மணிக்குதான் யுவன் வீட்டுக்கு வருவான்!

மதியம் அவர்களிருவரும் வெளியிலேயே சாப்பிட்டு விடுவதால், அவளுக்கு மட்டும் சமைத்து விடுவார் நாகம்மை!

இரவு, எல்லோரும் ஒன்றாக சாப்பிடுவது வழக்கமாக இருந்தது.

அவரிடம் ஒவ்வொரு சமையலாக கற்றுக் கொள்ள ஆரம்பித்தவளுக்கு, அதில் பெரும் ஈடுபாடு வந்துவிட்டது.

ஒரு நாள் இவர்களின் விலகலைக் கண்டுகொண்டது போல், வேலுவே யுவனிடம் கேட்டுவிட்டார்!

''என்ன யுவா! இங்கே வந்து மூணு வாரம் ஆகுது! வேலை வேலைன்னு ஓடிட்டிருக்கே! ஞாயிற்றுக்கிழமையில கூட ப்ரீயா இல்லை?''

''லயாவை எங்காவது அழைச்சிட்டுப் போகலாம் இல்லையா? அவளும் வந்ததிலிருந்து சூப்பர் மார்க்கெட் தவிர எங்கேயும் போகலை!''

அக்கறையுடன் அவர் கூற, ''அப்பா! மூணு மாசத்துல இங்கே 'வைண்ட் அப்' பண்ணிட்டு இந்தியா போகணும்னு!... எஸ்டேட்டுக்கும் சொல்லி வச்சாச்சு! அதில் பிஸிப்பா!

''உங்க மருமகளை இன்னும் ஒரு மாசம் பொறுத்துக்க சொல்லுங்க.... ஏன்... அவ உங்ககிட்ட குறையாக ஏதும் சொன்னாளா?''

''சேச்சே! இதுவரைக்கும் அது மாதிரி லயா எதுவுமே பேசலை.... நானாத்தான் கேட்டேன்.... அவளுக்கும் இந்த ஊரை சுத்திப் பாக்கணும்னு ஆசையா இருக்கும் இல்லையா?''

அவர் முடித்ததும் அவளிடம் திரும்பியவன், ''இந்த வெள்ளிக்கிழமை சாயந்திரம் ரெடியா இரு! ஜென்டிங் போகலாம்!''

அசுவாரசியமாக உரைத்துவிட்டு, எழுந்து கை கழுவச் சென்றான்!

# 9

வெள்ளிக்கிழமை! எப்போதும்போல் சுதர்சனத்திடமும், பாமாவிடமும் போனில் பேசியவள், வருகின்ற இரு



நாட்களுக்கு, மொபைலில் தொடர்பு கொள்ளும்படிக் கூறினாள்.

பிறகு பாட்டிகளிடமும் பேசிவிட்டு வைத்தவள், இரண்டு நாட்களுக்குத் தேவையான துணிகளை அடுக்கினாள்.

கோலாலம்பூரிலிருந்து காரில் கிளம்பி ஜென்டிங்கிற்குச் செல்லும் வழியே மிக அழகாய்!

மாலையில் செல்லும்போது மெல்லிய பனி புகைபோல் எங்கும் சூழ, ஆங்காங்கு காரை நிறுத்திதான் பயணித்தனர்.

மலைச் சாரலும், மென் பனிக்காற்றும் தேகம் தீண்டக் காரிலிருந்து இறங்கியபோது, குளிரில் தேகம் சிலிர்த்தது!

இதுவே அன்பான கணவனாக அவன் இருந்திருந்தால் இந்தக் குளிரையும், நடுக்கத்தையும், அவனுடைய ஒற்றை அணைப்பு இதமாய் போக்கியிருக்குமேவென்ற ஏக்கம் உள்ளூரப் படர்வதாய்!

அங்கிருந்த ஓட்டலில் தங்கியபோது, இரட்டைக் கட்டிலில் அவள் படுத்து உறங்கிவிட, சோபா இல்லாததால் மறுபுறம் படுத்துக் கொண்டான் அவன்.

விடியலில் மெல்லப் புரண்டவள், குளிருக்கு இதமாக அருகிலிருந்த யுவனிடம் ஒட்டியபடி உறக்கத்தில் ஆழ்ந்துவிட, மெதுவாக விழித்தான் அவன்!

தன்னருகில் ஒரு பூக்குவியலாய் சயனித்திருந்தவளையே சோம்பலான விழிகளுடன் வருடியவன், மெல்ல அவளை இழுத்து தன் கை வளைவிற்குள் கொண்டு வந்து இறுக்கி அவளுடைய இதழ்களில் சூடாகத் தன் இதழ்களைப் பதித்துவிட்டான்.

அப்போதுதான் தூக்கம் கலைந்து பதட்டத்துடன் அவள் மூர்க்கமாக விலக, அவனுக்கு சுய நினைவே வருவதாய்!

உடனே, ''பச்.... ஷிட்!'' என்று வெறுப்புடன் சீறியபடிக் குளியலறைக்குள் புகுந்துவிட்டான்!

உதடுகளில் பதிந்த ஈரமுத்தத்தில் பதறி விழித்தவளின் நிலையோ, பரிதாபமாய்!

இயல்பான எச்சரிக்கை உணர்வுடன் அவள் விலக, அதைத் தவறாக எடுத்து கோபம் கொண்டு விலகிச் சென்றுவிட்டான் அவன்! அந்த முரட்டு ஒற்றுதலின் தாக்கம் இன்னும் இதழ்களில் மீதமிருக்க, மிரட்சியும் சிலிர்ப்புமாய் தேகம் நடுங்குவதாய்!

வேகமாக எழுந்து ஜன்னலைத் திறந்தால், பனி புகை மூட்டம் போல் அறைக்குள் வர, ஆரம்பிக்க கீழே எதுவுமே தெரியாத அளவு பனி மூட்டமாக இருந்தது.

அதை ரசித்தபடி ஜன்னலை மூடியபோது, என்ன செய்வதென்றே புரியவில்லை! மாற்றிக் கொள்ளத் தேவையான உடைகளுடன் காத்திருந்தான் அவன்.

அவன் குளித்துவிட்டு வந்தவுடன், அவள் குளியலறைக்குள் புகுந்துவிட, அவனுடைய முகம் பார்க்கும் வாய்ப்பே இல்லாது போயிற்று!

பிறகு தயாராகிக் கீழே சென்று ரெஸ்டாரண்ட்டில் சாப்பிடும்போதும் அவன் மௌனமாகவே இருக்க, அவளும் ஒதுங்கியே இருந்தாள்!

சாப்பிட்டு முடிந்ததும் அங்கிருந்த தீம் பார்க்கிற்குச் சென்று சுற்றிப் பார்த்தபோது, அவனுடன் ரோலர்கோஸ்டர், ஜெயிண்ட் வீல், என்று ஏறியபோது பயமாக இருந்தாலும் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை!

எல்லாவற்றிலும் ஏறி இறங்கி சாப்பிட்டுவிட்டு, இன்டோர் தீம் பார்க்கிற்கு வந்தபோது உள்ளேயிருந்த ஜோவும், இன்டோர் போட்டிங்கும் அவளை வெகுவாய் கவர்ந்தன!

வண்ண விளக்குகளின் ஒளிஜாலத்தில் அந்த இடமே தேவலோகம் போல் காட்சியளித்தது.

அங்கு மேலே இருந்த கேஸினோவிற்கு, அவளை அழைத்துச் சென்றான் அவன்.

அங்கு பலர், பணத்தைக் கட்டி சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வயதான பெண்மணிகள் கூட அதில் விளையாடியதைப் பார்த்தபோது, அவளுக்கோ பெரும் வியப்பாய்!

பிறகு, ஹாரர் ஹவுஸிற்கு செல்லும்போதே, சிறிது திகிலாயிருந்தது லயாவிற்கு! அவனிடம் மறுக்கவும் பயமாக இருந்ததால், சிறு டார்ச் லைட்டுடன் இருவரும் நுழைந்தனர்.

உள்ளே பரவியிருந்த இருட்டும், திடீரென்ற ஒலித்த சப்தங்களும், ஆவிகளின் உருவமும் அவளைப் பெரிதும் பயமுறுத்த, 'வீல்' என்று அலறியபடி யுவனைப் பின்புறமிருந்து அணைத்துக் கொண்டாள்.

பிறகும் அலறியபடியே தேகம் நடுங்கி இதயம் படபடத்து அவள் சிறு தளிராய் நடுங்க. அவளைப் பற்றி தன்னுடன் அணைத்தபடி வெளியே



அழைத்து வந்தான் அவன்!

வெளியில் வந்தும் கூட அவளுடைய நடுக்கமும் மிரட்சியும் குறையாததால், ''ப்ச்.... சில்லி! இதுக்கும் போயா பயப்படுவே! இதெல்லாம் 'ஆர்ட்டி ஃபிஷியல்னு தெரியாதா?'' மெல்லிய குரலில் கூறியபடி, அவளை மெல்ல வருடி ஆறுதல்படுத்தினான்.

அந்த நேரம் அவனுடைய அணைப்பும் வார்த்தைகளும் பெரும் இதமாய்! அவனைத் தன் உள்ளம் கவர் கள்வனாய் இதயம் ஏற்றுக் கொண்டதும், இனி, அதிலேயே தன் வாழ்நாளைக் கழித்து விடலாமென்றும் தோன்ற அவன் மார்பில் சாய்ந்திருந்தபோது, சட்டென்று அவளை விலக்கி நிறுத்தினான் அவன்.

''ஏய்.... என்ன.... புதுவிதமான கேமா இது? என்னைப் பிடிக்கலை.... வேற ஒருத்தரை விரும்பறேன்னு சொன்னே? இது மட்டும் பிடிச்சிருக்கா?'' சுள்ளென்று கேட்டான்!

உணர்வுகள் பதறித் துடிக்க ''இல்லை! நான் வேற யாரையும் காதலிக்கலை! உங்களை வெறுப்பேத்தறதுக்காக சொன்ன பொய் அது!'' தவிப்புடன் நிறுத்தினாள்.

உடனே அவளை வெறுப்பும் இகழ்ச்சியுமாய் வெறித்தவன் ''எவ்வளவு பெரிய பொய்! நீ இவ்வளவு மோசமானவளா இருப்பேன்னு நான் நினைக்கவேயில்லை!''

''காலையில நான் தூக்கக் கலக்கத்துல குடுத்த ஒரு சின்ன முத்தம் உன் காதலனையே மறக்க வச்சிடுச்சா?''

''மனசிலே ஒருத்தனை சுமந்துக்கிட்டு இன்னொருத்தனோட வாழ உனக்கு ஆசையிருக்கலாம்.... ஆனா நான் அதுக்குத் தயாரில்லை! நான் அந்தளவு கேவலமானவனும் இல்லை.... புரிஞ்சுதா?''

அவனுடைய கேள்வியும், நக்கலும் சம்மட்டி அடியாய் இதயத்தில் விழ, தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்ற உணர்வே, ஒரு கணம் மரத்துப் போனது!

சுய பச்சாதாபத்திலும், அதிர்ச்சியிலும் ஆதி அந்தமின்றி முழுதுமாய் உறைந்து அவள் நின்றது ஒரு கணம்தான்!

மறுநிமிடமே ஒரு விம்மலுடன் ஓடியவள் வெளியே வந்தபோது, பனிமூட்டம் ஆரம்பித்திருக்க, விளக்குகள் அழகாய் ஒளிர ஆரம்பித்தன!

ஏன் கடவுளே.... என் வாழ்க்கையை மட்டும் இருளாக்கினாய்? நான் ஏன் அன்று அந்தப் பொய்யைக் கூறினேன்.... இன்று அது நிஜம் என்று

நம்பி, யுவன் வார்த்தைக் கங்குகளை சிதற விடுகிறானே!

மனம் புலம்பித் தவிக்க, கன்னங்கள் சோக அருவியாகின!

சிறிது நேரம் கழித்து, "போதும் அழுதது! ஸ்லாமே உன்னையே பாக்கிறாங்க....! கண்ணை முதல்லே துடைச்சிட்டு வா!"

அழுத்தமான குரலில் ஆணையிட்டுவிட்டு அவன் விரைய முகத்தைத் துடைத்தபடி வேகமாக அவனைத் தொடர்ந்தாள் அவள்!

அறைக்குச் சென்றதும் அவன் ஒரு புத்தகத்தில் ஆழ்ந்துவிட, ஒரு போர்வையை தரையிலிருந்த கார்ப்பெட்டில் விரித்து சுருண்டு படுத்துவிட்டாள் அவள்!

இரவு டிபன் அறைக்கே வந்துவிட, சாப்பிட்டு விட்டு படுத்தும் வெகு நேரம் உறக்கமே வரவில்லை!

"நான் வேறு யாரையும் விரும்பவில்லை என்பதை எப்படி அவனுக்கு நிரூபிப்பேன்.... அவன் முதலில் என்னை நம்புவானா?"

ஆயிரம் கேள்விகள் மனதை வண்டாய்த் துளைக்க என்ன செய்வதென்றே புரியவில்லை!

ஒரு வெற்றிடம் வந்து இதயத்தை முகாமிட, யுவனுடைய அன்பும் அரவணைப்பும் கானல் நீரானது புரிவதாய்!

விடியும்போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள் அவள்!

மறுநாள் புறப்பட்டு இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் புறப்பட்டு

வீட்டிற்கு இருவரும் வந்து சேர்ந்தபோது, இரவாகி விட்டது.

வேலுவும், நாகம்மையும் அவர்களுக்காக உறங்காது விழித்திருந்தனர்.

வழியில் எதுவும் சாப்பிடாததால் டிபன் சாப்பிட்டுவிட்டு அறைக்கு வந்தால், இன்றைய தனிமை பெரும் சூனியமாய்!

# 10

நாட்கள் காற்றெனக் கடுகி விரைய, சென்னையில் செட்டிலாவதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தான் யுவன்.

தன் நண்பனிடம் சொல்லி, அவர்களுக்கு 'ஈ.சி.ஆர்.'ரோட்டில்



நீலாங்கரையில் ஒரு வீடும் பாத்திருந்தான்!

இந்த இடைப்பட்ட ஒரு மாத காலத்தில், வேலு லயாவிடம் ஒரு தந்தையாய் தோழனாய் நெருங்கியிருந்தார்.

தினமும் ஸ்டேட்டில் நடப்பவற்றை, வீட்டிற்கு வந்ததும் அவளிடம் பகிர்ந்து கொள்வது வாடிக்கையாயிற்று!

அவளும் நாகம்மையிடமும், புத்தகங்களிலும் கற்ற ஏதாவது புது டிபன் ரெசிபியை செய்து வைத்து அவருக்காகக் காத்திருப்பாள்.

அவரும் சாப்பிட்டுவிட்டுப் பாராட்டுவதோடு விடுவதில்லை!

இரவு, யுவன் டின்னரோடு சேர்த்து இதை சுவைக்கும்போது, "இது நம்ம லயா ஸ்பெஷலா செஞ்ச டிஷ்.... எப்படி இருக்கு யுவன்?" என்று கேட்பார்.

அவன் அசுவாரசியமாக ஏதாவது கூறிவிட்டு, சாப்பாட்டைத் தொடர்வான்.

அவருக்குள் ஏதோ ஒன்று உறுத்தியிருக்க வேண்டும்.... அதை அவளிடமே ஒரு நாள் கேட்டுவிட்டார் அவர்.

"லயா! யுவன் உன்கிட்டே ஆசையா இருக்கான் இல்லையா? ஏன்னா அம்மாவும் இங்கே இல்லை.... இருந்திருந்தா பாட்டிங்கற முறையிலே அவங்களாவது அட்வைஸ் பண்ணுவாங்க!"

தயங்கியபடி அவர் நிறுத்த, பெரும் விதிர்ப்பு ஓடியது அவளுக்குள்!

உடனே சமாளித்து நிமிர்த்தவள் "ஏன் மாமா இப்படிக் கேக்கறீங்க? நாங்க சந்தோஷமாத்தான் இருக்கோம்! அவர் இங்கே பிசினஸ் வைண்ட் அப் பண்ணுறதிலே பிசி.... அதான், அதே யோசனையா இருக்காரு!"

மெல்லக் கூறியபோது, உள்ளே நுழைந்த யுவனின் புருவங்களிரண்டும் யோசனையுடன் நெறிந்தன!

மறுநாளே, அவளையும் வேலுவையும் அழைத்துக் கொண்டு பெட்ரோனஸ் டவரையும் கோலாலம்பூர் ஸ்கை டவரையும் அவளுக்கு சுற்றிக் காட்டினான் அவன்.

வேலுவும் சிறிது தெளிந்துவிட, அவளுக்கு மட்டுமே அவனுடைய திட்டம் புரிவதாய்! அந்த வாரக் கடைசியில், ஞாயிறன்று மூவருமாகச் சேர்ந்து பத்து கேவ்ஸ் முருகன் கோவிலுக்கும், மாரியம்மன் கோவிலுக்கும் சென்றபோது, லயாவின் மனம் நிறைந்து போனது!

வித்தியாசமான குகை அமைப்புடன் இருந்த மலைக்கோவிலும், தங்க நிறத்தில் விசுவரூபமாய் தகதகத்த முருகன் சிலையும், அழகாய் புன்னகைத்து அருள் பாலித்த மாரியம்மனும் நெஞ்சிற்குள் நீக்கமற நிறைந்த போயினர்.

▸ ▸ ▸

நாட்கள் விரைந்தோட, சென்னையில் வீடு பார்த்து அட்வான்ஸும் கொடுத்து விட்டான் யுவன்!

சுதர்சனமும், பாமாவும் வீட்டைப் பார்த்துவிட்டு வந்து பெருமையுடன் விவரித்தனர்.

அவர்கள் அடையாறில் இருப்பதால், பெண் அருகிலேயே வரப்போகின்ற நிம்மதியும், மகிழ்ச்சியும் வேறு போனஸாய் அவர்கள் குரலில் தெரிந்தது.

மலேஷியாவிலிருந்து அவர்கள் கிளம்பியபோது, அவளுக்குத்தான் பெரும் குறையாய்! இங்கு வந்த மூன்று மாதங்களிலேயே, இந்த ஊர் அவளை வெகுவாகக் கவர்ந்து விட்டிருந்தது!

யுவனும் அவளும் கிளம்ப, வேலு இந்தியா வரும்போது நாகம்மையை அழைத்து வந்துவிடுவதாகக் கூறியிருந்தார்.

சென்னையில் இறங்கியபோது, சுதர்சனமும் பாமாவும் ஏர்போர்ட்டில் அவர்களுக்காகக் காத்திருந்தனர்.

யுவனுடைய நண்பன் ஜோதியும் வந்துவிட, எல்லோருக்கும் அவனை அறிமுகம் செய்தான் யுவன்.

பிறகு அனைவருமாக லயா வீட்டிற்குச் சென்றால், எதிர்பாராத விருந்தாளியாக அங்கு சந்தா பாட்டியும் அவர்களுக்காகக் காத்திருந்தார்.

அவரைக் கண்டதும், ''பாட்டி....'' என்று அழைத்தபடி ஓடிச்சென்று அணைத்துக் கொண்டான் யுவன்.

அந்த நிமிடம் அவனைக் கண்டபோது, இவன் என்றாவது நம்மிடம் இப்படி ஆசையுடன் ஓடி வருவானா என்று தவித்துப் போனாள் லயா!

▸ ▸ ▸

மறுநாளே பால் காய்ச்சிக் குடித்து கணபதி ஹோமம் செய்து, அந்த வீட்டில் குடியேறினார்கள்.

அந்த வீடு லயாவிற்கு மிகவும் பிடித்திருந்தது!

''தேங்க்யூ யுவன்! இவ்வளவு அழகா ஒரு வீட்டை, அதுவும்



பீச்சுக்குப் பக்கத்தில வாங்கித் தந்ததுக்கு.... ரொம்ப நன்றி!''

விழிகள் பனிச்சிடக் கூறியவளையே சோம்பலான பார்வையால் வருடியவன் ''இது எனக்காக நான் வாங்கின வீடு!''

''நீ இங்க இருக்கப்போறது இன்னும் கொஞ்ச நாள்தானே! அதுக்கே இவ்வளவு சந்தோஷப்படறே?'' நக்கலாகக் கேட்டான்.

அவனுடைய வார்த்தைகளின் அர்த்தம் புரியாமல் நிமிர்ந்தவள், ''நான்.... இங்கே தானே இருப்பேன்! ஏன் கொஞ்ச நாள்னு சொல்றீங்க?'' குழப்பத்துடன் கேட்டாள்.

''ஓ! இந்த வசதி எல்லாம் பார்த்த உடனே பழசை.... பழைய காதலனை மறந்தாச்சா? ஆனா நான் மறக்க மாட்டேன்!''

''உன் விருப்பப்படி அவனோட போறதுன்னா போயிடு! அதுக்காகத்தான் சென்னையிலேயே செட்டிலாக முடிவு செஞ்சேன் நான்!''

ஆழமான குரலில் அவன் கூற விதிர்ப்புடன் உடல் குலுங்கிவிட ''இல்லை..... நான் யாரையும் விரும்பலை.... அன்னிக்கு உங்களை வெறுப்பேத்த அப்படி பொய் சொன்னேன்!'' லயா நடுங்கும் குரலில் முடித்தாள்!

''சே.... ஏன் இப்படி மேல மேல பொய் சொல்லி உன்னையே தாழ்த்திக்கறே! நான் உன்னை நம்பமாட்டேன்! நீ எப்ப வேணாலும் போய், உன் விருப்பப்படி வாழ்க்கையை அமைச்சுக்கலாம்!''

''முன்னாடியே தெரிஞ்சிருந்தா நம்ம கல்யாணத்தைத் தடுத்திருப்பேன்! பாட்டிக்காக நான் செஞ்ச முதல் தப்பு இந்தக் கல்யாணம்தான்!''

பற்களைக் கடித்தபடிக் கூறிவிட்டு அவன் உள்ளே செல்ல, தோட்டத்துப் படிகளில் இறங்கி கடற்கரைக்குச் சென்றவளது நெஞ்சம் எரிமலையாய்!

ஒரு சிறிய பொய்.... அவள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டிருப்பது புரிந்தது!

அவன் நினைப்பது உண்மையில்லை என்று எப்படிப் புரிய வைப்பது... நூறாவது முறையாக வந்த, தவிப்பும், ஏக்கமும் அப்படியே உலர்ந்தன!

பாட்டியும் அவர்களுடன் வந்துவிட, மற்ற வேலைகளுக்கெல்லாம் ஆட்கள் இருந்தனர்.

சமையலை மட்டும், நாகம்மை வரும்வரை லயாவே செய்வதென்று முடிவு செய்தான். சமையலுக்கு ஒரு ஆள் வைத்துக் கொள்ளலாமென்று பாட்டி கூறியும், அவன் மறுத்துவிட்டான்.

குடியேறிய முதல் வாரம் முழுவதும், இன்டீரியருக்கென்று ஆட்கள் வேலை செய்ய, எல்லாமே யுவனுடைய விருப்பப்படியே அலங்கரிக்கப்பட்டன.

அவனுடைய ரசனை தன்னுடன் பெரும்பாலும் ஒத்துப்போவதை வியப்புடன் கவனித்தாள் அவள்.

அந்த வீடும், அதன் தினசரி நடப்புகளும் வெகுவாய்ப் பழகிவிட, பாட்டி இருப்பது அவளுக்குப் பெரும் துணையாய் இதமாய்!

ஆனால், பாட்டிக்கெதிரில் அவன் தன் வெறுப்பையும், அலட்சியத்தையும் வெளியே காட்டிக் கொள்வதில்லை.

அதுவே அவளுக்குப் பெரும் வரமாய்த் தோன்ற அவன் மனம் மாறும் நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தாள்! அவன் பெயரை உச்சரிப்பதில் தன் நாவிற்கும், அவனைப்பற்றி எண்ணுவதில் தன் மனதிற்கும், எவ்வளவு மகிழ்ச்சி என்பதை என்றாவது அவன் உணர்வானா என்ற ஏக்கம் வேர்ப்பிடித்தது!

# 11

ஒரு நாள், வாரக் கடைசி விடுமுறை என்பதால், ஹாஸ்டலில் இருந்து வீட்டுக்கு வந்திருந்தாள் ரோகிணி!

திருமணத்தின்போது அவளிடம் பல கசந்த தருணங்களை சந்தித்திருந்ததால், வரவேற்று நன்றாக கவனித்தாலும் விலகியே இருந்தாள் லயா!

ஆனாலும், அதையே யுவன் வந்ததும் குறையாக அவன் சொல்லுவாள் என்று லயா எதிர்பார்க்கவில்லை!

யுவன் வீட்டிற்கு வந்ததும், டிபன் காபியுடன் ஹாலுக்கு வந்தபோதுதான், ரோகிணி கூறுவது அவள் செவிகளில் விழுந்தது!

''அண்ணா! அண்ணிக்கு நான் வந்தது பிடிக்கலை போலருக்கு! என்கூட சரியாவே பேச மாட்டேங்கிறாங்க!'' சிணுங்கினாள்.

''லுக் ரோகிணி! இது என் வீடு! அவளோடது இல்லை! அதனால அவளைப் பத்தி நீ கவலைப்பட வேண்டாம்! உனக்கு எத்தனை நாள் தங்கணுமோ தோணுதோ அத்தனை நாள் இங்க தங்கலாம்!''



அழுத்தமான குரலில் அவன் கூற, விதிர்த்துப் போய் அவள் நின்றுவிட பாட்டிதான் அவனை இடைமறித்தார்.

''என்ன யுவன்! இப்படிப் பேசறே? இது உன் வீடுன்னா, லயாவோட வீடும்தான்! ரோகிணிதான் ஏதோ சின்னப் பிள்ளைத்தனமா உளர்றான்னா நீயுமா?''

''உனக்கு இங்கே என்ன உரிமை இருக்கோ.... அதைவிட இந்த வீட்டுக்கு லயா சொந்தக்காரிம்மா ரோகிணி!

''முதல்லே, அண்ணி இல்லாதப்ப, அவங்களைப் பத்தி அண்ணன்கிட்டே குறை சொல்ற பழக்கத்தைவிடு... இது உனக்கு நல்லதில்லை!''

பெரியவராக அவர் அறிவுறுத்த, நிம்மதிப் பெருமூச்சுடன் டிபனை யுவனிடம் கொடுத்தாள் அவள்.

ஆனால் ரோகிணியின் மனமோ சுருண்டு விட, வேகமாக எழுந்து வெளியே சென்றாள் அவள்.

மறுநாளே, அவளை அழைத்தான் யுவன்.

லயாவிடம் ஒரு கட்டு பணத்தைக் கொடுத்தவன் ''ரோகிணி நம்ம வீட்டுக்கு முதல் தடவையா வந்திருக்கா! அவளுக்கு வேண்டிய டிரெஸ் எல்லாம் வாங்கிக் குடுத்துடு!''

அடிக்குரலில் ஆணையிட்டுவிட்டுத் தங்கையை அழைத்தான்.

''ரோகிணி! உன் அண்ணிகிட்டே பணம் குடுத்திருக்கேன்.... ரெண்டு பேருமா ஷாப்பிங் போங்க.... உனக்கு என்ன வேணுமோ வாங்கிக்க!'' என்றான்.

அன்று மதியம் இருவரும் கிளம்பிச் சென்று பெரிய ஷாப்பிங் மாலில், சுடிதார், ஜீன்ஸ், மிடி, டாப் என வாங்கிக் கொண்டு வெளியே வந்தனர்.

காரின் டிக்கியில் எல்லாப் பைகளையும் வைத்துவிட்டு அவள் திரும்பியபோதுதான், பின்புறம் ரோகிணி மயங்கிச் சரிவது தெரிந்தது! சரியாக சாப்பிடவில்லையோ என்ற பயத்துடன் உடனே தாங்கிப் பிடித்தவள், பயந்துபோய் அருகிலிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்.

கேஷுவாலிட்டியில் கூறிவிட்டு டாக்டரிடம் சென்றபோது, அவளைத் தனிமையில் பரிசோதித்த டாக்டர், ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

ரோகிணி கர்ப்பமாக இருப்பதாக அவர் கூற, அதிர்ந்து போனாள் லயா!

உடனே, யூரின் டெஸ்ட் எடுத்துப் பார்க்கும்படி அவர் கூற, விழித்தெழுந்த ரோகிணியோ, நிலைமை உணர்ந்து லயாவைப் பிடித்துக்கொண்டு அழத் துவங்கினாள்.

அவளுக்கோ, என்ன செய்வதென்றே புரியாத ஒரு நிலை!

நாளை காலையில் வந்து ஸ்கேன் செய்தால் உறுதியாகக் கூற முடியும் என்று டாக்டர் கூற, இருவரும் மௌனமாக வெளியே வந்தனர்.

அதுவரை இருந்த உற்சாகமும் ஆர்வமும் தொலைந்திருக்க, அமைதியாக வீடு வந்தாள் ரோகிணி.

அன்றிரவு.... யாருமில்லாத தனிமையில் அவளிடம் பேசியபொழுதுதான் உண்மை தெரிந்தது!

தன்னுடன் கூடப் படிக்கின்ற ஒரு தோழியின் அண்ணனைத் தான் விரும்புவதாகவும், அவனே இதற்குக்காரணமென்றும் கூறி அழ ஆரம்பித்தாள் அவள்!

பிறகுதான் தெரிந்தது.... அவன் ஒரு ஆட்டோ டிரைவர் என்பதும், மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவன் என்ற விபரமும்!

''இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது அண்ணி.... எப்படியாவது இதைக் கலைச்சிடணும்! நீங்கதான் எனக்கு உதவணும்!''

அவள் முதன் முறையாக அழுகையுடன் இறைஞ்ச, லயாவிற்கோ பரிதாபமாய்!

''கல்யாணத்துக்கு முன்னாடி.... அதுவும் படிக்கிறப்ப இது மாதிரி நடக்கிறது தப்பில்லையா ரோகிணி!'' கண்டிப்பாகவே கேட்டாள்.

உடனே அழ ஆரம்பித்தவள், சிறிது நேரம் கழித்து தன் கதையை கூற ஆரம்பித்தாள்.

''என் ஹாஸ்டல் ப்ரெண்டோட கசின்தான் இந்த பிரகாஷ் அண்ணி! அவர் ஆட்டோலதான் நாங்க எல்லாரும் ஷாப்பிங் போவோம்! சினிமாவுக்கெல்லாம் போவோம்!''

''அப்ப அறிமுகமானவரு... என்னைக் காதலிக்கறதா சொல்ல முதல்லே மறுத்த நான் அவரை விரும்ப ஆரம்பிச்சிட்டேன்!

''இது... மூணு மாசத்துக்கு முன்னாடி மகாபலிபுரம் போனோம்.... அங்கே ஒரு ஃபார்ம் ஹவுசிலே.... சாரிண்ணி!''



''எனக்கு டேட் ஞாபகமே இல்லை! நேத்து டாக்டர் சொன்னப்புறம்தான் நினைவே வருது! வீட்டில தெரிஞ்சா அவமானமாயிடும்.... கொன்னே போட்டுடுவாங்க.... எப்படியாவது எனக்கு ஹெல்ப் பண்ணி அபார்ஷன் பண்ணிடுங்கண்ணி! ப்ளீஸ்!''

குலுங்கிக் குலுங்கி அழத் துவங்கியவளை அணைத்து ஆறுதல்படுத்தியவள், ஒருமுடிவுடன் உறங்கச் சென்றாள்.

▸ ▸ ▸

மறுநாளும் ஷாப்பிங் செல்வதாகக் கூறி இருவரும் கிளம்ப சந்தா பாட்டியே இருவரையும் வியப்புடன் நோக்கிவிட்டு விடை கொடுத்தார்.

நேரே தங்களுடைய குடும்ப டாக்டரிடம் அழைத்துச் சென்றாள் லயா!

அங்கு யூரின் டெஸ்டில் கர்ப்பம் உறுதியானதும், ஸ்கேன் செய்து பார்த்தனர்.

குழந்தை தரித்து ஐந்து மாதங்களாகி விட்டதால், அபார்ஷன் செய்ய முடியாதென்று கண்டிப்பாக மறுத்துவிட்டார் டாக்டர்!

கவலையுடன் ரோகிணியை காரில் இருக்கச் செய்துவிட்டு, மீண்டும் டாக்டரிடம் வந்தாள்.

தன் நாத்தனாரின் நிலையை எடுத்துக்கூறி, எப்படியாவது தங்களின் குடும்பமானத்தைக் காப்பாற்றும்படிக் கெஞ்சியும் அவர் மசியவில்லை!

''லயா!நான் உனக்கு பேமிலி டாக்டர்மா! காரணம் இல்லாம சொல்ல மாட்டேன்! இப்ப அபார்ஷன் பண்ணினா அவ உயிருக்கே ஆபத்தாயிடும்! பேசாம அவ யாரை விரும்பினாளோ அவனையே கட்டி வச்சிடுங்க! இதுதான் இதுக்கு உண்மையான தீர்வு!''

பொறுமையாக அவர் அறிவுரை செய்ய, உயிருக்கு ஆபத்து என்றதும் பதறி விதிர்த்துப் போனாள் அவள்!

வெளிறிய முகத்துடன் வெளியே வந்தவள், அப்போதுதான் அந்தக் காரிடாருக்குள் நுழைந்த யுவனை கவனிக்கவில்லை!

அவனுக்கோ பெரும் வியப்பு! இவள் ஏன் மருத்துவமனைக்கு வர வேண்டும்.... அதுவும் இவ்வளவு பதட்டமாக இருக்கிறாளே!

அவன் யோசிப்பதற்குள் லிஃப்டில் ஏறி லயா மறைய எதிரில் வந்த நர்ஸிடம் அவளைப் பற்றி விசாரித்தான்.

''அதோ லிஃப்டிலே போறாங்களே அவங்களுக்கு என்ன பிரச்னை?''

யோசனையுடன் கேட்டவனுடைய தலையில் பேரிடியாக விழுந்தது அந்தச் செய்தி!

''அந்தம்மாவா? அபார்ஷன் கேஸாங்க! கல்யாணத்துக்கு முன்னாடியே கர்ப்பம் போலருக்கு! அஞ்சு மாசம்... கலைக்க வந்திருக்காங்க....''

அசுவாரசியமாகக் கூறிவிட்டு அவள் விரைய, எதிர்பாராத சுனாமியாய் உணர்வலைகள் அவனைப் புரட்டி சிதைத்துப் போட்டன!

கடவுளே! இவள் இப்படி என்று தெரியாமல் திருமணம் செய்து.... இதுவரை தனக்கும் அவளுக்கும் எந்த உறவும் இருந்ததில்லையே....

அப்படியென்றால் அந்த நர்ஸ் கூறியதுபோல் அவள் கர்ப்பம் என்றால்.... அவர்களுக்கு திருமணம் முடிந்து நான்கு மாதங்கள் தானே ஆகின்றன!

ஐந்து மாத கர்ப்பம் என்றால், அவள் தன்னைக் காதலித்தவனோடு இணைந்து.... சே! நினைக்கவே உடல் கூசி நடுங்கியது!

உடனே ஓடிச் சென்று மாடியிலிருந்த ஜன்னல் வழியே பார்த்தபோது, அவர்களுடைய கார் வாசலுக்கு வருவதும், முகம் துடைத்தபடி பதட்டத்துடன் அதில் அவள் ஏறிச் செல்வதும் தெரிந்தது.

உணர்வுகள் உலர்ந்து, யுவனுடைய ஆண்மைக்கு பெரும் அடிவிழ, அப்படியே கண்மூடி அருகிலிருந்த சுவரில் சாய்ந்து நின்றுவிட்டான்.

சிறிது நேரம் கழித்து, ''சார் பேஷண்ட் அடுத்த மாடியில் இருக்காரு!''

அவனிடம் வேலை செய்யும் ஒருவர் உசுப்பியதும் தான் சுய உணர்வே வந்தது.

மெல்லக் கண்களைத் திறந்தபோது, உலகமே சூன்யமாய்!

கடவுளே! எப்படி ஏமாற்றப்பட்டிருக்கிறேன்.... உலைக்களமானது நெஞ்சம்!

அவனுடைய கம்பெனியில் வேலை செய்யும் ஒரு பெயிண்ட்டர் சாரத்திலிருந்து கீழே விழுந்து இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்க, அவனைப் பார்க்க வந்திருந்தான் யுவன்!

மேல்மாடிக்கு சென்ற அவனைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டு வந்தவுடன், வீட்டிற்கு போன் செய்தான்!

பாட்டிதான் போனை எடுத்தார்....



''என்னப்பா யுவா! லயா இன்னும் வீட்டுக்கு வரலை! இப்பதான் போன் செஞ்சா! ஷாப்பிங் முடியலையாம்! முடிஞ்சப்புறம், ரோகிணியை ஹாஸ்டல்லே விட்டுட்டு அவங்க அம்மாவைப் பாத்துட்டு வர லேட்டாகும்னு சொன்னா! சாயந்தரம்தான் வருவா போலருக்கு!''

''சரி பாட்டி! நான் அப்புறம் பேசறேன்!'' என்று வைத்தவனுக்குள் பெரும் போராட்டம்!

''ஷாப்பிங் முடியலியாமா? அபார்ஷன் இப்பதானே முடிஞ்சிது! அம்மா வீட்டில் ரெஸ்ட் எடுத்திட்டு வீட்டுக்கு வருவாளா இருக்கும்! இதிலே ரோகிணி எங்கே?

அவளை ஹாஸ்டல்லே விட்டிருப்பா! சே... இவ்வளவு கேடு கெட்டவளை கல்யாணம் செஞ்சுக்கிட்டு அவஸ்தைப்படணும்கிறது என் தலை எழுத்து போலருக்கு!

பாட்டி இல்லைன்னா டைவர்ஸ் பண்ணிடலாம்...

இப்பதான் அவங்களுக்கு அட்டாக் வந்து சரியாகியிருக்கு!''

பலவித எண்ணத் தளும்பல்களுடன் அலுவலகம் வந்தவனுக்கு, வேலையே ஓடவில்லை!

பெரிதாய் ஏமாற்றப்பட்ட கோபமும், லயாவின் மீது எல்லையற்ற வெறுப்பும், குரோதமும் பொங்கி வந்தன!

அதற்குமேல், அவனால் அலுவலக வேலைகளில் ஈடுபடவே இயலவில்லை!

மாலையானதுமே, நேராக வீட்டிற்குக் கிளம்பிச் சென்று பாட்டியிடம் தலைவலி என்று கூறிவிட்டு வெறும் காபியுடன் படுத்துவிட்டான்.

மதியம், மருத்துவமனையிலிருந்து நேராக ஹாஸ்டலுக்குச் சென்று ரோகிணியை இறக்கிவிட்டவள், அவள் தோழியிடம் இதுபற்றிப் பேசிவிட்டே கிளம்பினாள்.

நேரே தன் வீட்டிற்குச் சென்றவள், பாமாவிடம் இதுபற்றிக்கூற அவருக்கும் அதிர்ச்சியாய்!

''லயா! இதை முதல்லே மாப்பிள்ளைகிட்டே சொல்லிடும்மா! அவராப் பாத்து ஒரு முடிவெடுக்கட்டும்!'' கவலையுடன் கூறினார்.

''இல்லைம்மா! அவ ரொம்ப பயப்படறா! நானே அந்த ஆட்டோ டிரைவரோடப் பேசலாம்னு இருக்கேன்.... நாளைக்கு பேசினப்புறம் பாப்போம்!''

லயா எடுத்த அந்த முடிவு, அவளுடைய வாழ்க்கையையே

சிதைக்கப்போவதை அப்போது அவள் அறியவில்லை!

# 12

**மா**லையானதும் வீட்டிற்குக் கிளம்பிச் சென்றபோது, வாசலில் நின்ற யுவனுடைய காரைக் கண்டதும் அவளுக்கு அதிர்ச்சியாய்!

தயக்கத்துடன் உள்ளே சென்றபோது, ''வாம்மா லயா! யுவன் இன்னிக்கு சீக்கிரமே வந்திட்டான்.... தலைவலியாம்... அவனை கவனி!''

பாட்டி இயல்பாக வரவேற்க, ''சரி பாட்டி!'' என்றபடி மாடியேற முயன்றவளைத் தடுத்தது யுவனின் குரல்!

''எங்கே போயிருந்தே? ஒரு போன் போட்டு எனக்கு சொல்ல முடியாதா?'' ரௌத்ரமாக வினவினான் அவன்.

''இல்லை.... பாட்டிக்கு சொன்னேனே! ரோகிணியோட ஷாப்பிங் முடிஞ்சு... அவளை ஹாஸ்டல்லே விட்டுட்டு அம்மா வீடு பக்கம்கிறதால அங்கே போயிட்டு வந்தேன்''

திக்கித் திணறி முடித்தவளையே வெறுப்புடன் கூர்ந்தவன், ''உன்னை ஏதோ ஹாஸ்பிடல் வாசல்லே பாத்ததா ஜோதி சொன்னான்.....'' நக்கலாக வினவினான்.

உடனே திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தவள், ''அது வந்து.... எனக்கு வயத்து வலி....! அதான் எங்க பேமிலி டாக்டரைப் பாத்துட்டு வந்தேன்!''

மெலிதாக நடுங்கும் குரலில் அவள் கூற, அவளுடைய அதிர்ச்சியும், விழிகளில் தெரிந்த மிரட்சியும், உடல் மொழியும், அவனுக்கு எல்லாவற்றையும் தவறாகவே புரிய வைப்பதாய்!

ஆனால், அது தவறு என்பதை அவனும் உணரவில்லை.... அவளும் விளக்கவில்லை!

''என்னடா லயா.... வயித்து வலியா? போய் ரெஸ்ட் எடுக்க.... ஏதாவது சாப்பிட்டியா?''

அக்கறையுடன் வினவிய பாட்டியின் கேள்வியில் கண்கள் கரித்து உண்மை உறைக்க, அரைகுறையாகத் தலையசைத்துவிட்டு, தன் அறைக்குள் வேகமாகச் சென்றுவிட்டாள்.

தன்னைக் கடந்து மாடியேறியவளையே, வெறுப்பும் சினமுமாக



யுவனின் விழிகள் கூர்ந்ததை அவள் கவனிக்கவில்லை!

தப்பித்தோம் பிழைத்தோம் என்று, அறைக்குள் வந்து படுக்கையில் விழுந்த பிறகுதான், இயல்பாகவே மூச்சுவிட முடிந்தது.

நாளை, அந்த ஆட்டோ டிரைவரிடம் பேசியபிறகு யுவனிடமும், சுந்தரிடமும் இது பற்றிப் பேச வேண்டுமென்று முடிவெடுத்துப் படுத்தவள், அப்படியே சரிந்து உறங்கிவிட்டாள்.

காலையிலிருந்து தொடர்ந்த அலைச்சலும் அயர்ச்சியுமாக அவள் உறங்க, சிறிதே திறந்திருந்த கதவு வழியே அவள் அடித்துப் போட்டாற்போல் உறங்குவதை கவனித்த யுவனுக்கோ, ரௌத்ரமாய்!

''சப்தம் போடாமல் அபார்ஷன் செய்துவிட்டு வந்து அலுப்பில் உறங்குகிறாள்.... இனி என்னிடம் நீ படப்போகும் அவஸ்தைகள் உன்னை உறக்கமில்லாமல் செய்யப் போகின்றன பார்!''

வன்மத்துடன் சூளுரைத்துவிட்டு விலகிச் சென்றவனுக்குள், கடும் போராட்டமும் எரிச்சலும்!

அன்றிரவே ரோகிணியிடமிருந்து அவளுக்கு போன் வர, அந்த ஆட்டோ டிரைவர் தன்னை திருமணம் செய்ய சம்மதித்து விட்டதாகவும், கல்யாணம் முடிந்து வேதாரண்யத்திற்கே செல்லப் போவதாகவும் கூற, நிம்மதியாய்!

இனி சுந்தரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வான் என்று நிம்மதியெழ, அன்று அமைதியாக உறங்கப் போனாள் அவள்!

பிறகு மறுநாளிலிருந்து அந்த செய்திக்காக அவள் காத்திருக்க, ஊரிலிருந்து எந்தத் தகவலும் இல்லை!

ஆனாலும் யுவனோ பெரிதும் மாறி இருந்தான்! அவளைக் கண்டாலே தீயாய்க் காய்ந்தான்.

ஒருவேளை ரோகிணியைப் பற்றி அறிந்துதான், பாட்டிக்கும் தெரியக்கூடாதென்று அமைதிகாத்து அவளிடம் எரிந்து விழுகின்றானோ என்ற ஐயம் வந்தது அவளுக்கு!

▸ ▸ ▸

ஒருநாள்.... அலுவலகத்திலிருந்து வந்தவன், பாட்டியுடன் அமர்ந்து டிவி பார்த்தபடியே டிபனைக் கொறிக்க, ஒரு சீரியலில் இதேபோல் ஒரு சீன் வந்தது.

திருமணத்திற்கு முன்பே கர்ப்பமான ஒரு பெண்ணை அவன் தாய் திட்டுகிறாள்.... அவள் அழ, திடீரென்று 'ஷிட்....' என்று அருகிலிருந்த

தட்டைத் தூக்கி யுவன் தரையில் வீச டிபன் கொட்டி சிதறியது.

"என்னாச்சுப்பா யுவன்? பிசினஸ் டென்ஷனா?"

பாட்டி கேட்க, "இல்லை பாட்டி! இந்த சீரியல்தான் டென்ஷன்! கல்யாணத்துக்கு முன்னாடி கெட்டலைஞ்சு கர்ப்பமாய்.... இதையெல்லாம் காமிச்சி சமூகத்தையே அசிங்கப்படுத்தி.... சே!"

"ஆனா நடக்கறதை தானே காண்பிக்கறாங்க! எரிச்சலா வந்தது அதான்!" என்றவன் ஓரக்கண்ணால் அவளையே நோக்கினான்.

ரோகிணியின் நினைவில் சிறு நடுக்கம் ஒன்று அவளுள் ஓட, மெல்ல எழுந்து தரையிலிருந்தவற்றை சேமிக்கத் துவங்கினாள் லயா.

"நீ விடும்மா! எலிஸா இந்தத் தரையை சுத்தம் பண்ணும்மா!" உள்நோக்கிக் குரல் கொடுத்தபடி எழுந்து தன் அறைக்குள் சென்றார் பாட்டி.

யுவனும் வேகமாக மாடிக்குச் செல்ல, அவளுக்குத்தான் குழப்பமாய்!

ரோகிணியைப் பற்றிய விபரம் தெரிந்தே அதை வெளியில் சொல்ல முடியாமல் குமுறுகிறானோவென்று, அதையும் தவறாகவே ஊகித்தாள் அவள்.

மறுவாரமே, அந்தப் புதிருக்கு விடை கிடைத்தது!

ஊரிலிருந்து போன் செய்த சுந்தர், ரோகிணி யாருடனோ ஓடிப்போய்விட்டதாகக் கூற, தவித்துப் போனான் யுவன்!

பதினைந்து நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு போயிருப்பதாக லீவ் லெட்டரை காலேஜிலும் ஹாஸ்டலிலும் கொடுத்திருந்ததால், அவர்கள் முதலில் சந்தேகிக்கவில்லை.

பிறகு ஊருக்கு போன் செய்து அவர்கள் விசாரிக்க, ஹாஸ்டலுக்கு சென்றபோதுதான் அவள் ஓடிப்போன விபரமே தெரிந்திருக்கிறது!

அவளுடைய அறைத் தோழியிடம் ஒரு கடிதத்தை அவள் கொடுத்து சென்றிருக்க தான் விரும்பியவருடன் செல்வதாக அதில் எழுதியிருந்தது.

அவளைத் தலை முழுகிவிட்டதாக சுந்தர் கூற, அவளுக்குத்தான் உள்ளூரக் குறுகுறுப்பாய்!

மறுநாளே, யுவனுக்குத் தெரியாமல் சுந்தருக்குப் போன் செய்தாள் அவள்.



நடந்த விபரத்தை அவள் கூறியதும் கொதித்துப் போனவன், "விடுங்கண்ணி! கழுதை.... திமிரா ஆடிட்டிருந்தா.... அவளுக்கு அப்பா அம்மா எல்லாரும் சப்போர்ட் வேற!

"இதை சொன்னாதான் பொண்ணோட வண்டவாளம் தெரியும்! நீங்க கவலைப்படாதீங்க.... வேற யாருக்கும் விஷயம் தெரிய வேண்டாம்!"

"பாட்டிக்கும் அண்ணனுக்கும் தெரிஞ்சா கவலைப்படுவாங்க.... இதை இப்படியே விட்டுடலாம்....! வெளியே தெரிஞ்சா நமக்குதான் அசிங்கம்!

"தேங்க்ஸ் அண்ணி.... இவ்வளவு முயற்சி எடுத்ததுக்கு! அத்தை மாமாவை விசாரிச்சேன்னு சொல்லுங்க!" என்று வைத்துவிட்டான்.

அவன் தன்னை தவறாக நினைக்காதது நிம்மதியை அளிக்க, அந்த ரகசியத்தை தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள் அவள்!

## 13

பாட்டியும் மறுவாரமே வேதாரண்யத்திற்குச் சென்றுவிட, இருவருமே உலகம் என்று ஆகிப் போனது!

காலையில் விழித்ததிலிருந்து இரவு வரை, அவளிடம் பாராமுகமாகவே இருப்பது அவன் வழக்கமாகிவிட, லயாவுக்குத்தான் பெரும் வேதனையாய்!

தானாகவே வலியச் சென்று பேசினாலும், முகம் திருப்பி அவன் செல்ல, அதை மீறிப் பேச, அவளுடைய தன்மானம் இடம் தரவில்லை!

ஒரு நாள்... அவன் சீக்கிரமே வீட்டிற்கு வந்துவிட, டிபனும் அருகே சென்றவள், தட்டை டீப்பாயில் வைத்துவிட்டு, "இன்னிக்கு எங்காவது

இதயநிலா
ஆசிரியர்:
கருப்பையா நாகராஜன்
உதவி ஆசிரியர்:
அன்புமீனா
நிர்வாகம்:
N.மகேஸ்வரன்
விளம்பர நிர்வாகம்:
எம்.இளமாறன்
வடிவமைப்பு
சரோஜா கிராபிக்ஸ்,
கவிதா ஆப்செட்
நிர்வாக அலுவலகம்:
இதயம் மீடியா
எண் 12, அண்ணாநகர் பிளாசா,
C-47, 2வது அவென்யூ,
அண்ணாநகர், சென்னை-40.
9551296661, 9551286664
mail: idhayammedia@gmail.com

வெளியே போயிட்டு வரலாமா?'' தயக்கத்துடன் கேட்டே விட்டாள்.

உடனே சீற்றத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தவன் ''ஏன்... உன் பழைய காதலன் என்னவானான்? அவனோடப் போக வேண்டியதுதானே?'' சுள்ளென்று சீறினான்.

''நான்.... அது மாதிரி யாருமே இல்லை யுவன்.... ப்ளீஸ்.... என்னை நம்புங்க!''

பதைப்புடன் அவள் இறைஞ்ச, ''இப்படிப் பொய் சொல்ல உனக்கே வெக்கமாக இல்லை? சீ.... என் கண் முன்னாடி வராதே.... போயிடு!''

கடும் வெறுப்புடன் கூறிவிட்டு, டிபன் சாப்பிடாமலே எழுந்து மாடிக்குச் சென்றுவிட்டான்!

அப்படியே தொப்பென்று அமர்ந்தவளின் விழிகளில், கண்ணீர் அருவியாய் சரம் கோர்க்க, சற்று நேரம் உணர்வுகளே மரத்தாற் போல்!

அன்றிலிருந்து, லயா அனாவசியமாக அவனிடம் பேசுவதேயில்லை!

▸ ▸ ▸

அப்போதுதான், வேதாரண்யத்தில் சுந்தருக்கு நிச்சயம் செய்திருப்பதாக ஒரு மகிழ்ச்சியான செய்தி வந்தது!

ராஜகோபாலும், சாந்தமும் போன் செய்து கூறியபோது, மிகவும் சந்தோஷமடைந்தவள், உடனே சுந்தருக்கும் பேசி வாழ்த்துத் தெரிவித்தாள்!

அன்று மாலையில் யுவன் வீட்டிற்கு வந்ததும், ஆவலுடன் ஓடிச் சென்று அந்த நல்ல செய்தியைக் கூறியபோது, அலட்சியமாக அவள் புறம் திரும்பியவன், ''தெரியும்.... உனக்கே சொல்லியிருக்காங்கன்னா, அவன் என் தம்பி..... எனக்கு சொல்லாம இருப்பாங்களா?'' நக்கலாகக் கேட்டுவிட்டு விரைந்து சென்றுவிட்டான்.

அவன் பதில், முகத்தில் அடித்தாற்போல் சம்மட்டி அடியாய் வலிக்க, ஏன் அவன் குணம் தெரிந்ததும், இப்படிப் பேசி திட்டு வாங்கிக் கொள்கிறோம் என்று தன் மேலேயே வெறுப்பு வருவதாய்!

அன்று வெளியில் சென்றவன், திரும்பி வர ஏனோ நள்ளிரவாகி விட்டது!

ஹால் சோபாவிலேயே படுத்திருந்தவள், கார் சப்தம் கேட்டதும் அவசரமாக ஓடிச் சென்று திறக்க, புருவங்கள் நெரிய அவளையே ஏறிட்டான் அவன்!



''எனக்காக யாரும் தூங்காமக் காத்திட்டிருக்க வேண்டாம்! என்கிட்ட ஒரு சாவி இருக்கு! இது என் வீடு... எனக்குத் தெரியும் உள்ளே வா.

''இந்த மாதிரி டிராமா போட்டு ரொம்ப பதிவிரதைத் தனமா நடந்தா நான் ஏமாந்துடுவேன்னு நினைப்பா? நோ.... ஐ ஹேட் யூ!''

அடிக்குரலில் சீறிவிட்டு அவன் உள்ளே செல்ல, உறைந்து போய் நின்றிருந்தாள் அவள்.... தன் உள்ளம் கவர் கள்வன் சிதறடித்த வார்த்தைகள் உயிர் வரை தீண்டி அவளை வதைத்தன!

என்ன செய்தாலும், அதை அவன் தவராகவே பார்ப்பத வாடிக்கையாகி விட, அவனிடமிருந்து பெரிதும் விலகிக் கொண்டாள் அவள்.

அப்போதுதான், வேலு மலேஷியாவிலிருந்து அடுத்த மாதமே இந்தியா வரப் போவதாகக் கூறினார்.

அதைக் கேட்டதும், அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியாய்!

எல்லா சொத்துக்களையும் விற்க ஏற்பாடு செய்து விட்டதாகவும்,

LIC LIC OF INDIA
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
GET REGULAR MONTHLY INCOME
• Bright career
• endless income
• Value added work
• Full time/ part Time
• All Segment Persons can join as an advisor
• No Risk - No Investment
• Convert Your Contacts in to Huge Regular monthly income.

Contact:
K. MOHANRAJ
DEVELOP MENT OFFICER
98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com

நாகம்மையுடன் கிளம்பி வருவதாகவும் அவர் கூற, லயாவின் மகிழ்ச்சி அவன் முகத்திலேயே தெரிவதாய்!

அவன் போனை வைத்ததும், "என்ன..... நாகம்மை ஆச்சி வந்துட்டா சமையல் வேலை இல்லை.... இஷ்டத்துக்கு கண்டவங்களோட ஊர் சுத்தலாம்னு ஜாலியா இருக்கா?"

எரிச்சலும் நக்கலுமாகக் கேட்டுவிட்டு அவன் நகர, அவளுடைய உற்சாகமும் மகிழ்ச்சியும் உடனே வடிந்துபோனது!

▸ ▸ ▸

நாட்கள் பந்தாடப்பட, வேலுவும் நாகம்மை ஆச்சியும் சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

லயாவிற்குத்தான் அவர்கள் வந்தது பெரும் இதமாய்...! ஓடி வந்து ஏர்போர்ட்டில் அவரைக் கைப்பிடித்து வரவேற்ற மருமகளை, வாஞ்சையுடன் முன்னுச்சி வருடி தோளோடு சேர்த்துக் கொண்டார் வேலு!

"எப்படிம்மா இருக்கே?"

அவர் ஆவலுடன் விசாரிக்க, "ம்... இனிமேதான் நீங்க வந்துட்டீங்களே.... ரொம்ப நல்லாயிருப்பேன் மாமா!" உள்ளார்ந்த நிம்மதியுடன் கூறினாள்.

அவருக்கோ எதுவோ புரிவது போல்!... மகனிடம் திரும்பினால் அவன் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான்.

இருவருக்குமிடையே எதுவோ சரியில்லை என்பது மட்டும், பக்குவப்பட்ட அவருக்குப் புரிவதாய்!

யோசனையுடன் வீடு வந்து சேர்ந்தவருக்கு, அந்த வீடு மிகவும் பிடித்துப் போயிற்று!

கப்பலில் கார்கோவில் பெட்டிகள் வருவதாகக் கூறியவர், வீட்டைச் சுற்றிப் பார்க்கத் துவங்கினார்.

பிறகு, பின்புறமிருந்த கடலைப் பார்த்துவிட்டு அவர் ஆர்வத்துடன் நடக்க, லயாவும் பின் தொடர்ந்தாள்.

அன்புடன் ஆர்ப்பரித்து வரவேற்ற கடல் அலையில் சிறு குழந்தையாய்த் தூமாகியவளுக்கு இப்போதெல்லாம் தனக்கு இந்தக் கடல் மட்டுமே உற்ற துணையாக இருப்பது நினைவிற்கு வருவதாய்!

"மாமா.... இப்பெல்லாம் இந்தக் கடலும், பாசத்தோட ஓடிவந்து செல்லப் பிராணியாட்டம் காலை வருடற.... அலையும்தான், எனக்கு



உற்ற நண்பர்கள்!"

உற்சாகத்துடன் அவள் கூற "ஏம்மா? யுவன் உனக்கு நல்ல நண்பனா, உற்ற துணையா இல்லையா?" நறுக்குத் தெரித்தாற்போல் வினவினார் அவர்.

அப்படியே விதிர்த்து நிமிர்ந்தவளின் முகம் வெளித்துவிட, "இல்லை மாமா! அப்படி இல்லை! அவர் இல்லாதப்ப எனக்க இதான் துணைன்னு சொன்னேன்!"

திக்கித் திணறி அவள் சமாளித்தாலும், "அப்படி இல்லைன்னு நீ சொல்றது நிஜமா இருந்தா சரிதான்! எனக்கென்னவோ அவன்கிட்டே ஒருவித விலகல் தன்மை தெரியுது.... அது ஏன்னுதான் தெரியலை!"

யோசனையுடன் முடித்தவரைப் பார்த்தபோது, அவளுக்கு மிகவும் பெருமையாய்!

எவ்வளவு அனுபவம் மிகுந்தவர்.... சரியாகக் கண்டுபிடித்து விட்டாரே!... இனி கவனமாக இருக்க வேண்டும்.... யுவனிடமும் சொல்ல வேண்டும்...." மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டாள்!

▸ ▸ ▸

மறுவாரமே, அதற்கான சந்தர்ப்பமும் அவளுக்கு வாய்ந்தது!

தொழில்முறை டின்னர் ஒன்றிற்காக முதன்முறையாக வேலுவின் வற்புறுத்தலால், அவளை வெளியே அழைத்துச் சென்றிருந்தான் அவன்!

அன்று காலையில் இரவு விருந்தைப் பற்றி இயல்பாகக் கூறியதுமே தீர்மானமாகக் கூறிவிட்டார் வேலு!

"யுவன்! எப்பவுமே எந்த விருந்தியலும் மனைவி கூட இருந்தா அதுக்க உண்டான மரியாதையே தனிதான்!

"அதனால் லயாவையும் கூட அழைச்சிட்டுப் போ!" அழுத்தமான குரலில் அவர் கூற, அவளால் மீறவும் முடியவில்லை!

இளம் ரோஜா வண்ண ஆர்க்கன்ஸாவில் வெள்ளி நிறத்தில் டிசைனர் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட புடவையும், தற்குப் பொருத்தமாய் அவன் கொடுத்த வைர செட்டும் அணிந்து தயாராகி அவள் வந்தபோது, நாகம்மை திருஷ்டி கழித்தே அனுப்பினார்.

மைக்கேல் ஆஞ்செலோவின் சிற்பம் போல், ஒரு தேவதையாய் வந்தவளை, பாசத்துடன் வரவேற்று பெருமையோடு மகனுடன் அனுப்பி வைத்தார் வேலு.

காரில் செல்லும்போது அவள் புறம் திரும்பியவன் ''என்ன.... அலங்காரமெல்லாம் பலமா இருக்கு! உன் லவரை பார்ட்டிக்க வர சொல்லி இருக்கியா?'' ஏளனத்துடன் வந்தது அவன் குரல்!

உடனே விதிர்ப்புடன் திரும்பியவள், ''சாரி! நீங்க எத்தனை தடவை கேட்டாலும் நான் சொல்றது தான் உண்மை! எனக்க அந்த மாதிரி யாரும் கிடையாது!'' அவளும் அழுத்தமாகவே முடித்தாள்.

''ஹூம்! நான் நம்ப மாட்டேன்!.... பெண்கள்.... நம்பிக்கைங்கற வார்த்தைக்கு தகுதியானவங்க இல்லை!'' கூ

அவர் விரக்தியுடன் முடிக்க, இவனை ஏதாவது ஒரு பெண் விரும்பி ஏமாற்றி இருப்பாளோ.... இவனை யாராவது வெறுத்து ஒதுக்க முடியுமா.... பல கேள்விகள் மனதில் வந்தன!

அப்போதுதான், அவன் தந்தை தன்னிடம் பேசியது ஞாபகம் வர, ''மாமாவுக்கு எதிர்லே நாம ரெண்டு பேரும்....'' தயக்கத்துடன் நிறுத்தினாள்.

''ம்.... நாம ரெண்டு பேரும்!'' விழிகள் இடுங்கக் கூர்மையுடன் கேட்டான் அவன்!

''இல்லை... மாமாவுக்காகத்தான்! மாமா.... என்கிட்டே வந்த அன்னிக்கே கேட்டுட்டாங்க! நம்ம ரெண்டு பேருக்கும் ஏதாவது பிரச்சனையான்னு! உங்ககிட்டே ஏதோ ஒரு வித விலகல் தன்மை தெரியதுன்னு சந்தேகப்பட்டாங்க!''

''ஓ! அதனால ஓடிவந்து அப்பா முன்னாடி உன்னை காதல் கணவனா அணைச்சிக் கொஞ்சணுமா? நெவர்!''

பற்களைக் கடித்து சீறியபடி காரை எடுத்தவன், ''எனக்கு எப்பவுமே நான் உபயோகப்படுத்தற எல்லாமே புதுசா இருக்கணும்! பொருட்களே இப்படின்னா.... இன்னொருத்தன் உபயோகிச்சுத் தூக்கி எறிஞ்ச செகண்ட் ஹேண்ட் மனைவி எனக்க வேண்டாம்!''

அவனது வார்த்தைகளில் எழுந்த உயிர் வேதனையில் வலியுடன் கண்களை இறுக மூடி!'' ப்ளீஸ்.... போதும்! என்னைக் கொல்லாதீங்க! என்னை எங்க அம்மா வீட்டில இறக்கி விட்டுடுங்க!'' தவிப்புடன் பகர்ந்தாள்.

''நோ! என்னோட பார்ட்டிக்கு நீ வரே! நீ ஆட்டுவிச்சா ஆடற பொமமையில்லை நான்! அங்கே வந்து சிரிச்ச மாதிரி எல்லார்கிட்டயும் நடிக்கணும்! நடிப்புதான் உனக்கு கை வந்த கலையாச்சே!''

அடிக்குரலில் கர்ஜித்துவிட்டு, காரை இன்னும் வேகமாக ஓட்ட



ஆரம்பித்தான் அவன்.

பிறகு நடந்ததெல்லாம், வெறும் மாயக்கனவமாய்!

பார்ட்டியில் அனைவரும் அவளுடைய உடையைப் பாராட்ட, பொய்ப் புன்னகையை இதழ்களில் சுமந்து ஒரு தேவலோகத்துத் தாரகையாய் வலம் வந்தபோதுதான், தன் கல்லூரித் தோழி ராணியைச் சந்தித்தாள் அவள்!

''ஹாய் லயா! எப்படி இருக்கே? எங்கே உன் ஹஸ்பெண்ட்? என்னை அவருக்கு அறிமுகம் செய்ய மாட்டியா?'' ஆவலுடன் கேட்டாள்!

அவளை, யுவனிடம் அழைத்துச் சென்று தன் வகுப்புத் தோழி என அறிமுகம் செய்தபோதுதான், விபரம் புரியாமல் உளற ஆரம்பித்தாள் அவள்!

''சார்! நீங்க ரொம்ப லக்கி! எங்க லயாவோட அழகுக்கு மயங்கி அவளை சுத்தின பசங்க எங்க காலேஜில அதிகம்! எங்களுக்கே அவளைப் பாத்தா பொறாமையா இருக்கும்!''

''ஆனா அவ அதைப்பத்தியெல்லாம் கவலையேபட்டதில்லை.... தான் உண்டு... தன் படிப்பு உண்டுன்னு இருப்பா! அதிலேயும் அந்த துரை இருக்கானே.... அவளையே சுத்தி சுத்தி வருவான்! ஏன்டி லயா?''

பெருமிதத்துடன் அவள் கேட்க, ''ப்ளீஸ்.... வேண்டாமே... போதும்'' என்பதுபோல் விழிகளால் இறைஞ்சினாள் அவள்!

எதையோ புரிந்து கொண்டாற்போல் உதட்டைக் கடித்து அவள் நிறுத்த, அதைக் கண்ட யுவனின் முகம் இறுகிக் கடினமுற்றது!

உடனே அவள் விலகிச் செல்ல, ''என்னடி? உன் ஹஸ்பெண்டுக்கும் உனக்கும் ஏதாவது ப்ராபளமா? நான் சாதாரணமாத்தான் சொன்னேன்.... சாரி!'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

''அது ஒண்ணுமில்லை ராணி! சின்ன ஊடல்தான்.... சரியாயிடும்!''

தர்ம சங்கடத்துடன் பூசி மெழுகிப் பதில் கூறியவள் அவளைப் பற்றி விசாரித்தாள்.

''நானா? உன்னை மாதிரியெல்லாம் கல்யாணம் செஞ்சுக்கிட்டு, அழகை ஆராதிக்கத் தெரியாத முசுட்டுக் கணவனோட கஷ்டப்படறதை விட, தனிமையே பெட்டர்னு எம்எஸ் படிக்கிறேன்!''

''சுதந்திரமா இருக்கப் போறேன்.... நிறைய படிச்சிட்டு வேலை பாக்கணும்.... செட்டிலாகணும்.... அப்புறம் வேணா கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்....'' உதட்டைப் பிதுக்கியபடி உரைத்தாள்!

"தப்பு ராணி! நானும் பாக்கறேன்..... இப்ப இருக்கற நிறைய 'யூத்' எல்லாருமே இதைத்தான் சொல்றாங்க!"

"ஏன்... நம்ம அப்பா, அம்மா எல்லாரும் சின்ன வயசுல கல்யாணம் செஞ்சுக்கிட்டு சந்தோஷமா இல்லையா? டிகிரி முடிச்சி ஒரு வேலையில் சேர்ந்தவுடனே கல்யாணம் செஞ்சுக்கறதுதான் நல்லது!

"நிறைய சாதிக்கணும்... வீடு வாங்கணும் கார் வாங்கணும்.... அதெல்லாம் முடிஞ்சி செட்டிலானப்புறம்தான் கல்யாணம் அப்படின்னா, இளமை தொலைஞ்சு போயிடுமே!

"அப்புறம் நாம விரும்பினாக்கூட நம்ம இளமைக் காலம் கிடைக்காது! இளமை உணர்வுகளை அடக்க முடியுமா தவறுகள ள் நடக்கலாம்.... கடைசி வரைக்கும் மனசளவில் இளமையா இருக்கறது நல்லதுதான்!

"ஆனா எதுவுமே உரிய காலத்துல நடக்கறதுதானே சரி! வயசாகி கல்யாணம் செஞ்சா பிரசவம் கஷ்டம்! குழந்தை வளர்த்து செட்டில் பண்ணனும்! நாம செட்டில் ஆகிட்டு பிள்ளைகளை சரியா செட்டில் பண்ணாம விட்டுடக் கூடாதே!

"அதுக்காக பதினெட்டு வயசிலேயே கல்யாணம் செஞ்சுக்க சொல்லலை! வேலைக்கு போயி ரெண்டு மூணு வருஷம் சேமிச்சிட்டு அப்புறம் பண்ணிக்கலாமே!"

லயா முடித்ததும் திடீரென்று யாரே கை தட்ட, வியப்புடன் திரும்பினால், ஒரு மத்திய வயதுப் பெண்மணி நின்றிருந்தார்.

"வெல் செட் மிஸஸ்...." அவர் திணற "மிஸஸ் லயாருதா யுவராஜ்!" என்று புன்னகைத்தாள் லயா.

"ஓ! நீங்க மிஸ்டர் யுவராஜுவோட மனைவியா? ரொம்ப அழகா சொன்னீங்க!"

"என் மகளும் இப்படித்தான் சொல்றா! செட்டிலாயிட்டு முப்பது முப்பத்தஞ்சு வயசில கல்யாணம் செஞ்சி இளமையைத் தொலைச்சி வாழறது சரியில்லைன்னு நானும் சொல்லிப் பாத்துட்டேன்!"

"இப்ப நிறைய பேரண்டஸுக்கு இருக்கற கவலையே இதுதான்! மிஸ்டர் யுவராஜ் கை குடுங்க! ரொம்ப அழகா இருக்கறதோட மட்டுமில்லாம, தீர்க்கமாக யோசிச்சி தெளிவாப் பேசற மனைவி அமையறது ஒரு வரம்!"

"யு ஆர் லக்கி" என்று அவர் பாராட்ட அவருடைய கணவர்தான் அவர்களுடைய அசோசியேஷனின் தலைவர் என்று புரிந்தது.



பிறகு அவரும் வாழ்த்த, ஏளமானய் உதட்டோரம் கருங்க அவளையே பார்த்திருந்தான் யுவன்!

பிறகு டின்னர் முடிந்து திரும்பிவரும்போது, சிறிது நேரம் அமைதியாகக் காரை ஓட்டி வந்தவன், திடீரென்று அவள் புறம் திரும்பினான்.

"அப்போ.... அந்த துரைதான் உன் காதலனா? அவனை ஏன் கல்யாணம் செஞ்சுக்கலை?" கேலியாகக் கேட்டான்.

கோபத்துடன் மறுத்துப் பேச வாயெடுத்தவளுக்கு ஆயாசமாய்.... என்ன சொன்னாலும் அவன் நம்பப் போவதில்லையென்ற உணர்வுடன் திரும்பியபோது அவள் கரம் இரும்பெனப் பற்றப்பட்டது!

"என்ன...? கேட்ட கேள்விக்கு பதிலே காணோம்! நான் கேட்டா பதில் வரணும்!"

ஆணித்தரமான குரலில் அவன் அதட்ட, "பச்! துரை, என் பின்னாடி சுத்தினது நிஜம்! காலேஜில் படிக்கும்போது இதெல்லாம் சகஜம்தானே!"

"அதக்காக பின்னாடி சுத்தறவங்களை எல்லாம் விரும்பவும் முடியாது! அவங்களை எல்லாம் என் காதலர்கள்ன்னு சொல்றதும் அபத்தத்!"

அவளும் அழுத்தமான குரலில் முடிக்க, தோளைக் குலுக்கியபடி எதிரிலிருந்த தார்ச்சாலையில் பார்வையைப் பதித்தான் அவன்!

# 14

வீட்டிற்கு வந்ததும், வேலுவே வந்து கதவைத் திறந்து, டின்னர் எப்படி இருந்ததென்று அவளிடம் விசாரித்தார்.

"ம்.... ரொம்ப நல்லா இருந்தது மாமா! நிறையப் பேரை மீட் பண்ணினேன்! அதிலே என் காலேஜ் மேட் ராணியும் இருந்தா! பொழுதும் நல்லாப் போச்சு!" உற்சாகமாகக் கூறினாள்.

"என்ன யுவன்? ஒண்ணுமே பேச மாட்டேங்கிற?"

வேலு கேட்டதும், "எல்லாத்தையும் தான் உங்க ஆசை மருமக சொல்லிட்டாளேப்பா.... நான் என்ன செய்யறது... இல்லியா டார்லிங்!"

அவளுடைய கன்னத்தை செல்லமாகத் தட்டியபடி அவன்

கேட்க, அவர் முகம் மலர, லயாவிற்குத் தான் உலகமே நட்டமாலை சுற்றுவதைப்போல்!

அப்படியே உறைந்து நின்றுவிட்டவளை, வேலுவின் குரல்தான் கலைத்தது!

''என்னம்மா.... அப்படியே நிக்கறே? தூக்கம் வரலியா?'' கிண்டலாகக் கேட்டார்.

''ம்... இல்லை... இதோ போறேன் மாமா!'' என்றபடி வேகமாகப் படியேறினாள்.

அவனுக்கு எப்படியோ? மயிற்பீலியாய் வருடிய அவனுடைய விரல்கள், கன்னங்களில் இன்னும் குறுகுறுத்தன!

ஒரு சிறு தொடுகையே, இவ்வளவு சிலிர்க்க வைக்கிறதே என்ற மாயக் கிறுகிறுப்பு அவளிடம்!

தன் அறைக் கதவைத் திறந்து அதே நினைவில் நுழைய.... முற்பட்டவளைத் தடுத்தது யுவனின் குரல்!

''என்ன? கன்னத்திலே தட்டினவுடனே அப்படியே பிரீஸ் ஆகி நின்னுட்டே! நீ தானே சொன்னே? அப்பா எதையோ கண்டுபிடிச்சிக் கேட்டாருன்னு! இனிமே கேக்கமாட்டார் இல்லையா?

திடுக்கிட்டு விழித்தவளது முகத்தில், வெந்நீரை அள்ளி விசியது அவன் பேசிய அடுத்த வார்த்தை!

''ஏதோ உன்மேல் ஆசையில் அப்படி செஞ்சதா நினைக்க வேண்டாம்! இப்ப தான் என் கையை டெட்டால் போட்டுக் கழுவிட்டு வரேன்!' அலட்சியமாகக் கூறிவிட்டு தன் அறைக்குள் சென்றுவிட்டான்!

அப்படியே உடைந்து சிதறிய இதயத்துடன், ஒரு விம்மலோடு உள்ளே ஓடி கதவைத் தாழிட்டுக் கொண்டவள், அப்படியே சரிந்து அமர்ந்து அழத் துவங்கினாள்!

வெகு நேரம் அழுதவளின் துயரங்கள் தீர்ந்த எழுந்தபோது, இதயம் கனத்து பலமிழந்திருந்தாலும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்திருந்தாள்.

''இனி அவன் என்ன பேசினாலும் பலவீனமாய் உடைந்து போய் அழக்கூடாது! அதை நிராகரிக்கப் பழக வேண்டும்! வாழ்க்கையில் காதல் மட்டும் தான் முக்கியமா என்ன.... என்னை வேறு நல்ல விஷயங்களில் ஈடுபடுத்தி, அதில் நிம்மதி அடைய வேண்டியது தான்!''

ஒரு முடிவுடன் உறங்க ஆரம்பித்தவள், காலையில் நேரே வேலுவிடம் வந்தாள்.



''மாமா! இங்கே ஏதாவது பிசினஸ் ஸ்டார்ட் பண்ணனும்னு சொன்னீங்க இல்லியா? இங்கே நீலாங்கரையிலே ஒரு சூப்பர் மார்க்கெட் இருக்கு!

''நேத்து என் காலேஜ்மேட் ராணிதான் சொன்னா! அவங்க அப்பாவோட ஃப்ரண்டுதான் அதை நடத்திட்டிருக்காரு! அவருக்கு இப்ப ஹார்ட் ப்ராப்ளம் வந்து, திடீர்னு சர்ஜரி பண்ற மாதிரி ஆய்டுச்சாம்!

''பாத்துக்க ஆளில்லாம விற்க முடிவெடுத்திருக்கிறதா சொன்னாங்க! நான் அவகிட்ட பேசிப்பாக்கவா? நாம அதை வாங்கி நடத்தினா என்ன மாமா?''

ஆர்வத்துடன் கேட்டவளை மகிழ்ச்சியுடன் ஏறிட்டவர், ''ஓ கேம்மா! இட்ஸ் எ குட் ஐடியா! கேட்டுப் பாரேன்? நாம் நேராவே போய்ப் பேசலாம்!'' உற்சாகத்துடன் அவளை ஊக்கினார்.

அன்றே ராணியிடம் பேசியவள், மறுநாளே வேலுவுடன் போய் அதன் உரிமையாளரை நேராகவே சந்தித்து பேசிவிட்டனர்!

பிறகு வீட்டிற்கு வந்து யுவனிடம் கூறியபோது, அவனோ புருவங்களை உயர்த்தி வெகுவாய் அதிசயப்பட்டான்.

''என்னப்பா திடீர்னு? என்கிட்டே எதுவுமே சொல்லலை?'' வியப்புடன் வினவினான்.

''இல்லைப்பா! நேத்துதான் லயா இதுபத்தி ப்ரெண்ட் சொன்னதா சொல்லிப் பேசினா! நேத்து நைட் நீ லேட்டா வந்தே! காலையிலே கான்பரென்ஸூன்னு சீக்கிரமே எழுந்து போயிட்டியாம்! லயாதான் சொன்னா!

''அவன உன்கிட்டே நைட் இதுபத்தி பேசியிருப்பான்னு நினைச்சேன்.... ஏம்மா... சொல்லலையா?'' அவளிடம் திரும்பிக் கேட்டார்.

''ம்... சொன்னேன் மாமா! அவர் டயர்டா இருந்தாரா.... அதான் கவனிக்கலை! காலையிலயும் பிஸியாக் கிளம்பிட்டாரு... சரி வந்தவுடனே சொல்லிக்கலாம்ன்னு விட்டுட்டேன்!''

அவள் இயல்பாக் மொழிய, சட்டென்று அவன் பார்வை கூர்மையுடன் அவளிடம் பதிந்தது!

பிறகு தோளைக் குலுக்கியபடி ''ஒகே! ஆல் தி பெஸ்ட் டேட்! ஏதாவது ஹெல்ப் வேணுமா?'' அமர்த்தலாக வாழ்த்தினான்.

''தேவைன்னா கேக்கறேன்ப்பா! லயா எல்லாம் பாத்துக்கறா.... அவ ஃப்ரெண்ட் ராணியோட அப்பா எல்லா ஏற்பாடும் செய்யறேன்னிருக்காரு!

பணம் ரெடியா இருக்கறதால ப்ராப்ளம் இல்லை!

"ஆனா, நீயும் வந்தா போய் அந்த சூப்பர் மார்க்கெட்டைப் பாத்துட்டு வந்துடலாம்!" ஆர்வத்துடன் அழைத்தார்.

"இன்னும் அதைப் பாக்கவே இல்லியே? அப்புறம் எப்படிப்பா ரேட் முடிவு பண்ணினீங்க?"

"நாங்க பாத்துட்டோம்ப்பா! நீ பாக்கணும் அதான்! இடம், அதில இருக்கற இன்டீரியர் பொருட்கள், ஸ்டாக் எல்லாம் சரி பாத்தாச்சு! நீ வந்து பாத்து சொன்னா மட்டும் போதும்! உடனே முடிச்சிடலாம்!"

"ஓ! சரிப்பா....! நாளைக்குப் போகலாம்!" அதற்கும் மேல் அதுவும் பேசாமல் மாடிக்குச் சென்றுவிட்டான்!

▸ ▸ ▸

மறுநாள், காலையிலேயே மூவரும் சென்று அந்த சூப்பர் மார்க்கெட்டைப் பார்வையிட்டபோது, யுவனுக்கும், திருப்தியாக இருக்கவே, ரேட் பேசி முடித்தனர்.

மறுவாரம் முழுவதும், அது சம்மந்தப்பட்ட வேலைகளே சரியாக இருந்தன.

வீட்டை பொறுப்புடன் நாகம்மை பார்த்துக் கொண்டதால், சூப்பர் மார்க்கெட் சம்மந்தப்பட்ட வேலைகளில் லயா முழுமூச்சுடன் ஈடபட முடிந்தது!

இப்போதெல்லாம், லயாவிற்கு எதைப் பற்றியுமே நினைக்க நேரமில்லை!

கடை, அதன் முன்னேற்றம் செயல்பாடுகள் இவையே மனதை முழுமையாய் ஆக்கிரமித்திருந்தன.

▸ ▸ ▸

அப்போதுதான் சுந்தரின் திருமண நாளும் வந்தது!

அனைவரும் கிளம்பி வேதாரண்யத்திற்குச் செல்ல, அங்கே இரு பாட்டியையும் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது லயாவிற்கு!

மாப்பிள்ளை வீட்டு சார்பில், வீட்டு மருமகள் என்ற முறையில் எல்லா வேலைகளையும் ஆர்வத்துடன் செய்தாள் அவள்!

இரண்டு நாட்களாக உள்ளூர்வாசிகளுக்கு பத்திரிகை கொடுப்பதற்காக, யுவனும் அவளுமே ராஜகோபாலுடன் சென்று வந்தனர்.



கணவனுடன் வெளியே செல்வது அவளுக்கு நிறைவாக இருந்தாலும், அவனோ அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

சென்ற இடமெல்லாம் தன்னுடைய அண்ணன் மகன், தங்கை மகளென்று அவர்களைப் பெருமையுடன் அறிமுகம் செய்தார் ராஜகோபால்.

நந்தா பாட்டிக்குத்தான் மிகவும் பெருமை.... தன் பேத்தி மிகவும் பொறுப்புள்ளவளாக மாறி இருப்பது அவருக்குப் பெருமிதமாய்!

வேலுவும், லயாவின் நிர்வாகத் திறமை பற்றியும் சமையல் பற்றியும் புகழ சந்தா பாட்டிக்கும் நிறைவாய்!

இப்படி ஒரு மருமகள் கிடைக்க தானும் யுவனும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று, உளமாரப் புகழ்ந்தார் அவர்.

எல்லாவற்றையும் இடுங்கிய கண்களும், தட்டோர சுழிப்புமாய் வேடிக்கை பார்த்திருந்தான் யுவன்!

"என்ன யுவன்! ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே? எங்க பேத்தி லயா எப்படி?" புன்னகையுடன் வினவினார் நந்தா.

சட்டென்று எழுந்து தோளைக் குலுக்கியபடி "பாட்டி! அதான் அப்பா இவ்வளவு நேரமா அவ புராணமே பாடிட்டு இருந்தாரே! நான் வேற தனியா சொல்லணுமா பாட்டி!" என்றபடி உள்ளே சென்றான்.

மற்றவர்களுக்குப் புரியவில்லை என்றாலும், தன்னைப் பற்றி யாரும் பெருமையாகப் பேசினால் அவனுக்கப் பிடிக்கவில்லை என்பதும் சிறு வலியுடன் உணர்ந்தாள் லயா!

இயத்தை, இறுக்கமாய் ஏதோ ஒரு உணர்வு சூழ்வதைப் போல்!

அந்த வேதனைக்கு மருந்தாய், மறுநாள் காலையிலே வந்து சேர்ந்தாள் இந்து.

தன் குடும்பத்துடன் அவள் திருமணத்திற்கு வந்து, ஆவலுடன் நலம் விசாரிக்க ஆரம்பித்து, பிரிந்திருந்த கதைகளைப் பேசத் துவங்கினாள்.

# 16

அன்று முழுவதும் திருமண வேலைகள், சுமங்கலி ப்ரார்த்தனை என்று இருவருமே அதில் ஆழ்ந்திருந்தனர்.

அன்று மாலையில் ரிசப்ஷன் இருந்ததால், இருவரும் மாடியில்

தயாராகிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று கீழே பெரும் பரபரப்பும் கூச்சலும் கேட்க, பதறிக் கீழே வந்தால், விஜயா பெரும் குரலெடுத்து அழுது கொண்டிருந்தார்.

லயாவிற்கோ ஒன்றுமே புரியவில்லை!

பாட்டிகள் இருவரும் முகம் சுருங்கி வேதனையுடன் அமர்ந்திருக்க, ராஜகோபால் இறுகிய முகத்துடன் நின்றிருந்தார்.

அப்போதுதான் ஊரிலிருந்து காரில் வந்து இறங்கிய சுதர்சனமும் பாமாவும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

சுந்தரை எங்கும் காணாமல் அவனுடைய அறைக்கு தேடிச் சென்றவள், யுவனும், அவனும் பேசிக் கொண்டிருந்ததால், வாசலிலேயே நின்றுவிட்டாள்.

''கவலைப்படாதே சுந்தர்! இதே முகூர்த்தத்துல வேற ஒரு பொண்ணை உடனே பார்த்து முடிச்சிடலாம்! உடைஞ்சு போயிடாதே.... அந்தப் பொண்ணு இப்படி ஒரு தவறான முடிவெடுப்பான்னு யாருக்கும் தெரியாது!''

அடிக்குரலில், தம்பியை அவன் ஆறுதல் படுத்திக் கொண்டிருக்க, பகீரென்றது அவளுக்கு!

''ஏன்.... அந்தப் பொண்ணுக்கு என்னாயிற்று? யாருடனாவது ஓடிப்போய் விட்டாளா?'' பதட்டத்துடன் உள்ளே சென்றாள்.

''என்னாச்சு சுந்தர்! ஏன் இப்படி எல்லாரும் கவலையா இருக்காங்க! மாமி அழறாங்களே? கல்யாணப் பொண்ணுக்கு என்னவாம்?'' கவலையுடன் கேட்டாள்.

சுந்தர் பதில் கூறாமல் இரு கைகளிலும் தலையைத் தாங்கி அமர்ந்திருக்க, யுவனிடமிருந்து வந்த பதில், பேரிடியாய் அவளைத் தாக்கியது!

''அந்தப் பொண்ணு.... தூக்குப் போட்டு தற்கொலை செஞ்சுக்கிட்டாளாம்!''

அவன் வார்த்தைகள் அவளை உலுக்கிவிட, அப்படியே அதிர்ந்து போய் சுவரில் சாய்ந்துவிட்டாள்!

''கடவுளே...'' இதழ்கள் தன்னிச்சையாக முணுமுணுக்க, தொண்டை உலர்ந்து போனது!

இப்போது என்ன செய்வது.... பதறித் துடித்தது நெஞ்சம்!



மெதுவாக வெளியேறி பாட்டியிடம் வந்தபோது, சந்தா மெல்லப் புலம்பத் துவங்கினார்.

''இவன் குடும்பத்துக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு கஷ்டகாலம்? முதல்லே ரோகிணி ஓடிப்போனா? அதே இன்னும் சரியாகலை! அதுக்குள்ளே இன்னொரு அடியா? கோபால் எப்படி தாங்குவான்?'' வேதனையுடன் ஆற்றினார்.

அப்போதுதான் பெண் வீட்டிலிருந்து வந்திருந்த மனிதர், கவலையுடன் தன் மாமனாரிடம் பேசிவிட்டுக் கிளம்புவதைக் கண்டாள் அவள்.

மெதுவாக பார்வையை விலக்கியபோது அதில் பதிந்த முதல் உருவம் பெரும் நம்பிக்கையைத் தர, உடனே ஒரு எண்ணம் பளிச்சிட்டது!

சிறு நம்பிக்கை ஒளி, கீற்றாய் உள்ளூர மலர, ''இந்து! என் கூடக் கொஞ்சம் வரியா?''

தங்களின் அறைக்குள் சென்றதுமே பரபரப்புடன் கதவைத் தாளிட்டவள், ''இந்து! உனக்கு சுந்தரைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதமா? எனக்காகவோ இல்லை.... இன்னிக்கு நடந்த இந்த துக்ககரமான சம்பவத்துக்காகவோ பாக்க வேண்டாம்!

''உன் ஆழ்மனசு விரும்பினா மட்டும் சொல்லு! உன் அப்பா அம்மாவும் இங்கேதானே இருக்காங்க.... உடனே பேசி முடிவெடுத்திடலாம்! சுந்தர் மேல எந்த வெறுப்பும் இல்லையே?''

''ஏன்னா இன்னொரு அதிர்ச்சியை.... புறக்கணிப்பை அவரால் தாங்க முடியாது!'' மெல்லிய பெருமூச்சும் தவிப்புமாய் முடித்தாள் லயா.

ஒரு நிமிடம் யோசித்த இந்துவிடமிருந்து, மறு நிமிடமே தீர்க்கமாக வந்தது பதில்!

''ம்.... எனக்கு சம்மதம் லயா! சுந்தர் மேல மதிப்பு மரியாதை அப்படின்னெல்லாம் பொய் சொல்றதைவிட, எப்பவுமே அவர் மேல ஒரு தனி ஆர்வம் இருந்தது உண்மை!''

சிறு வெட்கமும் தவிப்புமாக அவள் உரைக்க ''அடி கள்ளி!'' என்றபடி உற்சாகத்துடன் அணைத்துக் கொண்டாள் அவள்!

பிறகு அவள் வெளியே சென்று விவரம், எவ்விதத் தடையுமின்றி உற்சாகமும் கோலாகலமுமாக நடந்து முடிந்தது சுந்தர் இந்து திருமணம்!

பாட்டிகள் இருவருமே லயாவின் சமயோசித அறிவை மெச்சிப் பாராட்ட, பெரியவர்கள் அனைவரும் பெருமிதமாய் உணர்ந்து நன்றி கூற யுவன் மட்டுமே பெரும் வெறுப்புணர்வுடன் அவளிடமிருந்து விலகியே இருந்தான்.

# 17

காலம்.... காட்டாற்றின் பயணமாய் விரைய, சுந்தரின் திருமணம் முடிந்து மூன்று மாதங்களாயிருந்தன.

தினமும், தன் தோழி இந்துவுடன் பேசுவதை, ஒரு வழக்கமாகிக் கொண்டிருந்தாள் லயா!

சந்தாபாட்டியும் இப்போது வேதாரண்யத்தில் இருந்தது வேறு, அவளை அடிக்கடி அவருடன் இணைத்து வைக்கும் பாலமாய்!

இப்போது, டிபார்ட்மெண்டல் ஸ்போர்ஸில் அவள் பெரும் மாற்றங்கள் செய்திருக்க, தொழில் பல மடங்கு லாபம் ஈட்டித் தந்தது.

அந்தப் பெண்மணியிடம் குழந்தைக்கான பால் பவுடரை எடுத்து அளித்து விட்டுத் திரும்ப, ''ஹேலோ, லயா! எப்படி இருக்கிங்க?'' ஆர்வமாய் ஒலித்த குரலில் கேட்டு நிமிர்ந்தாள் அவள்!

எதிரே, அவளுடன் படித்த துரை நின்று கொண்டிருந்தான்!

''ஓ! நீங்கதான் லயாவா? உங்களைப் பத்தி இவர் நிறைய சொல்லியிருக்காரு!'' அந்தப் பெண் ஆர்வமும் தர்மசங்கடமுமாக நிறுத்தினாள்.

உடனே யோசனையும் கேள்வியுமாக உயர்ந்த விழிகள் துரையை ஏறிட, ''சாரி லயா! நான் என் மனைவியிடம் எதையுமே மறைக்கலை! நான் உங்களை விரும்பினது.... நீங்க மறுத்தது.... நான் காதல் தோல்வியில் கொஞ்சநாள் பித்துப்பிடிச்ச மாதிரி அலைஞ்சது.... எல்லாமே அவகிட்டே சொல்லிட்டேன். எப்பவுமே ஒப்பனா இருக்கிறது நல்லதில்லையா? உன்... சாரி.... உங்களை பத்தி எல்லா விபரமும் என் மனைவிக்கு தெரியும்?

''உங்களோட அழகு.... படிப்புல உள்ள ஆர்வம், அனாவசிய அலட்டல் இல்லாத பழகிற முறை, ஆண்களை ஒரு பொருட்டா மதிக்காம தூரத்திலேயே நிறுத்தி வைக்கிற சின்னத் திமிர், கடைசி வரைக்கும் எந்த ஆணிடமும் மாட்டமா நம்ம காலேஜ் ஆண்கள் மனகல ஒர புதிர் தேவதையா இருந்த உங்களைப் பத்தி முதலிரவிலேயே



பேசிட்டேன்!

''அப்புறம் வாழ்க்கையிலே சந்தேகம் வரக்கூடாது பாருங்க.... அதான்!'' இயல்பாக முடித்தான்.

மனம் ஏனோ படபடக்க, ''சாரிம்மா! துரை கொஞ்சம் ஓவரா சொல்றாரு! நீங்க தப்பா எடுத்துக்காதிங்க.... அப்போ எனக்கு காதல், திருமணம் இதிலெல்லாம் பெரிசா ஆர்வம் இருந்ததில்லே.... அதான்! அவர் பேச்சு உங்க மனசை ஏதாவது புண்படுத்தியிருந்தா.... சாரி! ''தர்மசங்கடமும், வேதனையுமாகக் கூறினாள் லயா''

''அப்படி இல்லீங்க! மறைச்சு வைக்காம, எல்லாத்தையும் அவர் வெளிப்படையாப் பேசினதுதான் எனக்கு அப்போ ரொம்பப் பிடிச்சிருந்தது! இப்பப் பாருங்க அவர் மேல எனக்கு எந்த சந்தேகமும் இல்லை! நம்பிக்கை மட்டும்தான் இருக்கு!

''அதுக்குக் காரணமாயிருந்த உங்களுக்கு, நான்தான் ''தேங்க்ஸ்'' சொல்லணும்! நீங்க ஏன் மேடம் சாரி சொல்றீங்க?''

அந்தப் பெண் முடிக்க, அவளின் பேச்சு ல்யாவிடம் புன்னகையை வரவழைக்க, குழந்தையை வாங்கி முத்தமிட்டு ஒரு சாக்லேட்டையும் அளித்து, திரும்பக் கொடுத்தாள்!

அதுவரை எல்லாவற்றையும் கேட்டபடி அடுத்த வரிசையில் நின்றிருந்த யுவனின் வலிய பாதங்கள் வேரோறடபிடுங்க, மனமே குழப்பமாய்!

''இந்த துரையைத்தானே லயா விரும்பியதாக நான் தப்புக் கணக்கு கோடிட்டு அவளை கடும் சொற்களால் வேதனைப்படுத்தினேன்? இவள் ஒருவேளை நல்லவளோ?'' முதன் முறையாக குழம்பிய மனதிற்குள் பல எண்ணத் தூண்டில்கள்! இன்சூரன்சிற்காக, அவளிடம் ஒரு கையெழுத்து வாங்குவதற்காக வந்தவன், அவளைத் தேடி வந்தபோதுதான், இந்த உண்மையை அறிய, வந்த சுவடின்றி உடனே திரும்பிச் சென்றவனை, ராஜவடிவேலுதான் அழைத்தார்.

''என்னப்பா! கையெழுத்து வாங்கிட்டியா?''என்ற குரலில் கலைந்தவன் ''இல்லைப்பா! அவளைப் பாக்க முடியலை! இங்கேயே வெயிட் பண்றேன்!'' என்றபடி கௌண்ட்டர் அருகே காத்திருந்தான்.

சிறிது நேரத்தில், அங்கு வந்த லயாவிற்கோ, பெரும் தர்மசங்கடமாய்!

அந்த நேரத்தில், யுவனை அங்கு எதிர்பார்க்காததால், துரையும் உடன் வர முகம் வெளிறிப் போயிற்று!

''லயா! யுவா உன்னைப் பாத்து ஏதோ கையெழுத்து வாங்க

வந்திருக்காம்மா!”

இயல்பாகப் பேசியபடி வந்த ராஜவடிவேலுவிடம் மரியாதைக்காக துரையையும், அவர் மனைவியையும் அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயத்திலிருந்த லயாவிற்கோ, பெரும் அவஸ்தையாய்!

உடனே அவருடைய கைகளைப் பற்றிக் குலுக்கியவன், “என் பெயர் துரை சார்! நான் லயாவோடப் படிச்ச க்ளாஸ்மேட்!” என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

உடனே, யுவன் என்ன நினைப்பானோ என்ற பயமும் தவிப்புமாய் பற்களால் உதட்டை அழுந்தக் கடித்தபடிக் காத்திருந்தாள் லயா!

“ஹலோ துரை! நல்லாயிருக்கீங்களா?.... என் மனைவி லயாவும் உங்களைப் பத்தி என்கிட்ட எல்லாம் சொல்லியிருக்கா!” என்றபடிக் கைகுலுக்கி விட்டு ஒற்றைக் கண் சிமிட்டி குறும்பாய் அவன் சிரிக்க, இன்று தனக்கு மண்டகபடி காத்தி கிடக்கிறதோவென லயாவின் உடல் குலுங்கியது!

இருவரும் நட்புணர்வுடன் பேசி முடித்து வெளியேற, அப்போதுதான் லயாவின் செல் குயிலாக அழைத்தது!

எடுத்துப் பார்த்தால் இந்துதான் அழைத்திருந்தாள்! “என்ன இந்து நல்லாயிருக்கியா? குட்டிபாப்பா எப்படி இருக்கு ஜாக்கிரதையா இரு!”

நேற்றுதான் தான் தாயகப்போகும் அந்த இனிய செய்தியை இந்து கூறியிருந்தால், ஆர்வத்துடன் விசாரித்த லயாவிற்கு, அவள் உடைந்து அழுவது கேட்டது!

“லயா! சந்தாபாட்டி, நம்மையெல்லாம் விட்டுட்டு” மேலே கூற முடியாமல் அவள் அழ காலின் கீழ் பூமி நழுவியது லயாவிற்கு!

“என்னம்மா?” அவள் முகத்தையே நோக்கியிருந்த ராஜவடிவேலு பதட்டமாய் வினவ, அதிர்ச்சியில் சரிந்த அவளை உடனே தாங்கிபிடித்தன யுவனின் வலிய கரங்கள்!

பிறகு விபரமறிந்து, ஸ்டோர்ஸ் இன்சார்ஜ் மேனேஜரிடம் ஒப்படைத்து, உடனே மூவரும் காரில் கிளம்பி வேதாரண்யத்திற்கு விரைந்தனர்.

# 18

வேதாரண்யத்திற்கு சென்றதும், பாட்டியின் இழப்பு இருவரிடமும் வலியுடன் பதிய, இறுதிச் சடங்குகள் முடிந்தும், யுவன்



பெரிதும் ஓய்ந்திருந்தான்!

தன்னைத் தாயாய் வளர்த்தவரின் இறுதி நேரத்தில் அவருடன் உடல் இருக்க இயலவில்லையென்ற தவிப்பும் வேதனையும் அவனைப் பெரிதும் பாதித்து இறுகச் செய்திருந்தது.

பிறகு தொடர்பு காரியங்களில் அனைவரும் கனத்த இதயத்துடன் பங்கெடுக்க, நந்தா பாட்டியை “தேற்றும் பொறுப்பு லயாவுடையதாயிற்று!

தொடர்ந்து மூன்று நாட்கள் இறுக்கத்துடன் கழிய, பதினோராம் நாள் காரியம் வைத்திருந்தால், அன்றிரவு, யுவன் ஊருக்குக் கிளம்புவதாக இருந்தான்.

அன்று மதியம்.... அழுதழுது சோர்ந்த முகத்துடன் இருந்த இந்துவை அவள் ஆறுதல்படுத்த, அவள் கூறிய செய்தியே பேரிடியாய்!

“லயா! நான் உன் கூடவே வந்திடுறேன்.... சுந்தர் எனக்கு துரோகம் பண்றமாதிரித் தெரியுது!

ஒருநாள் நம்ம வீட்டு புது டிரைவர் வந்து சொன்னப்ப என்னால நம்ப முடியலை! ஆனா, எங்கப்பாவே, டவுனிலே அவரை ஒரு பெண்ணோடவும், குழந்தையோடவும் பாத்திருக்காரு!

“அம்மா சொன்னப்ப, என்னால நம்ப முடியலை. நம்பாம இருக்கவும் முடியலை! இதுக்குமேல இவரோட எப்படி வாழறது? என் வாழ்நாளுக்கு இந்த குழந்தை போதும்! உன் ஸ்டோரிலேயே எனக்கு ஒரு வேலை குடு.... உன்னோடவே இருந்திடறேன்! நம்பிக்கை துரோகத்தை மட்டும் என்னால சகிச்சிக்க முடியாது”

பின்புறத் தோட்டத்தில், யாருமில்லாத் தனிமையில்.... கைகளில் முகம் புதைத்துக் கதறிய இந்துவை அணைத்து சமாதானப்படுத்தியபடி நிமிர்ந்த லயாவின் எதிரே, ரௌத்ரமாய் நின்றிருந்தான் யுவன்!

உடனே பதறி எழ முயன்ற லயாவின் அசைவில் கலைந்த இந்துவும், பதறிப்போனாள்!

உடனே, “நீ கவலைப்படாதே இந்து! நான் இதுக்கு ஒரு முடிவு தெரியாம இங்கே இருந்து போகமாட்டேன்! அந்த டிரைவருக்கு அந்த வீடு தெரியுமா? சே.... சுந்தர் இவ்வளவு மோசமா இருப்பான்னு நான் கனவிலக் கூட நினைக்கலை! சித்தப்பாவுக்கு ஏன் இப்படி ரெண்டு பசங்க பிறந்தாங்கன்னு தெரியலை... ப்ச்” எரிச்சலுடன் மொழிந்தவன், உடனே காரியத்தில் இறங்கிவிட்டான்.

டிரைவருடன் அந்த வீட்டிற்கு சென்று பார்த்தவனுக்கு, அங்கு பல அதிர்ச்சிகள் காத்திருந்தன.

அழைப்பு மணியை அழுத்திவிட்டு வன்மமும் கோபமுமாய் காத்திருந்தவன், சத்தியமாக அங்கு அவன் தங்கையை எதிர்பார்த்திருக்கவில்லை!

குழந்தையைத் தோளில் சுமந்தபடி கதவைத் திறந்த ரோகிணிக்கோ, தன் அண்ணன் யுவனை கண்டதும் பெரும் தர்ம சங்கடமாகிப் போனது!

"ரோகிணி! நீ எப்படி இங்கே? அப்போ.... சுந்தர்?" ஆச்சரியமும், குழப்பமுமாக நிறுத்தினான் அவன்!

"உள்ளே வாங்கண்ணா!" என்றபடிக் கலங்கிய விழிகளுடன் அழைத்தவனைப் பின் தொடர்ந்தவனை, அந்த வீட்டின் எளிமை பெரிதும் பாதிப்பதாய் ஒரு நாற்காலியில் அவனை அமர வைத்தவள்.

"சுந்தர் அண்ணாதான், எனக்கு இப்போ ரொம்ப உதவி இருக்காங்க! நான் விரும்புனவரு எனக்கு குழந்தை பிறந்தவுடனே என்னை விட்டுட்டுப் போயிட்டாரு! நான் நிர்கதியா தவிச்சி நின்னப்பதான், எங்க பக்கத்து வீட்டுக்காரங்களோட உதவியால இங்கே வந்தேன்!"

"மில்லிலே அப்பாவைப் போய்ப் பாத்தேன்! அவங்க என்ன ஏத்துக்க முடியாதுன்னு சொல்லி விரட்டிட்டாங்க! அப்போதான் சுந்தர் அண்ணா என்னைப் பாத்துட்டு கொஞ்சநாள் பொறுத்துக்க சொன்னாங்க.... எங்களுக்கான செலவையும், இந்த ரெண்டு மாசமா அண்ணாதான் பாத்துக்கறாங்க!

"எப்படியாவது அப்பாவோடப் பேசி சரி செஞ்சி என்னை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறதா சொல்லியிருக்காங்க..... அதோட லயா அண்ணிக்கும் என்னால அவமானம்தான்! அதுக்குக் கூட நான் அவங்ககிட்டே மன்னிப்பு கேட்கலை.... என்னால எல்லாருக்குமே கஷ்டமும், அவமானமும் தான்!"

அவன் குலுங்கி குலுங்கி அழ, இதில் லயா எங்கிருந்து வந்தாளென்ற யோசனையுடன் அவன் அமர்ந்திருந்த போதுதான், ரோகிணி தொடர்ந்தாள்!

"தான் லயாவின் அழகில் பொறாமையாகி அவனிடம் அவளைப் பற்றி குறை கூறியது... அன்று ஷாப்பிங் சென்றபோது மயங்கி விழுந்தது.... உடனே லயா அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது... தான் கர்ப்பம் என்பதை அறிந்ததும் லயாவின் குடும்ப



டாக்டரிடம் சென்றது.... யூரின் டெஸ்ட், ஸ்கேன் செய்து கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது.... தன் அழுகை... அபார்ஷன் செய்ய டாக்டர் மறுத்தது.... வீட்டில் பேசி அவனுடன் ஓடிப் போனது.... தன் குடும்பத்திற்கு தீரா அவமானத்தைத் தேடித் தந்தது.... இப்போது அதன் பலனை அனுபவிப்பது"

ஒவ்வொன்றாக அவள் கூற, அதிர்ந்து உறைந்து அமர்ந்திருந்த யுவனின் நெஞ்சக் கூடே சிதைந்ததுபோல்!

ஒரு தவறும் செய்யாத லயாவை, இதில் சம்மந்தப்படுத்தி தான் எடுத்த தவறான கணிப்பும், முடிவுகளும்.... அவள் முன் விசுவரூபம் எடுத்து நிற்பதால்!

"சுந்தர் அண்ணாவுக்கும், எல்லாமே அப்புறம் லயாண்ணி சொல்லித் தெரியும்னு தெரிஞ்சிக்கிட்டேன்! பாட்டி இறந்தப்ப கூட யாரோ மாதிரி வந்து பாத்திட்டு வந்திட்டேன்" குலுங்கி அழுதாள் ரோகிணி!

உடனே அந்தக் குழந்தையைத் தூக்கியவன், "என் கூட வாம்மா! இன்னிக்கு நாம பல முடிவுகள் எடுத்தாகணும்! சித்தப்பாவோட நான் பேசறேன்" என்றபடி அவளையும் அழைத்துக் கொண்டு காருக்கு வர, டிரைவரோ பதறிப்போனார்.

வீட்டைப் பூட்டிவிட்டு உடன் ஏறிய ரோகிணியும் அழுதபடியே வர, வீட்டிற்கு சென்று இறங்கியதும், அனைவருக்குமே பலத்த அதிர்ச்சியாய்!

▸ ▸ ▸

பிறகு தொடர்ந்த நிமிடங்கள் யுவனுடைய விளக்கத்திலும், ரோகிணியின் அழுகையிலும் கழிய, வெறுப்புடன் சென்று தன் அறைக்கதவை வேகமாக மூடிக் கொணடார், ராஜகோபால்!

விஜயா குழந்தையை அணைத்தபடிக் கண்ணீர் சொரிய, இந்துவும் அப்போதுதான் உண்மை உணர்ந்து அவரை சமாதானப்படுத்த ஆரம்பித்தாள்.

லயாவும், சுந்தரும் மௌனமாக நின்றிருக்க, ராஜவடிவேலுதான் ஒரு முடிவெடுத்து தம்பியுடன் பேசச் சென்றார்.

நந்தா பாட்டியும், கனகசபாபதி தாத்தாவும் புது வரவாகிய குழந்தையை ஆவலுடன் கொஞ்ச ஆரம்பிக்க யுவனுக்குள்ளே பெரும்

பிரளயம் மையம் கொள்ள ஆரம்பித்தது!

''எப்படி லயாவை சமாதானப் படுத்தப்போறேன்'' யோசனையுடன் மெல்லத் திரும்பினால், அங்கு லயாவைக் காணவில்லை.

சுந்தரும் அவன் பார்வைத் தேடலை உணர்ந்து, ''அண்ணி! தோப்புப் பக்கம் நடத்திட்டு வரேன்னு இப்பத்தான் போனாங்க'' மெல்லப் பகர்ந்தான்.

▸ ▸ ▸

தென்னந்தோப்பிற்குள் மெல்ல நடந்து கொண்டிருந்த லயாவின் மனதிலோ, பெரும் சோர்வும் விரக்தியும்!

எல்லோருடைய பிரச்னையும் தீர்ந்துவிட, தனக்கும் சுலபமாக யுவனுக்குமிடையே மட்டும் பெரும் சீனச் சுவராய் பிரிவெனும் பெரும் துயர் நிற்பது புரிவதாய்!

''என்ன சொல்லி உன்னிடம் என் அன்பைப் புரிய வைப்பேன் என் அரச குமாரனே?'' இதயம் பதறித் துடித்து கலக்கம் சுழுந்தது!

''பட்டிக்காடு!'' மெல்லிய சீறலாக ஒலித்த யுவனுடைய குரல், அவளை உரையச் செய்வதாய்? இருவரும் இதுவரை போட்ட சிறுசிறு சண்டைகளை பெரிய சந்தோஷமாக முடித்து வைக்க ஒத்திகை பார்த்தது அந்தக் குரலின் சீண்டல்!

நம்ப முடியாமல் மெல்லத் திரும்பியவளை, வலிமையுடன் ஆட்கொண்டது அவனுடைய இறுகிய அணைப்பு!

தலைப்புடன் கூடிய வெட்கக்கவிதையாய் மாறியவளை திடீரென்று மடை திறந்த வெள்ளமாய் பெருகிய முத்தச் சிதறல்கள்.... மாய உலகிற்கு அழைத்துச் செல்ல, காதலாகிக் கசிந்துருகி நின்றது அந்தப் பெண்மை!

அவள் வீசிய முதல் வெட்கம்.... அவனை வெகுவாய் ஆட்படுத்த, மெதுவாக சுயநினைவிற்கு வரும்போது, மென்மையாக விடுவித்து அவளிடம் பேசத்துவங்கினான் யுவன்!.... அவளின் உள்ளம் கவர் கள்வன்!

தான் அவளைத் தவறாய் புரிந்து கொண்டதிலிருந்து, இன்று உணர்ந்தது வரை அவன் முடிக்க, தந்தச் சிற்பமாய் நின்றிருந்தவளின் விழிகள், மெல்லப் பனித்தன!



''சாரி லயா! என் செல்லப் பட்டிக்காடு! ஏன் துரையை விரும்பறேன்னு பொய் சொன்னே?'' பெரும் ஆதங்கத்துடனும் அலைப்புறுதலுமாய் வந்தது, அவன் கம்பீரக் குரல்!

''நான் துரையை விரும்பறேன்னு சொல்லலை! நீங்க அன்னிக்க பெரியவங்களுக்காக இந்தத் திருமணத்திற்கு ஒதுக்கிட்டதா சொன்னது.... காதல் திருமணம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாமப் பேசினது! பெண்களை மதிக்காம இந்தக்காலத்து ஜெனரேஷனைப் பத்தி தவறாக் கணிச்சது! எல்லாமா சேர்ந்து என்னை அப்படி ஒரு பொய் சொல்ல வச்சிது!

''அப்புறம் நானும் எத்தனையோ தடவை அதைப் பொய்யின்னு சொல்லி சரி செய்ய முயற்சி செஞ்சப்ப.... எல்லாம் நீங்க நம்ப மறுத்திட்டீங்க! நான் முதன் முதல்லே விரும்பினதே... உங்களைத்தான்!'' கூறிவிட்டு கண்களை மெல்ல மூடித் தன் நாணத்தை மறைத்தது, அந்தப் பெண்மை.

சட்டென்று ஒலித்த வேக மூச்சுடன் அவளை இறுக அணைத்தவன், உடனே விடுவித்து, ''எப்போ.... கல்யாணத்துக்கு அப்புறமா?'' என்றான் சீண்டலாக.

''ஊஹூம்... முன்னாடியே! நம்ம கல்யாணம் முடிவானவுடனேயே''

அவளுடைய இதழ்கள் ஒன்றையொன்று முத்தமிட்டுப் பேச ஆரம்பிக்க, அவற்றை தாபத்துடன் தூர்ந்தவனுடைய விழிகளின் முன் அவளுடைய வெட்கம் பெரும் போர்வையாய்!

''ஏய் மேலே சொல்லு! ஏன் அமைதியாயிட்டே?'' மெலிதாய் ஒலித்த அவனுடைய சீண்டலான குரலில் சிலிர்த்து நிமிர்ந்தவள், ''ம்.... இப்படி என்னையே முழுங்கறாப்ப பாத்த எப்படிப் பேசறதாம்?'' செல்லமாகச் சிணுங்கினாள்.

''சரி! சொல்லு! நான் பாக்கலை!'' உடனே கைகட்டி விழிமூடி அரைக்கண் திறந்து கிறக்கமாக அவன் நோக்க ''ம்.... உங்களை தவிர என் உயிரா விரும்பினேன்.... ஆனா என்னால அதை உங்க முன்னாடி சொல்ல முடியலை'' குறும்புடன் முடித்தான்!

உடனே அவள் நாசியைப் பிடித்து செல்லமாகத் திருகியவன் ''ஏன் என்கிட்ட சொல்லலை? எனக்கும் அப்படித்தான்! மலேஷியா போனப்புறம் உன் நினைவுகள் என்னை அதிகமா பாதிச்சிது! உன்னால ஏனா ரொம்ப ஈர்க்கப்பட்டேன்.... புரியாத ஒருவித ஏக்கம் வந்தப்ப,

எனக்கே அது பெரிய புதிர்தான்!

''அதனாலதான் அந்த கிஃப்ட் வாங்கி அனுப்பி வச்சேன்! ஆனா அதுக்கு நீ எனக்கு ஒரு தேங்க்ஸ் கூட சொல்லலை! நீ ரொம்ப அமைதிதான்.... ஆனா உன் அழகுதான் சரியான அடங்காப்பிடாரின்னு நினைக்கிறேன்! அதான் என்னை ரொம்ப மாத்த ஆரம்பிச்சிது!''

குறும்புடன் கூறிவிட்டு செல்லமாக ஒற்றை விரலால் அவளுடைய இதழ்களைச் சுண்டினான் யுவன்!

''ம்.... நீங்களும்தான் உங்க மனசை என்கிட்டே வெளிக்காட்டவே இல்லை....'' சலுகையாகக் கூறியபடி அவன் கைப்பிடித்தவளை, தாபத்துடன் இழுத்து அணைத்தபடிப் பேச ஆரம்பித்தான் யுவன்!

''ம்.... ஐ ஹேட் யூ''ன்னு மனசை சொல்றதாம்.... ம்?''

ஒற்றைப் புருவம் உயர்த்த அவன் கேட்க, ''சாரி.... ஆனா நீங்களும்தான் என்னைப் பிடிக்காம? பெரியவங்களுக்காக சரி சொன்ன மாதிரி நடந்துக்கிட்டீங்க! நான் ரொம்ப வேதனைப்பட்டேன் தெரியுமா? நம்மை நமக்காக விரும்பாம மத்தவங்களுக்காக, குடும்ப நன்மைக்காக, ஒரு கட்டாயத்துக்காக ஏத்துக்கறீங்களோன்னு கோபப்பட்டேன்!''

''நாம ரெண்டுபேருமே நமக்கு தடையா இருந்த பகிர்ந்து இருந்திருக்கலாம்.... ப்ச்... அப்படி இருந்தா'' நீண்ட பெருமூச்சுடன் நிறுத்தினாள் அவள்!

''ம்.... பேசியிருந்தா, இந்நேரம் நீயும் இந்துமாதிரி இருந்திருப்பே.... இல்லை?'' குறும்புடன் சீண்டியபடி அவளுடைய இதழ்களைத் தன் வசமாக்கிவனை அந்த உள்ளம் கவர்கள்வனை தன் உயிரில் புதைந்த உறவாய் ஏற்றுக் கொண்டது அந்தப் பெண்மை!

அந்த இதழ்களில் தேன் பருகிய வண்ணத்துப் பூச்சி உதடுகள்.... முரட்டுத்தனமாய் அவள் சங்குக் கழுத்தில் பதிய, அதுவரை உள்ளே புதைந்திருந்த நேசம் வன்மையாய் வெளியேற, அந்த புழுங்கிக் கொண்டிருந்த மரங்கள், மெலிதாய்த் தலையசைக்க ஆரம்பித்தன!

இருட்டத் தொடங்கியிருந்த அந்த மாலைப் பொழுதில் வெளிறித் தெரிந்த.... பல விண்மீன்கள் தமக்குத் தெரிந்த ரகசியத்தை நிலவுக்கு உரைக்க...

(முற்றும்)





டிசம்பர் மாதம் குக்கர்பெறும் அதிர்ஷ்டசாலிகள்

- ஸ்வேதா கணேசன், ரெங்கநகர், திருச்சி-21
- டி.தீபிகா, திருவேற்காடு, சென்னை-77
- சாரதா ராஜகோபால், நேருள் கிழக்கு, நவிமும்பை-400 706
- எஸ்.சரோஜா, சுந்தராம்பாள் நகர், வேலாயுதம் பாளையம்.
- எஸ்.அனன்யா, செகந்திராபாத், கரூர் மாவட்டம்.

போட்டியில் ஆர்வத்தோடு பங்கேற்ற அனைத்து வாசகர்களுக்கும் மிக்க நன்றி.
பரிசு பெறுபவர்கள் அனைவருக்கும் பரிசு வெல்ல வாழ்த்துக்கள்.

இதயநிலா இல்லம் தேடிவரும் பரிசு

5 வாசகர்களுக்கு குக்கர்கள்



கீழே உள்ள பரிசு கூப்பனை வெட்டி எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். 5 அதிர்ஷ்டசாலி வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசு குக்கர் அனுப்பி வைக்கப்படும். கூப்பன் கிடைக்க கடைசி தேதி 20-01-2012

## குக்கர் பரிசு கூப்பன் 18

பெயர்: ____________________

____________________

____________________

தொடர்பு எண்: ____________ கையொப்பம்

**இதயம் மீடியா**
எண். 12 முதல் தளம், அண்ணாநகர் பிளாஸா,
சி-47, 2 அவென்யூ, அண்ணாநகர், சென்னை - 600 040
கைபேசி: 9551296661, 9551286664, 9444012434, idhayammedia@gmail.com

owned and published by K.NAGARAJAN from 9, sree krishna flats 21/14 vijayalaxmi street Mahalingapuram, Chennai-34 and Printed by S.Ashok Ravi at Leo Offsets, No 10, Kumbalamman Koil Street, Tondiarpet, Chennai-81, Editor: K.Nagarajan